விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 040 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 20, செவ்வாய்க்கிழமை 05.01.2016

29°c - 26°c
தெளிவான வானம்

**கழிவு ஒயில் பாதித்த பகுதியில் தன்னீர் விநியோகம் சீரில்லை**

குற்றஞ்சாட்டுகின்றனர் பொதுமக்கள்; மறுக்கின்றது பிரதேச சபை

பக். 02

## நியாயமான - நிலையான தீர்வு தமிழ் மக்களுக்கு மிக அவசியம்

### றொனி பிளேயரிடம் வலியுறுத்தினார் சம்பந்தன்

கொழும்பு, ஜன. 5
இலங்கையில் நியாயமான - நிலையான அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் பிரிட்டன் முன்னாள் பிரதமர் றொனி பிளேயருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
இலங்கைக்கு வருகை தந்துள்ள பிரிட்டன் முன்னாள் பிரதமர் றொனி பிளேயர், எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில், பக். 22



## விசேட அதிரடிப் படைக்கு நாவற்குழியில் 5 ஏக்கர் காணி

### ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய வழங்கியது வீடமைப்பு அதிகார சபை

யாழ்ப்பாணம், ஜன. 5
ஜனாதிபதி மைத்திரிபாலவின் பணிப்புக்கு அமைய விசேட அதிரடிப் படையினருக்கு நாவற்குழியில் 5 ஏக்கர் காணி தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் வழங்கப்பட்டுள்ளது.
நாவற்குழி 300 வீட்டுத்திட்டக் குடியிருப்புக்கு அருகில், கடலேரியை அண்டிய பகுதியில் விசேட அதிரடிப் படையினருக்கான முகாம் அமைக்கும் பணிகள் பக். 06

## இரட்டையர்களுக்கு ஒரே பெறுபேறுகள்

### உயர்தரப் பரீட்சையில்

யாழ்ப்பாணம், ஜன. 5
யாழ்ப்பாணத்தில் உள்ள இரட்டைச் சகோதரர்கள் உயர்தரப் பரீட்சையில் ஒரே பெறுபேறுகளைப் பெற்று ஊரவர்களின் கவனத்தைத் தங்கள் பக்கம் ஈர்த்துள்ளனர்.
யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களான பக். 22



# சகல உரிமைகளும் தமிழ் மக்களுக்கு

### வடமாகாண மக்களின் காணிகளும் மீளளிக்கப்படும் என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஜனவரி 5
வடக்கு மக்களின் காணிகளை மீளப் பெற்றுக்கொடுத்து அவர்களை மீள்குடியேற்றவும், ஏனைய பகுதிகளிலுள்ள மக்களைப் போல தமிழ் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாட்டில் சட்டம், ஒழுங்கை உறுதிப்படுத்தும் சமூக முறைமையை ஏற்படுத்துவதுடன், மூன்று ஆண்டுகளுக்குள் சிறந்த பொருளாதார சமூகத்தை உருவாக்கும் செயற்றிட்டத்தை முன்வைத்து, வரலாற்றில் பக். 22



## முல்லைத்தீவு - இந்திய மீனவர் நேற்றுக் கடலில் கைகலப்பு

### படகு, வலைகள் சேதமானதை அடுத்து

முல்லைத்தீவு, ஜன. 5
முல்லைத்தீவு மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையில் நேற்றுக் கடலில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.
இந்திய மீனவர்களின் ட்றோலர் படகினால் முல்லைத்தீவு தீர்த்தக்கரை மீனவரின் பக். 22

## நேற்று வந்தார் நவாஸ் ஷெரீப் இந்தியச் செயலரும் வருகிறார்



கொழும்பு, ஜன. 5
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், எதிர்வரும் 10 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எஸ்.ஜெய் பக். 22

## ஜெனிவா தீர்மானம் பற்றி ஆராய வந்தது ஐ.நா. குழு

கொழும்பு, ஜன. 5
ஜெனிவாத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பான நிலைமைகளை ஆராய்வதற்காக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சட்டத்துறை சார் குழுவொன்று கடந்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஜெனிவாத் தீர் பக். 06

## ஊஞ்சலின் கயிறு இறுக்கியதால் 12 வயது சிறுமி நெரியுண்டு சாவு

### வவுனியா கொக்குவெளியில் பரிதாபம்

கிளிநொச்சி, ஜன. 5
ஊஞ்சல் ஆடிக்கொண்டிருந்த 12 வயதுச் சிறுமி ஊஞ்சல் கயிறு இறுக்கியதால் நெரியுண்டு உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று வவுனியா கொக்குவெளியில் இடம்பெற்றுள்ளது. பக். 22

முச்சந்தி முரளி



அப்ப... சர்வதேசமே கொழும்பிலதான் எண்டு சொல்லுங்கோ

## நோர்வே அமைச்சரும் இலங்கைக்கு

கொழும்பு, ஜன. 5
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், பிரிட்டன் முன்னாள் பிரதமர் றொனி பிளேயர், பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹுயோ ஸுவைர், இந்திய பக். 06

## போர்க்குற்ற விவகாரத்தில் அவசரப்படாது இலங்கை

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 5
போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும், பக். 22



## விக்கி விடுத்த அழைப்பை நிராகரித்தார் சிவா பசுபதி

கொழும்பு, ஜன.5
அரசியல் தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையினால் நியமிக்கப்பட்ட உபகுழுவுக்குத் தனது பிரதிநிதியாக இணைந்துகொள்ளுமாறு வடக்கு முதலமைச்சர் விடுத்த அழைப்பை முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி நிராகரித்துவிட்டார்.
இவ்வாறு சிவா பசுபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்ததாக, இந்திய ஆங்கில ஊடகமான நியூ இந்தியன் எக்ஸ்பிறஸ் செய்தி வெளியிட்டுள்ளது.
அந்தச் செய்தி பக். 22



## கேப்பாப்பிலவுக் காணிகளை விடுவிக்குமாறு போராட்டம்

### இராணுவ முகாம் முன்பாகத் திரண்டனர் மக்கள்

முல்லைத்தீவு, ஜன. 5
இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பொது மக்களின் காணிகளை விடுவிக்குமாறு கோரி முல்லைத்தீவு கேப்பாப்பிலவுக் கிராம மக்கள் மற்றும் பொதுஅமைப்புகள் ஒன்றிணைந்து நேற்றுக் கவன வீர்ப்புப் போராட்டம் பக். 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கழிவு ஒயில் பாதித்த பகுதியில் தண்ணீர் விநியோகம் சீரில்லை

## குற்றஞ்சாட்டுகின்றனர் பொதுமக்கள்; மறுக்கின்றது பிரதேச சபை

யாழ்ப்பாணம்,ஜன. 5

கழிவு ஒயில் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் கடந்த சில தினங்களாக சீரற்றுக் காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆயினும் தாம் ஒழுங்காக - கிரமமான முறையிலேயே தண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றோம் என்று பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

சுன்னாகம் மின்நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டது என்று கூறப்படும் கழிவு ஒயில் நிலத்தின் கீழ் விடப்பட்டமையால் சுன்னாகம் - தெல்லிப்பழை உள்ளிட்ட பல்வேறு பரந்த பிரதேசங்களின் நிலத்தடி நீர் பாதிப்புக்கு உள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தமது கிணற்று நீரைப் பயன்படுத்த முடியாத நிலை அந்த மக்களுக்கு ஏற்பட்டது.

> பொதுமக்கள் தங்களது வீடு களுக்கே கொண்டு வந்து குடி தண்ணீர் தர வேண்டும் என்று எதிர் பார்க்கின்றனர்.

அதையடுத்து கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் சுத்தமான குடிதண்ணீரை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்பின்னர் அந்தப் பகுதிகளுக்கு சுத்தமான குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கழிவு ஒயில் பாதிப்பு உணரப்பட்ட பிரதேசங்களில் குடி தண்ணீர் தாங்கிகள் வைக்கப்பட்டு நீர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டது. சுன்னாகம் பிரதேசத்துக் குடிதண்ணீரில் கழிவு ஒயில் பாதிப்பு இல்லை என நிபுணர்குழுஅறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், இடர் முகாமைத்துவ அமைச்சு குடிதண்ணீர் விநியோகத்துக்கு வழங்கி வந்த நிதி ஒதுக்கீட்டை நிறுத்தியது.

குடிதண்ணீர் விநியோகத்தை தொடர்ந்து முன்னெடுக்குமாறு உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பணித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர், இதற்கான நிதி ஒதுக்கீட்டை உள்ளூராட்சி அமைச்சினூடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையிலேயே தற்போது சுன்னாகம் பிரதேசத்துக்கு கடந்த சில தினங்களாக குடிதண்ணீர் விநியோகம் சீராக மேற்கொள்ளப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுதலித்துள்ள சுன்னாகம் பிரதேச சபைச் செயலாளர், தாம் தொடர்ச்சியாக குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார். வேள்ட் விசன் நிதி உதவியில் மேற்கொள்ளப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டமே நிறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு நிறுத்தப்பட்ட பகுதிகளுக்கும் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் தங்களது வீடுகளுக்கே கொண்டு வந்து குடிதண்ணீர் தரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். சில ஒழுங்கைகள் ஊடாக எங்களது சபை தண்ணீர்பவுஸர்களைக் கொண்டு செல்வதற்கே சிரமமாக உள்ளது. இருப்பினும் பொதுமக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-ஐ-5-ரி5)

### காதலனால் தாக்கப்பட்ட காதலியின் தாய்

சாவகச்சேரி, ஜன.5

மகளைக் காதலித்தவரை, திருமண பந்தத்தில் இணையுமாறு யுவதியின் தாய் வற்புறுத்தியதால் ஆத்திரமுற்ற இளைஞன் அவரை மோசமாகத் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம் பெற்றது. தாக்குதலுக்கு இலக்கான 40வயதுப் பெண் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ந-ஐ-9)

### பளையில் கிரனேட்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.5

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் புதிதாக விடுவிக்கப்பட்ட பளை வீமன்காமம் வடக்கு பிரதேசத்திலிருந்து கிரனேட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

25 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பளை வீமன்காமம் வடக்குப் பகுதி கடந்த 30 ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை துப்புரவு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், பிளாட் ஒன்றின் கீழ் வைக்கப்பட்டிருந்த 4 கிரனேட்டுக்களைக் கண்டுபிடித்தார்.

அதையடுத்துகிராமசேவையாளர் ஊடாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு, இராணுவத்தினர் அவற்றைமீட்டுச்சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-ஐ-5)

## மனித பாவனைக்கு உதவாத தண்ணீர் போத்தல்கள் மீட்பு

சாவகச்சேரி,ஜன.5

பாவனைக்கு உதவாத 10 லீற்றர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் போத்தல்களும், காலாவதியான தேயிலைப் பைக்கற்றுக்களும் சாவகச்சேரி நகர் பொது சுகாதார பரிசோதகரால் நேற்றுக்கைப்பற்றப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பொலிஸார் தமது பாவனைக்கென கொள்வனவு செய்த தண்ணீர்போத்தலில்உள்ளதண்ணீரைப் பயன்படுத்திய போது அதனுள் தூசி போன்ற பொருள்கள் காணப்பட்டதை அடுத்து இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவித்தனர்.

சுகாதார வைத்திய அதிகாரியின் பணிப்பின் பேரில் குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தில் பரிசோதனை மேற்கொண்ட போது தூசிகளை உள்ளடக்கிய நிலையில், பத்துலீற்றர்கொள்ளளவு கொண்ட தண்ணீர் போத்தல்களைக் கைப்பற்றி அவரது அலுவலகத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

இதேவேளை - பொதுமக்களின் முறைப்பாட்டையடுத்து வர்த்தக நிலையமொன்றில் காணப்பட்ட பொதி செய்யப்பட்ட தேயிலைப் பைக்கற்றுக்களைப் பரிசோதனை செய்த போது பைக்கற் அட்டையில் அச்சுப்பதிக்கப்பட்ட, காலாவதி திகதியைமறைத்துவேறொரு லேபிள் ஒட்டப்பட்டிருந்த 40க்கும் மேற்பட்ட தேயிலைப் பைக்கற்றுக்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த இரு வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ஐ-9)

## தண்ணிமுறிப்பில் மீள்குடியமர விரும்புவோர் பதிவு செய்யலாம்

முல்லைத்தீவு, ஜன.5

முல்லைத்தீவு - குமுழமுனைக்கு அண்மையாகவுள்ள தண்ணிமுறிப் புக் கிராமத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களில், அங்கு மீள் குடியமர விரும்பும் குடும்பங்களை உடனடியாக முள்ளியவளையிலுள்ள வன்னிமேம்பாட்டுப்பேரவைஅலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் க.சிவநேசன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர் காரணமாக தண்ணிமுறிப்பு கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக் கள் அதன் அயல் கிராமங்களான குமுழமுனை, தண்ணீரூற்று, முள்ளியவளை போன்ற கிராமங்களில் வசிக்கின்றனர்.

இவர்கள் இடம்பெயர்ந்து நீண்ட காலமாகி விட்டதால் இவர்களில் சிலர் தம்மை தண்ணிமுறிப்பு கிராமத்தில் மீள் குடியமர்த் துவார்களா? என்னும் சந்தேகத்தில் தாம் தற்காலிகமாக வசித்த கிராமங்களில் சொந்தமாக சிறு சிறு நிலப்பரப்புக்களை கொள்வனவு செய்து தமக்கான வீட்டுத் திட்டங்களையும் பெற்று பிள்ளைகளின் கல்வி வசதிகளையும் கருத்திற் கொண்டு அந்தக் கிராமங்களில் வசித்து வருகின்றனர்.

இதற்கு முக்கிய காரணம் இந்தக் கிராமமானது இராணுவத்தினரால் நீண்ட காலமாக விடுவிக்கப்படாமையே ஆகும்.

தற்போது இந்தக் கிராமமானது முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களது நிலங்கள் பற்றைகள் வளர்ந்து காடுகளாக மாறியுள்ளது.

> இந்த மக்கள் தமது சொந்தக் கிராமத்தில் மீள் குடியேறுவதற்கு ஏதுவாக இராணுவத்தினர் தமது முகாமை பின் நகர்த்த வேண்டுமென வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களது காணிகளுக்கு அண்மையாக இராணுவத்தினர் முகாம் ஒன்றையும் அமைத்துள்ளனர்.

இதனாலேயே இவர்கள் அங்கு மீள் குடியேறி வசிப்பதற்கு அஞ்சுகின்றனர். எனவே, இந்த மக்கள் தமது சொந்தக் கிராமத்தில் மீள் குடியேறு வதற்கு ஏதுவாக இராணுவத்தினர் தமது முகாமை பின் நகர்த்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் மீள் குடியேறி வசிக்க விரும்பும் மக்களுக்கு புலம் பெயர் வாழ் மக்களின் நிதி அனுசரணையுடன் வன்னி மேம்பாட்டுப் பேரவை ஊடாக அவர்களது காணி களில் வளர்ந்துள்ள பற்றைக் காடுகள் கனரக வாகனங்கள் மூலம் தள்ளி துப்பரவு செய்து, இவர்களுக்கு அரை நிரந்தர வீடுகள் அமைத்து வழங்கப்படவுள்ளது.

அவர்களது பிள்ளை களுக்கு அங்கேயே கல்வி கற்பதற்கு விசேட கல்வி வசதிகளும் ஏற்படுத் திக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன் இந்தக் கிராமத்துக்கான போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்- என்றார். (ந-ஐ-102)

### மாணவருக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

சாவகச்சேரி,ஜன.5

சாவகச்சேரி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் கல்வி கற்கும் பிள்ளைகளைக்கொண்ட சங்க அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் சங்கத்தால் நடத்தப்படும் முன்பள்ளிகளுக்கும் அத்தியாவசிய கற்றல் உபகரணங்களை நேற்று முதல்வழங்கிவருகின்றனர்.

சங்க அங்கத்தவர்கள் 218 பேருக்கும், பணியாளர்கள் 50 பேருக்குமாக மொத்தம் 268 பேருக்கு இந்தக்கற்றல்உபகரணங்களை வழங்கப்படவுள்ளன என்று சங்கத் தலைவர் சி.பரராஜசிங்கம் தெரிவித்தார். (ஐ-9)

## சுப்பிரமணியம் பூங்கா விரைவில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்.நகரில் உள்ள சுப்பிரமணியம் பூங்கா விரைவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

மக்களைக் கவரும் வகையில் இந்தப் பூங்கா அழகுபடுத்தி மெருகூட்டப்பட்டு, சிறுவர்கள்விளையாடிமகிழ்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்படும் என மாநகர ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட இந்தப் பூங்கா குடாநாட்டு மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மீளவும் அபிவிருத்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதே சமயம் பூங்காவைப் பார்வையிட வருகை தரும் மக்களும் மற்றும் பொழுது போக்கைக் கழிக்க வருகை தருவோரின் எண்ணிக்கையும் கடந்த சில மாதங்களாக வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன.

இதன் காரணத்தால் மக்களைக் கவரும் வகையில் இந்தப்பூங்கா அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## 754 வர்த்தகர்ளுக்கு எதிராக கடந்த வருடத்தில் வழக்கு

யாழ்ப்பாணம், ஜன.5

2015ஆம்ஆண்டில்பாவனையாளர் அதிகார சபையின் சட்டங்களை மீறிய754வர்த்தகநிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 31லட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ் மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

ஜனவரி முதல் டிசெம்பர் மாதம் வரை 754 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவற்றுக்குத் தண்டப்பணமாக 31லட்சத்து 67ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட 754 வழக்குகளில்காலாவதியானபொருள்களை விற்பனைக்கு காட்சிப்படுத்திய குற்றத்துக்காக 397 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும், நுகர்வோரை ஏமாற்றியமை தொடர்பில் 41 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும், அதேவேளையில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத 226 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும், நிர்ணயவிலையைவிட அதிகவிலைக்கு விற்பனை செய்த குற்றத்துக்காக 61 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும், சுற்றுத் துண்டு இல்லாமை தொடர்பில் 14 வழக்குகள் உட்பட கடந்தஆண்டில்மொத்தமாக754 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-ஐ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமையல் ஆள் தேவை

ஹொட்டல் ஒன்றுக்கு சமையல் ஆள் உடனடியாகத் தேவை (சைவ/அசைவ)

தொடர்பு: 077 3398 728

## வரலாறு

A/L, O/L,10

பிரத்தியேக, குழு வகுப்புக்கள்

T.P: 071 406 9964

## வாடகைக்கு

நல்லூரில் முற்றிலும் பிரத்தியேகமான வீட்டின் பகுதி (தனியறை, இணைந்த குளியலறை, சமையலறை) வாடகைக்கு உண்டு. தளபாட வசதிகளும் உண்டு. 2பெண்கள் தங்கியிருக்கலாம்

தொடர்பு: 0714 620 806

## இறுதிச்சந்தர்ப்பம்

**CIMA-UK ENGINEERING-USA**
**BIT - University of Colombo**

புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 10 ஜனவரி. புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என்பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A.L 2015 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

## New Science World

NEW SCIENCE WORLD
Brown Road, Jaffna.

**2016 Day Classes**
(திங்கள் – வெள்ளி)

பௌதிகவியல் - R.குகன், R.குமரன்

இரசாயனவியல் - டயஸ், K.T. சிவகுமார்

உயிரியல் - S.பொன்திவாகரன், V. உமாசங்கர்

இணை.கணிதம் - S.S. செந்தில்றாஜ்

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.




## பிரித்தானிய உயர் தேசிய டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்புகள்




- BM — Business Management
- CSD — Computing & Systems Development
- CE — Civil Engineering
- QS — Quantity Surveying
- BMS — Biomedical Science
- LLB — Law

- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

PEARSON | UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

16, Point Pedro Road,
Jaffna, Sri Lanka.
Tel : 021 221 9910

For Details 077 710 2101

16 YEARS

Ranked as **No.1 Higher Education Provider** (Private Sector) - Survey by **LMD**

COLOMBO | MT.LAVINIA | KANDY | BATTICALOA | KURUNEGALA | JAFFNA | KALMUNAI | QATAR


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் பேரவையை ஓர் அரசியல் கட்சியாக்குக

## கோருகின்றார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், ஜன. 5

தமிழ் மக்கள் பேரவையை ஓர் அரசியல் கட்சியாக மாற்றி செயற்பட வேண்டுமென்று தெரிவித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி, சகல தமிழ் கட்சிகளையும் ஒன்றிணைத்து புதிய தலைமையை உருவாக்க எடுத்த எனது முயற்சியை சிலர் திட்டமிட்டு தோற்கடித்து விட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் பெரும் சாதனைகளைப் புரியலாமெனக் கருதி நான்கு கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தெரியாமலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஓரங்கட்டப்பட்டு எதுவித பொறுப்பும் வழங்கப்படாது ஒதுக்கப்பட்டிருந்தேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏகப் பிரதிநிதிகளாக காலத்துக் காலம் ஒரு கட்சி ஏனையவற்றை புறந்தள்ளி செயற்படுகின்றது. இதன் விளைவாக இன்று பெயரளவில் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்குகின்றதேயொழிய சில சந்தர்ப்பங்களில் ஒரு கட்சி மட்டும் தனியாகவும், வேறு சந்தர்ப்பத்தில் இரு கட்சித் தலைவர்கள் இணைந்தும், பெருமளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அணியின் தலைவர்கள் புறக்கணிக் கப்பட்டும் வந்துள்ளமையால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்டா இல்லையா? என்ற நிலைமைதான் இன்று ஏற்பட்டுள்ளது.

இந்தக் கட்டத்தில்தான் சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் இணைத்து ஒரு புதிய அணியை உருவாக்க உத்தேசித்து நல்லதொரு தலைமையைத் தேட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டிருந்தேன். சிலர் திட்டமிட்டு இந்த முயற்சியை தோல்வியடையச் செய்துள்ளனர். ஆனால் இன்றைய அவசர சூழ்நிலையை உணர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சரின் தலைமையில் ஒரு புதிய அணியை உருவாக்கும் முயற்சியின் முன்னோடியாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையைக் கூட விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தேன். முதலமைச்சர் மிக கண்ணியமான முறையில் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகட்டும் அதன்பின் தலைமை தாங்குவது பற்றிப் பரீசிலிக்கலாம் என்ற தொனியில் அறிக்கை விட்டிருந்தார்.

இந்த நேரத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரனை இணைத்துக் கொண்டு ஒரு சிலர் சேர்ந்து முதலமைச்சரை தலைவராக்கி தமிழ் மக்கள் பேரவையை எதுவித முன்னறிவித்தலும் இல்லாமல் ஆரம்பித்துள்ளனர். அது குறித்து பெரிதாக எதனையும் நான் நினைக்கவில்லை. ஒற்றுமைக்குக் கிடைத்தவொரு அருமையான வாய்ப்பை இழந்துவிட்டோம் என்றவொரு கவலை தான் எனக்கு. இவ்வாறு உருவாகவிருந்த அமைப்பு ஒரு புதிய அரசியல் அணியாக உருவாக்கப்பட்டிருப்பின் பொருத்தமானதாக அமைந்திருக்குமென எண்ணி மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கு தமிழ் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தையும் அவ்வமைப்பிலுள்ள கட்சிகளின் உறுப்பினர்கள் சிலருக்கு பெரும் அவமானத்தையும் தந்து கொண்டிருக்கின்றது. ஆகவே தமிழ் மக்கள் பேரவையின் முயற்சிக்கு நான் முட்டுக்கட்டை போடுவதாகத் தவறாக எண்ணாமல் எனது ஆலோசனையையும் கேட்டு இதை அரசியல் அணியாக மாற்று வார்களேயானால் எனது ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராகவே இருக்கின்றேன்.

தமிழ் மக்கள் பேரவை நல்லதொரு அரசியல் சாசனத்தை உருவாக்கித் தருவோம் என்கிறார்கள். ஆனால் உருவாக்கும் வரைவை ஏற்றுக்கொள்வார்களா? என்பது கேள்விக்குறியே. உத்தேச அரசியல் அமைப்புக்கு பலவிதமாக ஆலோசனைகள் பல கடந்த காலங்களில் முன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டுள்ளன. எது எப்படியிருப்பினும் இந்தவட்டத்துக்குள்ளே ஓட முடியுமே தவிர வேறு எந்தத் தீர்வையும் உள்ளே கொண்டுவர முடியாது.

இந்த விடயத்தில் முன்னைய 1970 ஆம், 72 ஆம் ஆண்டுகளில் செயற்பட்ட அரசியல் சாசன நிர்ணய சபையின் இரண்டு ஆண்டுகள் அனுபவத்தைக் அடிப்படையாகக் கொண்டு கூறுகின்றேன். பத்திரிகையொன்றில் சமஷ்டி அரசியல் முறைமையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று ஓர் அமைச்சரும், தீவிரமாக இயங்கும் ஒரு பௌத்த அமைப்பு கடைசிவரை தற்போதைய அரசியல் சாசனத்தை கைவிட அனுமதியோம் எனவும் கூறியுள்ளனர். இப்படி நாளுக்கு நாள் பல தரப்பட்ட அதிகாரப் பகிர்வை அனுமதிக்க மாட்டோம் என்று கூறுகின்ற பலம் மிக்க அமைச்சர்களையும் நாமறிவோம். எல்லாவற்றுக்கும் மேலாக புதிய அரசியல் சாசனத்தை மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகளால் நாடாளுமன்றத்திலும் பொதுசன வாக்கெடுப்பு மூலமும் அங்கீகாரம் பெற்றே நடைமுறைப்படுத்துவோம் என சில தலைவர்கள் கூறி வருகின்றனர்.

இது போன்ற பல விடயங்களை சீர்தூக்கிப் பார்ப்பின் இது நடக்கப் போகின்ற விடயமல்ல என்பது உறுதியாகின்றது. ஆகவே பிரச்சனை தீவிரமடையும் முன் பலரும் கூடி ஆலோசித்து நல்லதொரு முடிவை, தமிழ் மக்கள் பேரவையின் தீர்மானத்தின் மூலம் எடுக்க வேண்டும். அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை மூலமாகவேனும், தமிழ் மக்கள் பேரவையை ஓர் அரசியல் கட்சியாக மாற்றி செயற்பட வேண்டு மென்ற எனது தாழ்மையான கருத்தை முன்வைக்கின்றேன்.

பொருத்தமான மாற்றத்தை மேற்கொள்ளத் தவறின் அது புதியவொரு அரசியல் கட்சி உருவாவதற்கு வழிவகுக்கும் என்ற எனது ஐயத்தையும் வெளிப்படுத்துகிறேன் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-5)

## வடக்கு மாகாண சி.க.கூ. சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம்

637, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
04.01.2016

சம்மேளனத்தின் பின்வரும் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர் ஒருவரை நியமிப்பதற்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி – எழுதுனர் 302/11
சம்பள அளவுத்திட்டம் - 14945-145x10-160x10-17955
(13/2015ன்படி)

இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சுற்றுநிருபங்களுக்கு அமைவாக ஏனைய படிகளும் சம்மேளனத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பிரயாணப்படியும் வழங்கப்படும். தெரிவு செய்யப்படும் பணியாளர் வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் வேலை செய்யக்கூடியவராகவும், மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத்திட்ட கணக்குப் பதிவாளர் அல்லது எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 13ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் நிறுவன இடைநிலைப், பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் கணக்கு அலுவல்களுடன் தொடர்புடையதாக நான்கு(04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த.(உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் கணக்கு அலுவல்களுடன் தொடர்புடையதாக இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

பொதுவானவை

1. பிறப்புச் சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழ், தொழில் தகைமைச்சான்றிதழ் என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
2. கணினி அறிவும், ஆங்கில அறிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.
3. வயதெல்லை 18-45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது என்பதுடன் அவர்கள் கடமைபுரியும் சங்கத்தினூடாகத் தனது விண்ணப்பத்தினை அனுப்பிவைத்தல் வேண்டும்.

குறிப்பு:

1. விண்ணப்பதாரி வடக்கு மாகாண எல்லைப் பரப்புக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. 637, K.K.S. வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கும் யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்திலோ அல்லது மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இயங்கிவரும் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களிலோ பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து [illegible].01.2016ஆம் திகதி ந.ப.12.00மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக தலைவர், வடமாகா[illegible] சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம், 637, K.K.S. வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு [illegible] வைக்கவும்.

தலைவர்,
வடமாகாண சி.க.கூ.சம்மேளனம்.

## இலவச மருத்துவ முகாம்

மாங்குளம், ஜன. 5

அல்வாய் தெற்குகிராமஅபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு மற்றும் கண் பரிசோதனை போன்ற நோய்களுக் கான இலவச மருத்துவ முகாம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரைஅல்வாய் தெற்கு கிராம சேவையாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது. யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து மருத்துவர்கள் வருகை தரவுள்ளதால் மக்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-422)

வேலையாள் தேவை
தொடர்பு: 077 668 1670
திருநெல்வேலியில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கணினி துறையில் அனுபவமுள்ள இயக்குனர் தேவை. ஆண்/பெண் இருபாலாரிடையும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்.
(67349) (14,16)

நாய்க்குட்டி விற்பனை
தொடர்பு: 077 300 1763 077 758 5412
கொக்கஸ் பனியன் (கறுப்பு) இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
(67348)(11,16,18)

தாசன் பாம்
தொடர்பு 077 312 7498
ஊர்க்கோழி, கல்பேட், வான்கோழி. அனைத்தும் கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.
இல. 158/2 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

வேலையாள்கள் தேவை
தொடர்பு: 077 346 7499
Type setting, Page Design தெரிந்த பெண்கள், பழகவிரும்புபவர்கள் தேவை.
(67344) (14,16)

மணமக்கள்
எங்களிடம் டாக்டர். இஞ்சினியர். விரிவுரையாளர். எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் இத்துடன் அரச தனியார் துறை சார்ந்த பட்டதாரி உத்தியோகத்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் இத்துடன் வெளிநாட்டு ஆண்/ பெண் மணமக்கள் இருக்கின்றனர்.
தொடர்பு
சூரியன் திருமணசேவை
No:- 561, K.K.S வீதி.
மனோகராச் சந்தி. யாழ்ப்பாணம்.

சட்டமாணி அனுமதிப் பரீட்சை 2016
(திறந்த பல்கலைக்கழகம்)
பரீட்சையில் உயர்புள்ளி பெறுவதற்கான Paper class (அனுமதி மட்டுப்படுத்தப்பட்டது)
அடுத்த வகுப்பு: 09.01.2016 – 3 Pm
D.C. M சென்ரர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகில் யாழ்ப்பாணம்.
T.P: 077 982 4284

பெயர் மாற்றம்
4 ஆம் வட்டாரம், கோம்பாவில் புதுக்குடியிருப்பு என்னும் முகவரி கொண்ட நான் எனது முதற் பெயராகிய சிதம்பரப்பிள்ளை யோகலட்சுமி என்பதனை இன்றிலிருந்து தியாகலட்சுமி என்று மாற்றிக் கொள்கிறேன்.
தியாகலட்சுமி

CHEMISTRY GROUP CLASS
55,Kaladdy, Amman Road, Jaffna.
A\L தமிழ் மொழி மூலம்
2018 English Medium
ஆரம்பம்: 06.01.2016
புதன்கிழமை 4.30Pm
A/L 2016, 2017 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
By: A.Thabesan (B.Sc)
T.P.No: 077 308 6784

பொருளியற் கல்லூரி
இரு இடத்திலும்
கலை, வர்த்தக துறையில் அதிதிறமைச்சித்தி பெற்ற 3A மாணவர்களையும் ஏனைய சிறப்புதேர்ச்சி பெற்ற மாணவர்களையும் வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றோம்
A/L Day Class
கலை, வர்த்தகப்பிரிவு
யாழ்நகரில்
ஆரம்பம்: 06.01.2016 (புதன்)
வர்த்தகப்பிரிவு - 7.00am கலைப்பிரிவு - 8.00am
இணுவிலில்
ஆரம்பம்: 11.01.2016 (திங்கள்)
8.00am
Note: (c 28264) (14,16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015ஆம் ஆண்டுக்கான ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

நேற்று முன்தினம் வெளியான உயர் தரப் பரீட்சை முடிவுகளில் பாட சாலைகள் ரீதியாக எமக்குக் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள்.

## யாழ்.இந்துக் கல்லூரி

**கணிதத்துறை**
என்.சுதர்சனன்3ஏ, ஆர்.சிவேஸ்வரன்3ஏ, எஸ்.லவனராஜ்3ஏ, ரி.நிறோஜன்3ஏ, வி.சஜீவன்3ஏ, ஏ.கிருஷிகன்3ஏ, பி.தினேசன்3ஏ, ரி.நினுஜன்3ஏ, எஸ்.சர்வக்ஞன்3ஏ, எஸ்.நிறோஜிதன்3ஏ, பி.ஹஜமுகன்3ஏ, எஸ்.அனுராம்3ஏ, கே.நிஷாகரன்3ஏ, எஸ்.சபேசன்3ஏ, என்.சுமன்3ஏ, எம்.சிந்துசன்3ஏ, பி.மணிகாந்த்3ஏ, வி.கஜகரன்3ஏ, கே.விவேக்வினுசாந்த்2ஏ,பி, எம்.புவீந்திரன்2ஏ,பி, ரி.சோபிதன்2ஏ,பி, எஸ்.கரிவர்தன்2ஏ,பி, என்.பாலகுமார்2ஏ,பி, ஆர்.மதனராஜ்2ஏ,பி, எஸ்.அனோஜன்ஏ,2பி, எஸ்.சாரங்கன்ஏ,2பி, எம்.ஜேசுரன்ஏ,2பி.

**விஞ்ஞானத்துறை**
ஏ.ஹரிசங்கர்3ஏ, எஸ்.வித்யாசாகர்3ஏ, ஆர்.சுதர்சன்3ஏ, ஆர்.பானுவரன்3ஏ, ஆர்.மயூரதன்3ஏ, வி.கோகுலன்3ஏ, எம்.அனுஜன்2ஏ,பி, எஸ்.அரவிந்தன்2ஏ,பி, கே.கோபிசாந்த்2ஏ,பி, கே.பிரியதர்சன்ஏ,2பி

**தொழில்நுட்பத்துறை**
எஸ்.சஞ்ஜீவன்ஏ,பி,சி, ஏ.ஜிந்துசன்ஏ,பி,சி, ஆர்.விதுசன்பி,2சி, வி.குகனன்ஏ,2சி

**வர்த்தகத்துறை**
ரி.தினேஸ்3ஏ, கே.கௌதமன்3ஏ, எஸ்.கபிலன்3ஏ

**கலைத்துறை**
எஸ்.சீந்தன்3ஏ

**விஞ்ஞானத்தொழில்நுட்பத்துறை**
பி.ஞானகீதன்3ஏ

## யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி

**கணிதப் பிரிவு**
எப்.ஆர்.ஜே.புலேந்திரன் தனுன் - 3ஏ.

**உயிரியல் பிரிவு**
ஜே.கே.ஹயசிந் ஹிரன்; - 3ஏ, எஸ்.தேவதர்ன் - ஏ,2பி, ஏ.தேனுசன் - ஏ,பி,சி.

**வர்த்தகப் பிரிவு**
ஏ.அருண் ஜெனுாசன் - 3ஏ, யூ.போறிஸ் ஜெல்ட்சின் - 3ஏ,
எஸ்.சுஜந்திரன் - 3ஏ, ரி.ஸ்ரீப் டினுாசன் - 2ஏ,பி, ஏ.பி.அனோஜன் - 2ஏ,பி, ஏ.பி.அர்ஜன் - 2ஏ,பி, சி.அல்குபோனஸ் - 2ஏ,சி, ஏ.பிரசன்னா ஏ,பி,சி.

**கலைப் பிரிவு**
பி.டினுசன் - 2ஏ,பி, வி.அமல பானுசன் - 2ஏ,சி, எஸ்.அகிலன் - 2ஏ,சி, எஸ்.ஏ.சந்தோஸ் - ஏ,2பி, பி.ஜூலியன் - ஏ,2சி, ஏ.கொன்ஸியஸ் - ஏ,2சி, ஏ.தவகுமார் - ஏ,2சி, ஆர்.லக்ஷன் - ஏ,2சி, ஏ.றொஹான் டியோனி ஏ,பி,சி, ஏ.சிறோன் கிஷாந் - ஏ,பி,சி.

## கொக்குவில் இந்துக் கல்லூரி

**வர்த்தகப் பிரிவு**
எம்.லஜீவன் - 3ஏ, ரி. துஸ்யந்தன் - 3ஏ, எம். சாரங்கன் - 3ஏ, ஆர்.கிருசானி - 3ஏ, என். செந்துாரன் - 3ஏ, கே. மதீசன் - 3ஏ, என். அபிராமி - 3ஏ, கே. உசாந்தி - 3ஏ, எஸ். சோபனா - 2ஏ பி, பி.ஹரிகரசர்மா - 2ஏ,பி, ரி.ஜினோசன் - 2ஏ,பி, கே. மதிவதனி - 2ஏ,பி, எஸ். சுருதிகா ஏ,2பி, ரி. சஜிகாந் - ஏ,2பி, பி.சனுசன் - ஏ,2பி, ஏ.அரவிந்தன் - ஏ,2பி, எம். திவாகரன் - 3பி, ஆர். பிரசாந்தன் - ஏ,2பி.

**கணிதப் பிரிவு**
எஸ். தனுசன் - 3ஏ, கே. சதுர்சன் - 3ஏ, எஸ். சாருஜன் - 3ஏ, எம். நிரோசன் - 3ஏ, ரி. அபிராமி - 2ஏ,பி, பி. மதுசன் - ஏ,2பி, ரி. மதுரன் - 2ஏ,சி, எஸ். மாதங்கி ஏ,2பி, என். சிவகஜன் -ஏ,2பி, எஸ். சஞ்சய்க்குமார் - 3பி, பி. பாலஜீவன் - ஏ,பி,சி, கே. தர்சன் - ஏ,பி,சி, கே. சசிதரன் - பி,2சி, எஸ். சிறிதர்சன் - ஏ,2சி, ரி. சிஹிசஸ்வதனன் - பி,2சி, ரி. தரணி பி,2சி, கே. கஜானன் - 2பி,சி, எஸ். லக்ஷிகா ஏ,2சி, ஆர். நிருஜன் - 3சி, ரி.திவாசன் - பி,2சி, கே. அபிராம் - பி,2சி, எல். சுபஜனனி - 2பி,எஸ், எஸ். லேபிரணவன் - 3சி, எல். மிளிரன் - 3சி, பி. சங்கீதன் - பி,சி,எஸ்.

**கலைப் பிரிவு**
ஜெ. ரதீபன் - 2ஏ,பி, ஆர். நிரோஜன் - 2ஏ,பி, என். சுபாங்கி - 2ஏ,பி, எம். அனோஜா பி,சி,எஸ், பி. விஷ் ணுஜன் - 3ஏ, ஜி. ஜனனி - 2ஏ,பி, எஸ். ஜனனி - 2ஏ,சி, எம். மகிந்தா ஏ,பி,சி, ஆர். கலையமுதன் - ஏ,2பி, எல். துர்க்கா ஏ,பி,சி, ரி. தனுஸ்டன் - 2ஏ,பி, ஏ. தனுஸ்டா - 2ஏ,பி, ஜி. சாரங்கி - 2பி,சி.

**உயிரியல் பிரிவு**
இ.சாலுஜா - 2ஏ,சி, ஜெ.வினுசா ஏ,2பி, வி. தட்ஷாயினி - ஏ 2பி, பி. அபிராமி ஏ,2பி, பி. பாலஜீவன் - ஏ,பி,சி, ஜி. தனுசன் - பி,சி,எஸ், எஸ். சிசுதன் - 3சி, எல். வேணிகா ஏ,பி,சி,
கே. ஐஸ்மிதா ஏ,2சி.

## வடமராட்சி இந்துக் கல்லூரி

**உயிரியில் பிரிவு**
சி.சிவதர்சிகா - 2ஏ,பி, க.ரூபினி ஏ,2சி, மு. வெண்ணிலா - 2பி,சி, கு. ரஜிலதா - 2சி,எஸ், ச.டிலோஜி - 2சி,எஸ்.

**கணிதப் பிரிவு**
ர. சுரேகா பி,2சி, சி.கோகிலா பி,2சி, பி. சர்மிலா - 2பி,சி, கு. அர்ச்சனா - 2பி,சி, கா. கீர்த்தனா - 2பி,சி, வீ. கஜிதா - 3சி.

**வர்த்தகப் பிரிவு**
ம. காயத்திரி - 3ஏ, ம. இந்துஜா - 3ஏ, ப. பிரேமிகா - 2ஏ,பி, தே. கோமகள் - 3ஏ, ரா. நிஜந்தி - 2ஏ,பி, சி. பாரதி ஏ,2பி, ஜெ. பிரியந்தி - 3பி.

**கலைப் பிரிவு**
அ. லக்ஷனா - 2ஏ,பி, க. விதுர்சா - 2ஏ,பி, சி. தர்மினி ஏ,2பி, அ. மேரிலக்சிகா - 2ஏ,சி, ரா. வித்தியா ஏ,பி,சி.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*எமது நிலையத்தின் மிருதங்க ஆசான்*



நாதலயமணி, லயநாதஜோதி, மிருதங்கக் கலைவாருதி, தண்ணுமைவேந்தன், கலாபூஷணம், சங்கீதரத்தினம்

**திரு.மா.சிதம்பரநாதன்**

(முந்நாள் இசைத்துறை விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்களின் பிரான்ஸ் நாட்டிற்க்கான கலைப்பயணத்தில், பிரான்ஸ் வெடியரசன் நற்பணி மன்றத்தினால்.

**'முழவியல்ஞாயிறு'**

விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சக்தி** கல்வி மேம்பாட்டு நிலைய சமூகம் காரைநகர். 021 490 4447



**யா**ழ் மருத்துவபீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையானது உடல் ஆரோக்கிய மேம்பாட்டுக்கான சத்துள்ள உணவு வகைகளைக் கண்டறியும் ஆராய்ச்சியை ஆரம்பித்துள்ளது. நாம் நிறை அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய. உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கின்ற உணவு வகைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளோம். எனவே சுவையாக போசணை மிக்க புதிய உணவு வகைகளைக் கண்டறிய வேண்டியுள்ளது. இதற்கு சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையானது பொதுமக்களின் ஆதரவை நாடி நிற்கின்றது. சமையல் நிபுணர்களே! சமையற்கலை ஆர்வலர்களே! இதுவரை காலமும் சந்தையில் பழக்கத்தில் இல்லாத சுவையான. போசணை மிக்க புதிய உணவுவகைகளைக் கண்டறியும் ஆராய்ச்சியை உங்கள் சமையலறையில் இன்றே ஆரம்பியுங்கள். வரும் ஒரு மாத காலத்திற்குள் அவ்வாறான உணவு ஒன்றை நீங்கள் கண்டு பிடிக்கும் பட்சத்தில் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். நாங்கள் நடத்தவுள்ள மாபெரும் சமையல் போட்டியில் கலந்துகொள்ளுங்கள். நீங்களும் வெற்றியாளராக இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்.

**போட்டி விதிமுறைகள்**
இந்த சமையற்போட்டியில் பின்வரும் வகைகளில் உணவுகள் தயாரிக்கப்படவுள்ளன.
1. புதிய வகையான பிரதான உணவு (சைவம் / அசைவம்)
2. புதிய வகையான சைவசிற்றுண்டி உணவுகள்
3. புதிய வகையான அசைவ சிற்றுண்டி உணவுகள்.
4. புதிய வகையிலான பானங்கள
5. புதிய வகையிலான ஐஸ்கிறீம்
6. புதிய வகையான கேக்

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். மொத்தமாக **105000/=** பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் 5 இடங்களைப் பெறும் சமையல் குறிப்புக்கள் புத்தகமாக அச்சிட்டு வெளியிடப்படும்.

**வெற்றியாளரைத் தெரிவு செய்தல்**
புள்ளி வழங்குதலில் மத்தியஸ்தர்கள் பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்வர்
✔ உணவின் சுவை
✔ உணவின் தோற்றம்
✔ போசணைப் பெறுமானம்(குறைந்தளவு மாப்பொருள் அதிகளவு புரதம் அதிகளவு நார்ப்பொருள் அதிகளவு விற்றமின்கள்)
✔ மலிவு விலை
✔ தயாரிக்கும் பொருள்களின் இலகுவில் கிடைக்கும் தன்மைக்கு
✔ இலகுவான செய்முறை

1. புதிய வகையான சைவ/ அசைவ பிரதான உணவு மற்றும் சிற்றுண்டிகளுக்கான போட்டி விதிமுறைகளாவன

**தாராளமாக சேர்க்கக்கூடியவை**
1. பருப்பு வகைகள்
2. அவரை இனங்கள்- பயறு. கௌபி. உளுந்து
3. சகல வகையான மரக்கறிகள்- மரவள்ளிக் கிழங்கு தவிர்ந்த கிழங்கு வகைகள்
4. இலை வகைகள் யாவும்
5. பழங்கள்(பலாப்பழம். மாம்பழம். பேரீசம்பழம் நீங்கலாக ஏனையவை)
6. சோயா மீற்
✔ சோயா அவரை ✔ தயிர் ✔ பன்னீர்
✔ முட்டை ✔ கோழி இறைச்சி ✔ மீன்

# மாபெரும் சமையல் போட்டி



✔ இறால் ✔ சுறா ✔ கருவாடு
✔ கடுகு ✔ மிளகு ✔ சீரகம்
✔ வெந்தயம் ✔ ஏலக்காய் ✔ கராம்பு
✔ கறிவேப்பிலை ✔ உள்ளி ✔ வெங்காயம்
✔ மிளகாய் ✔ மிளகாய்த்தூள் புளி
✔ எலுமிச்சைப் பழச்சாறு

**தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்தக் கூடியவை**
✔ அரிசிமா ✔ ஆட்டமா ✔ குரக்கன்மா
✔ கோதுமைமா ✔ சீனி ✔ ரவை
✔ சவ்வரிசி ✔ நூடில்ஸ் ✔ கச்சான்
✔ கஜு ✔ ரின்பால் ✔ செயற்கைச்சுவையூட்டிகள்

**மிகச் சிறியளவில் சேர்க்க வேண்டியவை**
✔ நல்லெண்ணெய் ✔ சூரியகாந்தி எண்ணெய்
✔ தவிட்டு எண்ணெய் ✔ Canola oil
✔ Olive oil ✔ தேங்காய்ப்பூ

**முற்றாகத் தவிர்க்க வேண்டியவை**
✔ சர்க்கரை ✔ பனங்கட்டி
✔ நண்டு ✔ கணவாய்
✔ பட்டர் ✔ மாஜரீன்
✔ நெய் ✔ சீஸ்

**2. பானங்கள்**
**பான வகைகளுக்கான போட்டி விதிமுறைகள்**
இதற்காக நீங்கள் எந்த விதமான பழவகைகளையும் பயன்படுத்தலாம். ஆனால் குறைந்த விலை மற்றும் எளிதாக பெறக்கூடிய உடல் எடை அதிகரிப்பினை ஏற்படுத்தாத கலோரி குறைவான பழவகைகளை பயன்படுத்தும் பானங்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.
மேலும் அனுமதிக்கப்பட்ட நிறமூட்டிகளையும் சுவையூட்டிகளையும் பயன்படுத்த முடியும்.
சீனி சேர்ப்பதை தவிர்ப்பது நல்லது. அதற்குப் பதிலாக சீனி அற்ற இனிப்பு சுவையூட்டிகளை சேர்க்க முடியும்.
மற்றும் ஒரு பகிர்வுக்குரிய செலவு குறைவாக உள்ள பானத்துக்கு அதிக புள்ளிகள் வழங்கப்படும்.
மேலும் புள்ளியிடலில் சுவை. கலோரி பெறுமானம் சாதாரண பானங்களை விட குறைவாக இருத்தல் கவர்ச்சித்தன்மை இலகு செய்முறை, செலவு என்பனவும் கருத்தில் கொள்ளப்படும்.

**ஐஸ்கிறிம் வகைகளுக்கான போட்டி விதிமுறைகள்**
இதற்காக நீங்கள் எந்த விதமான பால் வகைகளையும் பயன்படுத்தலாம். ஆனால் கொழுப்பு குறைக்கப்பட்ட பால் வகைகளை பயன்படுத்துதல் வரவேற்கத்தக்கது. அத்துடன் பாதாம் கஜு. கச்சான் போன்ற தானிய வகைகளையும் பழ வகைகளையும் சேர்த்து பரிமாறுவதற்கும் அனுமதி உண்டு. இவ்வாறான சத்துள்ள தானிய வகைகள், பழங்கள் சேர்க்கும் போட்டியாளருக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.
மேலும் அனுமதிக்கப்பட்ட நிறமூட்டிகளையும் சுவையூட்டிகளையும் பயன்படுத்த முடியும்.
அதிகளவான சீனி சேர்ப்பதை தவிர்ப்பது நல்லது. அதற்குப் பதிலாக சீனி அற்ற இனிப்பு சுவையூட்டிகளை சேர்க்க முடியும்.
மற்றும் ஒரு பகிர்வுக்குரிய செலவு குறைவாக உள்ள ஐஸ்கிறிமிற்கு அதிக புள்ளிகள் வழங்கப்படும்.
மேலும் புள்ளியிடலில் சுவை. கலோரி பெறுமானம் சாதாரண பானங்களை விட குறைவாக இருத்தல் கவர்ச்சித்தன்மை இலகு செய்முறை. செலவு என்பனவும் கருத்தில் கொள்ளப்படும்.

**4. கேக் (சைவ மற்றும் அசைவகேக்)**
தாராளமாக சேர்க்கக்கூடியவை
✔ பழங்கள் (மாம்பழம் பேரீச்சம்பழம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில்)
✔ மரக்கறிகள்
✔ முட்டை
✔ எலுமிச்சை மற்றும் தோடம்பழச்சாறு

**மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயன்படுத்தக்கூடியவை**
✔ சீனி ✔ டின்பால் ✔ மா ✔ மாஜரீன் ✔ கஜு ✔ கச்சான்
1. உணவின் சுவை மற்றும் தரம் நன்றாக இருக்குமிடத்து
2. சீனி மாஜரின் போன்றவற்றை மிக குறைந்த அளவில் பயன்படுத்தும் போதும் கோதுமை மாவிற்குப் பதிலாக வேறு (ஆட்டாமா. குரக்கன்மா) ஆகியவற்றை பயன்படுத்தும் போது மாஜரினுக்கு பதிலாக வேறுபொருட்களை சேர்க்கும் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
3. கலோரி பெறுமானம் குறைவாக இருத்தல் வேண்டும்.

## போட்டியில் பங்குபெற

உங்களுடைய பெயர் முகவரி. தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு அத்துடன் நீங்கள் தயாரிக்கும் உணவு மேற்கூறப்பட்டுள்ள எந்த பிரிவைச் சேர்ந்தது அதற்கு நீங்கள் சூட்டியுள்ள பெயர், தேவையான பொருட்களின் பட்டியல் உணவு தயாரிப்பதற்கான செயன்முறை என்பவற்றையும் குறிப்பிட்டு உங்கள் கையொப்பம் என்பவற்றை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவம் ஒன்றைத் தயாரித்து ஜனவரி மாத இறுதிக்குள் எமக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி

தெரிவு செய்யப்பட்ட உணவு வகைகளுக்கான செயன்முறைப் போட்டி ஜனவரி மாத இறுதியில் நடத்தப்படும்.

**"சமையற்போட்டி"**
சமுதாய. குடும்ப மருத்துவத்துறை
மருத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

இது தொடர்பான சந்தேகங்கள் இருப்பின் 021- 221 8178 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் நீங்கள் அனுப்பும் விண்ணப்பப்படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு போட்டி தொடர்பான மேலதிக விபரங்கள் தங்களுக்கு அறியத்தரப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட்டது மருத்துவர்கள் சங்கம்

கொழும்பு, ஜன.5

அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது தமக்குச் சார்பான தீர்வுகள் கிடைக்கப் பெற்றதனால் தொழிற்சங்க நடவடிக்கைகளிலிருந்து விலகி அரசுக்கு கால அவகாசம் வழங்க அரச மருத்துவர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தமது கோரிக்கைகளை அரசு தொடர்ந்தும் நிறைவேற்றுகின்றதா என்பதை தாம் பொறுத்திருந்து பார்ப்பதாக அச்சங்கத்தின் செயலாளர் மருத்துவர் நவீந்த சொய்சா நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். (வ)


## கண்ணீர் அஞ்சலி



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

**நமசிவாயம் சிவானந்தன்**

(03.01.2016)

ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானதையிட்டு துயரடைவதுடன் எமது அன்பு அத்தையின்கணவரான சிவானந்தனின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராரத்திக் கின்றோம்.

மண்டைதீவு-06 — மருமக்கள்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 08 . 07 . 1943 — இறப்பு 05 . 01 . 2015

**அமரர் சிதம்பரப்பிள்ளை கனகசிங்கம்**

ஆண்டுகள் ஒன்று போனாலும் ஆறாது எம் துயரம்
என்றென்றும் உங்கள் நல்லாசி வேண்டி
ஆண்டவனைப் பிரார்த்தித்து தங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நொச்சிமோட்டை,
ஓமந்தை.

(67210) (14,15)

தகவல்: சி.மலர்மாலை
(மனைவி – ராணி)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**வைத்தி கணபதிப்பிள்ளை**

(மண்டை தீவு)



பிறப்பு
06.06.1929

இறப்பு
05.01.2013

மூச்சு போய் மூன்றாண்டுகள் ஆனதா - ஐயா?
இல்லை உம் முத்துச் சிரிப்பு தொலைந்து போனதா?
என்னவென்று விம்புவேன் உம் இழப்பை

ஆண்டுகள் கழிந்தாலும் அழியாத உம் நினைவுகள்
அணுவும் உம்மை நினைக்கச் செய்கிறது
வாழ்வாங்கு வாழவைத்தீர் ஓர் குடும்பச் சுடரை
அச்சுடர்தனில் வாழ்ந்து ஒளிபரப்பினீர்

காலத்தின் கட்டளையோ - ஐயா
இன்று நீர் கடவுளாகினீர்
அருகில் இருந்தும் பார்க்க முடியாமல் - நாம்
உமை அன்றாடம் துதிக்கின்றோம்.

என்றும் அழியா நினைவுகளோடு
உம் நினைவு நாளுக்கு எம் அளவில்லா அன்பை
மலர் சாந்தியாகச் செலுத்துகின்றோம்.

(67332)(1,16)

16, மடம் வீதி,யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.


## ஜெனிவா

மானத்துக்குப் பின்னர் முன் னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக இந்தக் குழு ஆராய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதன் மூலம் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்த இலங்கை அரசு, அந்த தீர்மானத்தை நடை முறைப்படுத்த மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக இந்தக் குழு அழுத்தங்களைக் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முக்கியமாகப் பொறுப்புக்கூறல் விவகாரம் சார்ந்து முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக அரச தரப்புடன் முக்கியமான பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதம் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரி மைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடரில், ஜெனிவா தீர்மானத்தை இலங்கை நடை முறைப் படுத்துகிறதா என்பது குறித்த வாய் மொழிஅறிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## நோர்வே

வெளிவிவகார அமைச்சின் செயலர் ஆகிய இராஜதந்திரிகள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் வரிசையில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் போர்ஜ் பிரென்டேயும் இணைந்து கொண்டுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் நாளை புதன் கிழமையுடன் தனது பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பவுள்ளார். இதன் பின்னர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் போர்ஜ் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக, வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நோர்வே வெளிவிவகார அமைச்சரின் இந்தப் பயணம், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுக ளில், சாதகமான முக்கிய திருப்பு முனையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிட்டத்தட்ட கடந்த பத்தாண்டுகளுக்குப் பின்னர், நோர்வேயின் உயர் மட்ட இராஜதந்திரி ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இது அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 . 06 . 1959 — உதிர்வு 28 . 12 . 2013

அமரர்

**முதலி மார்க்கண்டு**

திதி:அபரபக்க ஏகாதசி (05.01.2016)

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடனே பார்போற்ற வாழ்ந்து
உறவுகளுக்கு இன்ப நிழல் தந்த நீங்கள்
இறைவனடி சேர்ந்து ஆண்டுகள் இரண்டு
நெஞ்சிருக்கும் வரை நினைத்திருப்போம்.

விடத்தற்பளை வீதி,
உசன்,மிருசுவில்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

ஓம் விராட விஸ்வ பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 05 . 06 . 1936 — விண்ணில் 06 . 12 . 2015

**திருமதி நாகலெட்சுமி நமசிவாயம்**

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் பல அகன்றாலும்
ஆருயிர் அன்னையே...
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்...

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் **இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில்** (63,கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் துயரில் பங்கெடுத்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

57, [illegible]
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


## விசேட

சில நாள்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக தேசிய வீடமைப்பு அதிகார சபையினரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பைத் தொடர்ந்து, ஜனாதிபதியால் யாழ். மாவட்டத்தில் அதிரடிப்படை முகாம் அமைப்பதற்கான காணியை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவுறுத்தல்கள் எமது அமைச்சால் எமக்கு நேரடியாக வழங்கப்பட்டன. இதனையடுத்து நாவற்குழிப் பகுதியில் பொலிஸாரின் முகாம் அமைப்பதற்காக 5 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் நேரடியாக எமது தேசிய வீடமைப்பு அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்று கூறினர்.

நாவற்குழிப் பகுதியில் முன்னர் அமைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம் போன்று தற்போது இந்த அதிரடிப்படை முகாம் அமைப்பும் மக்களைக் குழப்பமடையச்செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மீனவர்கள் மீது இந்திய மீனவர்கள் தாக்குதல்

## இருவர் படுகாயம்; தீர்த்தக்கரை கடலில் சம்பவம்





முல்லைத்தீவு, ஜன.5
இந்திய மீனவர்களால் தாக்குதலுக்கு உள்ளான முல்லைத்தீவு தீர்த்தக்கரை மீனவர்கள் இருவர் காயங்களுடன் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்த சம்பவம் நேற்று முல்லைத்தீவு தீர்த்தக்கரை கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த அன்ரன் சேகர் ரஞ்சித்குமார், ம.அலெக்ஸ் ஆகிய மீனவர்களே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு தீர்த்தக்கரை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்படகையும், வலைகளையும் முற்றாகச்சேதப்படுத்திய இந்திய மீனவர்களைப் பிடிப்பதற்கு முயற்சித்தபோது கடற்பரப்பில் இடம்பெற்ற கைக்கலப்பின் போதே குறித்த மீனவர்கள் இருவரும் இந்திய மீனவர்களால் தாக்கப்பட்டுள்ளனர் என்று தீர்தக்கரை மீனவர்கள் தெரிவித்தனர்.
காயங்களுக்கு உள்ளான நிலையில் கரைக்கு வந்த குறித்த மீனவர்கள், அங்கு கரையில் நின்ற ஏனைய மீனவர்களால் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இது தொடர்பான விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொணடு வருகின்றனர். (ற-ஜ-21,ரி7,101)

### புத்தாண்டுத்தினத்தில் யாழ்ப்பாணத்தில் 10 குழந்தைகள் பிறப்பு

யாழ்ப்பாணம், ஜன.5
கடந்த புத்தாண்டுத்தினத்தன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதிகளில் பத்துப் பிரசவங்கள் இடம் பெற்றுள்ளன.
இந்தப் பத்துப் பிரசவங்களில் எட்டுப் பெண் குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்துள்ளன.
கடந்த புத்தாண்டுத்தினத்தில் இவ்வாறு வைத்தியசாலை மகப்பேற்று விடுதிகளில் குழந்தைகள் பிறந்ததையிட்டுப் பெற்றோர்கள்மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அங்கு இனிப்புப் பண்டங்களைப்பரிமாறினார்கள். (ற-ஜ-17)

### மணல் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.5
வீட்டுக்கட்டுமானவேலைகளுக்கு டிப்பர் ஒன்றின் மூலம் பறிக்கப்பட்ட மணல் அன்று இரவோடு இரவாக இனம் தெரியாத நபர்களால் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வரணி இடைக் குறிச்சிப்பிரதேசத்தில் கடந்த வாரம் இடம் பெற்றது.
இடைக்குறிச்சிப் பிரதேசத்தில் புதிதாக வீடு ஒன்றைக்கட்டும் நடவடிக்கை தொடர்பாக குடும் பஸ்தர் ஒருவர் டிப்பர் ஒன்றின் மூலம் மணல் பறிப்பித்துள்ளார்.அன்று நடுநிசி வேளையில் இனம் தெரியாத நபர்கள் குறித்த காணிக் குள் புகுந்து டிராக்டர் வாகனத்தில் குறித்த மணலை ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
இந்தச் செயற்பாடு களினால் சத்தம் கேட்டு அயலவர்கள்எழுந்து கலவரப்பட்டுக் கொண்டிருந்த சமயம், மணல் ஏற்றியவர்கள் ஏற்றிய மணலுடன் தப்பிச்சென்றுள்ளனர். (ற-ஜ-122)

# இந்திய மீனவரால் பாதிக்கப்பட்ட தீர்த்தக்கரை மீனவருக்கு நட்டஈடு

## முல்லை. அரச அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவு,ஜன.5
இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்ட தீர்த்தக்கரை மீனவர் தொடர்ந்து தனது தொழிலைமேற்கொள்வதற்கு அதற்கான நட்ட ஈடு வழங்கப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
முல்லைத்தீவு தீர்த்தக்கரை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களால் தீர்த்தகரை மீனவருடைய படகும், வலைகளும் முற்றாகச்சேதப்படுத்த பட்டன என்று இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போது அரச அதிபர் தெரிவித்தார்.இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
முல்லைத்தீவுக்கடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறுகின்றனர். அந்த மீனவர் களைக் கைது செய்யுமாறு முல்லைத்தீவு கடற்படையினருக்கு அரச அதிபர் என்ற வகையில் கட்டளைகள் இடமுடியாது. எமது மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற விடயத்தைத்தான் நான் கூறலாம். குறித்த இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்டார் என்று கூறப்படும் மீனவருக்கு அவர் தனது கடற்றொழிலை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு அதற்கான நட்ட ஈடுகள் வழங்கப்படும்,
இந்தநட்டஈடுஉடனடியாகவழங்கப்படமாட்டாது. அதற்கானநிதிதற்போது எம்மிடம் இல்லை. மாவட்டத்துக்கு வரும் நிதியில் முதல் உதவியாக குறித்த மீனவருக்கான நட்ட ஈடு வழங்கப்படும் என்றார்.
(ற-ஜ-21,ரி7).

# தொழிற் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

முல்லைத்தீவு,ஜன.5
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையால் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், தையல்,வெதுப்புநர்,அழகுக்கலையும் சிகை அலங்காரம், அலுமினியம் பொருத்துநர், கணினி வன்பொருள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் வாகனம் திருத்துநர் ஆகிய கற்கை நெறிகளுக்கே விண் ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்காலிகவேலை வாய்ப்பை மையமாகக் கொண்டு முழுநேரம் மற் றும் பகுதி நேரமாக இந்தக் கற் கை நெறிகள் முல்லைத்தீவு,ஒட்டுசுட்டான், பாலிநகர் ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
கற்கைநெறிகள் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்றும் கற்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், நீதிமன்ற வீதி, மாங்குளம் பிரதான வீதி, முல்லைத்தீவு அல்லது பாலிநகர் தொழிற் பயிற்சி நிலையம், மாந்தை கிழக்கு,முல்லைத்தீவு அல்லதுஒட்டுசுட்டான் தொழிற் பயிற்சி நிலையம், 14ஆம் கட்டை,மாங்குளம் வீதி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு எதிர்வரும் 11 ஆம் திகதிக்குமுன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு இலங் கைத் தொழிற்பயிற் சி அதிகாரசபையின் முல்லைத் தீவுமாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித் துள்ளார்.
(ற-ஜ-10)

# இ.போ.ச. பஸ் தாக்குதல் சம்பவங்களில் தனியார் பஸ்களுக்குத் தொடர்பில்லை

## யாழ். பஸ் கம்பனிகளின் இணையம் அறிக்கை

முல்லைத்தீவு, ஜன.5
இ.போ.ச.மீதான தாக்குதலுக்கும், தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்றபஸ்கம்பனிகளின் இணையம் தெரிவித்துள்ளது.
இந்த விடயம் தொடர்பில் இணையம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ;
வடக்கிலுள்ள இ.போ.சபைக்குச் சொந்தமான 57 பஸ்களைச் சேதப்படுத்தப்பட்ட சம்பவத்துக்கும் எங்களுக்கும் எந்தத்தொடர்பும் இல்லை.
சுமுகமான சேவையை மேற் கொள்வதற்கு ஒருங்கிணைந்த நேர அட்டவணையைத்தயாரிப்பதற்குயாழ்மாவட்ட அரச அதிபர் இரு தடவைகள் தனியார் மற்றும் வடமாகாண போக்குவரத்து சபையினருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

> “ உள்நாட்டுப் போர்ச் சூழலிலும் போரின் பின்பும் தனியார் போக்குவரத்து சேவையினரே மக்களுக்கு அளப்பெரும் சேவையை வழங்கியுள்ளனர் ”

இதன் போது தனியார் போக்குவரத்து சபையினர் சமுகமளித்த போதிலும் இலங்கை போக்குவரத்து சபையினர் இரு தடவைகளும் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தனர்.
இதனால் இணைந்த நேர அட்டவணையைத் தயாரிக்க முடியாததால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.
உள்நாட்டுப் போர்ச் சூழலிலும் போரின் பின்பும் தனியார் போக்குவரத்து சேவையினரே மக்களுக்கு அளப்பெரும் சேவையை வழங்கியுள்ளனர்.யாழ்ப்பாணத்தில்2003ஆம் ஆண்டுமுதல்தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வழித் தடங்கள் அனுமதிப் பத்திரத்துக்கமைவாகவும், நேரஅட்ட வணைக்கு அமையவும் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களுக்கு அமையவும் தனியார் போக்குவரத்து பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.
மேற்குறித்த தாக்குதல் சம்பவங்களுக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றுள்ளது.
(ற-ஜ-10)

# யாழ். மணிக்கூட்டுக்கோபுர கடிகாரம் மீண்டும் பழுது



யாழ்ப்பாணம், ஜன.5
யாழ்.நகரில் உள்ள மணிக்கூட்டுக்கோபுரத்தில் உள்ள கடிகாரம் மீண்டும் பழுதடைந்துள்ளது. இதனால் இந்தக்கடிகாரம் தற்போது பிழை யான நேரத்தைக்காட்டி வருகின்றது.
ஏற்கனவே பழுதடைந்த இந்தக் கடிகாரம் மாநகராட்சி மன்றத்தால் கடந்த நவம்பர் மாதத்தில் திருத்தியமைக்கப்பட்டது.
இந்தக் கடிகாரம் திருத்தியமைப்பதற்காக கொழும்பில் இருந்தே தொழில்நுட்ப வல்லுநர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர்.
எனினும் இரண்டு மாத காலத்திலேயே இந்தக் கடிகாரம் மீண்டும் பழுதடைந்துள்ளது.
(ற-ஜ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவர் இல்லாமல் தாதியுடன் யாழ்.வந்த நோயாளர் காவு வண்டி

கிளிநொச்சி, ஜன.5

நோயால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முதியவரொருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட போது, நோயாளர் காவு வண்டியில் மருத்துவர் பயணிக்க மறுத்ததால் தாதியர் ஒருவருடனே கொண்டு வரப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் தந்தை சுகவீனம் காரணமாக அண்மையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரின் உடல் நிலை மோசமடைந்தநிலையில் குறித்த நோயாளியை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடம்மாற்ற வேண்டும் என வைத்திய சாலையால் முடிவு செய்யப்பட்டது.

அதையடுத்து நோயாளி வைத்தியசாலை ஊழியர்களால் நோயாளர் காவு வண்டிக்கு மாற்றப்பட்டுள்ளார். அவ்விதம் தயார் செய்யப்பட்டும் சுமார் அரை மணி நேரம் நோயாளர் காவு வண்டி காத்திருந்த போதும் மருத்துவர் எவரும் இல்லாது தாதியருடனேயே யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளி கொண்டு வரப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் நோயாளியின் மகனான மாகாண சபை உறுப்பினர் தெரிவித்ததாவது-

மருத்துவர் வரவில்லை என தெரிவிக்கப்பட்டதை அடுத்து வைத்தியரையும் இது குறித்துக் கேட்டேன். குறித்த மருத்துவர் நோயாளர் காவு வண்டியில் பயணிக்க மறுத்தார். அதையடுத்து மருத்துவர்கள் எவரும் இன்றி ஒரு தாதிய உத்தியோகத்தர் சகிதம் நோயாளி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.- என்றார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளரை இரு நாள்கள் தொடர்ச்சியாக தொடர்பு கொண்டு கேட்ட போதும் ஆய்வின் பின் பதிலளிக்கப்படும் என்று தெரிவித்தார். (ந-ஐ-21,101)

# சட்டவிரோத முறைகளில் சிங்கள மீனவர்கள் மீன்பிடி

### குற்றஞ்சாட்டுகின்றனர் மன்னார் மீனவர்கள்

மன்னார், ஜன.5

மன்னார் கடலில் அத்துமீறி கடல் தொழிலில் ஈடுபடும் சிங்கள மீனவர்கள் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்துகின்றனர் என்று மன்னார் மாவட்ட மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதற்கு கடற்படையினரும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மன்னார் சவுத்பார், சிலாவத்துறை மற்றும் மன்னார் பழைய பாலம் ஆகிய பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடும் சிங்கள மீனவர்கள், கடற்றொழில் நீரியல் வளதிணைக்களத்தால் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகளையும் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

> “தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மன்னார் சவுத்பார், சிலாவத்துறை மற்றும் மன்னார் பழைய பாலம் ஆகிய பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் சிங்கள மீனவர்கள்.”

நாங்கள் சுருக்கு வலையைப் பயன்படுத்தினால் கைது செய்து கடற்றொழில் நீரியல் வளதிணைக்களத்தினரிடம் ஒப்படைக்கும் மன்னார் கடற்படையினர், சிங்கள மீனவர்கள் சுருக்கு வலையைப் பயன்படுத்த அனுமதி வழங்கியுள்ளனர். அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதனால் சிங்கள மீனவர்கள் நாளாந்தம் மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி தொழிலில் ஈடுபடுகின்றனர். இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்ட போது மன்னார் மாவட்டத்தில் புத்தளப் பகுதியில் இருந்து வந்து தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் தான் குறித்த சுருக்கு வலைகளைப் பயன்படுத்துகின்றனர் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது. தற்போது அது குறித்து எந்தத் தகவலும் எமக்குக் கிடைப்பதில்லை என்று தெரிவித்தார்.

மீனவர்களுடைய அத்துமீறல்களை சென்று பார்ப்பதற்கும், என்ன விதமாகத் தொழில் செய்கின்றார்கள் என்று கடலில் சென்று பார்ப்பதற்கும் எம்மிடம் படகு வசதிகள் இல்லை. எனவே நாங்களும் கடற்படையினரின் உதவியையே நாடியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (ந-ஐ-21)

## சீரான மயானம் ஒன்று இல்லாமையால் சிரமம்

### அமைத்துத் தருமாறு ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்ட மக்கள் கோரிக்கை

வவுனியா, ஜன.5

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட மக்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் மயானம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தற்போது சீரான மயானம் இன்மையால் நீண்ட தூரம் சென்று உடல்களை அடக்கம்செய்யவேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரச ஊழியர் வீட்டு திட்டத்துக்கென தனியான மயானம் ஒதுக்கப்படவில்லை. இந்த நிலையில் ஏற்கனவே ஓமந்தை வேப்பங்குளம் மக்கள் பயன்படுத்தி வரும் மயானத்தையே இவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மயானம் அவர்களது இடத்தில் இருந்து 4 கிலோமீற்றர் தூரத் தில் உள்ளது. மழை காலங்களில் உடல்களை நல்லடக்கம்செய்வதில் பொது மக்கள் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைக் கருத்தில் கொண்டு சீரான ஒரு மயானத்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்துக்கு அமைத்துக் கொடுக்கவேண்டும் என அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் வசிப்பவர்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-ஐ-402)



இயக்கச்சி கோவில் வயல் கண்ணகி முன்பள்ளியின் புதிய கட்டடத்தை கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ஜெயராணி, கிராமசேவையாளர், முன்பள்ளி ஆசிரியர்கள், துறை சார் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந-ஐ-ரி3)

## கேப்பாப்பிலவுவில் காணிக் கச்சேரி

முல்லைத்தீவு ,ஜன.5

முல்லைத்தீவு கேப்பாப்பிலவுவில் காணி அனுமதிப் பத்திரங்களைத் தவற விட்டவர்களின் அனுமதிப் பத்திரங்களை மீளப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நேற்று கரைதுறைப்பற்று பிரதேச செயலக ஏற்பாட்டில் காணிக் கச்சேரி இடம் பெற்றது. கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் இந்தக் காணிக் கச்சேரி இடம்பெற்றது.

குறித்த காணிக்கச்சேரியில் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் வசிக்கும் மக்களில், வயல் நிலங்களுக்கான காணி அனுமதிப் பத்திரங்களைத் தவற விட்டவர்கள் தம் மிடம் உள்ள சான்றுகளின் அடிப்படையில் ஆவணங்களைச் சமர்ப்பித்தனர்.

இந்தக் காணிக் கச்சேரியில் வயல்களின் ஆவணங்களைச் சமர்ப்பித்த சுமார் நூறு பேர் காணிக் கச்சேரியில் பங்குபற்றினர். (ந-ஐ-101)

## முதிரைச் சலாகைகள் கடத்திய மூவர் கைது

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு முதிரைமரச் சலாகைகளைக் கடத்திய மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சிந்தக்க.என்.பண்டார தெரிவித்தார்.

அவர்களிடம் இருந்து 146 சலாகைத் துண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் குறித்த வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

இரவு வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான முறையில் மூடி மறைக்கப்பட்டுப் பயணித்த படி ரக வாகனத்தை மறித்து சோதனையிட்டனர்.

இதன் போது அனுமதிப் பத்திரம் இன்றி சட்ட விரோதமான முறையில் முதிரை மரச் சலாகைகள் கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-ஐ-107)

## கடன்களைச் செலுத்தியோருக்கு காணி உறுதிப் பத்திரங்கள்

### கிளி. வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வழங்கியது

கிளிநொச்சி,ஜன.5

கிளிநொச்சி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்துக்கான கடன்களைப் பெற்று உரிய முறையில் வீடு கட்டி, அதற்கான கடன்களையும் உரிய தவணையில் செலுத்திய 4 குடும்பங்களுக்கு காணி உறுதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் கிளிநொச்சி உதயநகர் மேற்கில் முதன்



முறையாக வழங்கப்பட்ட 30 வீட்டுத்திட்டத்தில் குறித்த திட்டத்தை நிறைவு செய்து, அதற்கான கடன்களை உரிய தவணையில் கட்டி முடித்த 4 குடும்பங்களுக்கே குறித்த காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபரால் குறித்த காணி உறுதிப் பத்திரங்கள் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் நெயல் ஜெயச்சந்திரன், துறைசார் ஊழியர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நஐ-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக்கில் நட்பாகி யுவதியை ஏமாற்றி மாயமாகிய இளைஞன்

## 15 பவுண் நகை, 50,000 ரூபா பணத்துடன்: வவுனியா யுவதி பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.5
பேஸ்புக் மூலம் நட்பாகப் பழகிய இளைஞன், திருமணம் செய்வதாகக் கூறியதைக் கேட்டு யாழ்ப்பாணம் வந்த வவுனியா யுவதி தனது 15 பவுண் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணத்தைப் பறிகொடுத்துள்ளார். குறித்த இளைஞன் நகை, பணம் என்பற்றைப்பெற்றுக் கொண்டு மாயமாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் உள்ள ஐயனார்கோயில் பகுதியில் நடந்துள்ளது. நகை, பணத்தை பறிகொடுத்த யுவதி தற்போது யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறையிட்டுள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த குறித்த யுவதி 28 வயதுடையவர். பேஸ்புக் மூலம் இளைஞர் ஒருவர் இந்த யுவதி யுடன் நட்பாகியுள்ளார். அந்த இளை ஞர்தான் கனடாவில் இருப்பதாக யுவதிக்குக் கூறியுள்ளார். அங்கிருப்பது போன்ற புகைப்படங்களையும் பதிவேற்றம் செய்துள்ளார்.

இந்தத் தொடர்பு நீண்ட நாள்களாக தொடர்ந்துள்ளது. இந்தநிலையில் அந்த இளைஞர் யுவதியைத் திருமணம் செய்ய ஆசைப்படுகின்றேன் என்று கூறியுள்ளார். யுவதிக்கு

> “யுவதியிடம் பணம், நகைகளை வாங்கிக் கொண்ட இளைஞர், நகைகளைக் கொடுத்து தாலி செய்வோம் என்று கூறி நகைக்கடைக்கு போய் வருவதாகக் கூறி கம்பி நீட்டியுள்ளார்.”

நம்பிக்கை வரும்படியாகப் பேசியுள்ளார். கனடாவில் உள்ள நண்பர் ஒருவர் மூலம், தான் இது குறித்துப் பேசுகின்றேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, கடந்த 13ஆம் யுவதியைத் தொடர்பு கொண்ட இளைஞன், தான் இலங்கை வந்துள்ளேன் என்று கூறியுள்ளார். தான் தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

யுவதியை யாழ்ப்பாணம் வருமாறு கூறியுள்ள இளைஞர், திருமணம் செய்து எங்காவது சென்று வாழலாம் என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் மறக்காது எமது வாழ்க்கையைக் கொண்டு செல்லத் தேவையான பணத்தையும் எடுத்துவருமாறு யுவதியிடம் தெரிவித்துள்ளார்.

இதை நம்பிய யுவதி 15 பவுண் நகை, 50 ஆயிரம் ரூபா பணத்துடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார். யுவதியைத்தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் உள்ள ஐயனார் கோயிலடிக்கு வருமாறு கூறியுள்ளார் இளைஞர். அங்கு யுவதியிடம் பணம், நகைகளை வாங்கிக் கொண்ட இளைஞர், நகைகளைக் கொடுத்து தாலி செய்வோம் என்று கூறி நகைக் கடைக்கு போய் வருவதாகக் கூறி கம்பி நீட்டியுள்ளார்.

நீண்ட நேரமாக இளைஞர் தாலியுடன் வருவார் என்று காத்திருந்த யுவதிக்கு நேரம் செல்லச் செல்ல, தான் ஏமாற்றப்பட்ட விடயம் புரியத் தொடங்கியுள்ளது. அதையடுத்து அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க குறித்த இளைஞர் பதிவேற்றிய படங்கள் மார்பிங் (மாற்றம் செய்யப்பட்ட படம்) செய்யப்பட்டு கனடாவில் இருப்பது போன்று மாற்றப்பட்டுள்ளனவாம்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-ஜ-107)

### மருந்தகத்தை உடைத்து திருடியவர்களுக்கு விளக்கமறியல்

வல்வெட்டித்துறை,ஜன.5
வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள மருந்தகம் ஒன்றை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் உருத்திரேஸ்வரன் விஜயராணி நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த டிசெம்பர் மாதம் வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் உள்ள மருந்தகம் ஒன்று உடைக்கப்பட்டு பெறுமதியான பால்மா பொருள்கள், பிஸ்கட் வகைகள் என்பன திருடப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் ஒருவரது முகம் கடையில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த சீ.சீ.ரீ.வி.கமராவில் பதிவாகியிருந்தது.

இது தொடர்பில் திருட்டுச் சந்தேக நபரைக் கைது செய்வதற்குரிய ஆதாரமாக குறித்த சீ.சீ.ரீ.வி. கமராவில் பதிவாகியிருந்த காட்சிகளை பொலிஸார் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தியிருந்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் அந்தப் பகுதி பிரதேச வாசிகள் வழங்கிய தகவலை அடுத்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ.எ.ஸ்.மீடின் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சந்தேக நபர்கள் இருவரையும் கடந்த 2 ஆம் திகதி ஆதிகோயிலடி பகுதியில் வைத்துக் கைது செய்திருந்தனர். (ற-ஜ-107)

### கசிப்பு உற்பத்தி செய்தவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.5
கொடிகாமம், தவசிக்குளம் பகுதியில் சட்ட விரோமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பவையும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபரின் வீட்டில் இருந்து 3 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவு கொண்ட கசிப்புப் போத்தல்களும், 10 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய கசிப்புத் தயாரிக்கப் பயன்படுத்தும் கோடா என்பவற்றையும் கைபற்றியுள்ளனர்.

பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து தவசிக்குளம் பகுதியில் உள்ள குறித்த வீடு சிவில் உடையில் சென்ற பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபரையும், சான்றுப் பொருள்களையும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-107)

### ஆரம்ப புலன் விசாரணை அதிகாரிகளுக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி,ஜன.5
வடமாகாணஉள்ளூராட்சித் திணைக்களத்தால் ஆரம்ப புலன்விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்காக உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் அகில இலங்கை முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்புத் தரம் மற்றும் வகுப்பு 1 ஆகியவற்றைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உள்ளூராட்சித் திணைக்களம் தொடர்பாகவும், திணைக்கள உத்தியோகத்தர் தொடர்பாகவும் இடம்பெறுகின்ற முறையற்ற நிதி நிர்வாகச் செயற்பாடுகள், தாபன நடைமுறைகளுக்குப்புறம்பான செயற்பாடுகள் மற்றும் ஏனைய பிற முகாமைத்துவங்கள் தொடர்பில் ஆரம்ப புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கான விசாரணை அதிகாரிகளாகச் செயற்படுவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொ.வாகீசன் அனைத்து உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

### இரு தினங்களில் 8 பேருக்கு டெங்குத் தொற்று

சாவகச்சேரி,ஜன.5
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த இருதினங்களில் 8 பேர் டெங்கினாலும், 6 பேர் உண்ணிக் காய்ச்சலாலும் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்தோரில் பலர் டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தின் பெரும்பாலான இடங்களில் மழை வெள்ளம் பெருமளவில் தேங்கி நின்று தற்போது வடிந்து வரும் நிலையில், டெங்கு மற்றும் உண்ணிக் காய்ச்சல் போன்றவற்றினால் தினமும் பெருமளவானோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த மாதம் 86 பேர் டெங்கினாலும், 66 பேர் உண்ணிக் காய்ச்சலாலும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளனர். (ஜ-9)

## புளியங்கூடலில் அதிகரித்துவரும் கட்டாக்காலி மாடுகள் தொல்லை

### கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.5
புளியங்கூடல் பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்றும், அதனால் தாம் பெரிதும் பாதிக்கப்படுகின்றோம் என்றும் விவசாயிகள் விசனம் தெரிவித் துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் புளியங் கூடல் பகுதியில் இரவுபகலாக கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. அதனால் வீட்டுப் பயிர்கள் மட்டுமல்லாது நெற்பயிர்களும் சேதத்துக்குள்ளாகின்றன.

விவசாயத்தில் ஈடுபட்ட மக்கள் அண்மையில் பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தனர். தற்பொழுது கட்டாக்காலி மாடுகளின் தொல்லையும் அதிகரித்துள்ளதால் பொருளாதார ரீதியில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கட்டாக்காலி மாடுகள் இரவு பகலாக வீதிகளில் நடமாடுவதனாலும் படுத்துறங்குவதனாலும் வாகனப் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுகின்றது. சில சமயங்களில் வாகனங்கள் விபத்துக்குள்ளாக வேண்டிய நிலையும் உருவாகின்றது.

கட்டாக்காலி மாடுகளின் தொல்லை குறித்து பாதிக்கப்பட்டுள்ள மக்கள் ஊர்காவற்றுறை பிரதேசசபை செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கட்டாக்காலிகளைப் பிடித்து ஏலத்தில் விற்பனை செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதுடன் கட்டாக்காலி மாடுகளைக் கட்டி வளர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-115)



சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்டத்தின் ஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக்கார தமது குழுவினர் சகிதம் அண்மையில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்துக்கு வந்திருந்ததுடன், கழகத்தின் பல்வேறு நலத்திட்டங்களையும் ஆரம்பித்து வைத்தார். கழகத் தலைவர் லயன் அ.கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 306 பி 1 மாவட்டத்தின் பிரதிச் செயலாளர் பிரதிப் பொருளாளர், பிரதம இணைப்பாளர், வலயத்தலைவர் உட்பட லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பிரதேச முன்பள்ளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கல், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு நுளம்பு வலை மற்றும் முதியோர்களுக்கு படுக்கை விரிப்புகள் வழங்கல், பார்வையில் குறைபாடு காணப்பட்டோருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கல் போன்ற நலத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ற-ஜ-9)

## விடுவிக்கப்பட்ட பகுதிகளில் திருடர்கள் அட்டகாசம்

### அம்மிக்கல், ஆட்டுக்கல் என்பனவும் திருடப்படுகின்றன என்கின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.5
கடந்த வருட இறுதிப் பகுதியில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் பொருள்கள் திருடப்படுகின்றன என்று தமது காணிகளை பார்வையிட்ட பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்ட முதல் நாள் பார்த்த போது காணப்பட்ட அம்மிக்கல், ஆட்டுக்கல் என்பவை மறுபடி திரும்பி வந்து பார்த்தபோது திருட்டுப் போயுள்ளன என்று வீட்டு உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் இரவு நேரங்களில் பாரிய இயந்திரங்கள் மூலம் பெறுமதியான வேப்பமரங்கள் [illegible] விக்கின்றனர்.

அங்குள்ள வீடுகளின் நிலைகள், யன்னல்கள், கதவுகள் என்பவற்றையும் திருடர்கள் எடுத்துச் செல்கின்றனர் என்றும், குழுக்களாக வரும் இவர்கள் தட்டிக் கேட்கும் வீட்டு உரிமையாளர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் விடுவிக்கப்பட்ட காணி உரிமையாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், இரவு நேரங்களில் இங்கு வந்து எங்கள் வீட்டு மரம் தடிகளுக்காக காவல் இருக்கமுடியாது. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டியவர்கள் பொலிஸாரும் உயர் அதிகாரிகளுமே என்றார்.

இரவு நேரங்களில் குறித்த பகுதிகளுக்குரிய பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டால், திருடர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலற்ற இடமாக ஜனாதிபதி செயலகம்

## மாறவேண்டும் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜன 5
ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் சகல உத்தியோகத்தர்களும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து நாட்டு மக்களுக்கு சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு முன்வரவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் செயற்பாடுகளை நேற்றுத் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமான முறையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை உரிய முறையில் மேற்கொள்வதற்குக் காட்டுகின்ற அக்கறை, செயற்திறன் மற்றும் தொழில்தன்மை என்பவை சேவைக்காலத்தில் காணப்படுகின்ற சிரேஷ்டத்துவத்தை விட அதிக பெறுமதியைக் கொடுக்கின்றன.

ஊழியர்கள் சேவையாற்றுவது தமக்காக அல்ல; இந்த நாட்டு மக்களுக்கே என்பதைக் கருத்திற்கொண்டு செயற்படவேண் டும். அரச நிறுவனங்களை நிர்வகிக்கின்ற பிரதான இடமான ஜனாதிபதி செயலகம் நாட்டு மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு செயற்படுகின்ற இடமாக அமையவேண்டும்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒருவருட காலத்தில் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட பல வேலைத் திட்டங்களுக்கு ஜனாதிபதி செயலக ஊழியர்கள் வழங்கிய பங்களிப்புக்கு இந்த நேரத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரச சொத்துக்களை மிகவும் அவதானமாகக் கையாள வேண்டும் என்பதோடு, ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதி செயலகம் முன்னுதாரணமாக அமைய வேண்டும் - என்றார். (த)

# அத்தியாவசியப் பொருள்களின் விலைக்கட்டுப்பாட்டை நீக்குக

## இறக்குமதியாளர்கள் கோரிக்கை

கொழும்பு,ஜன.5
வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள சில அத்தியாவசியப் பொருள்களை குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைகளுக்கு விற்பனை செய்ய முடியாது எனவும், எனவே கட்டுப்பாட்டு விலைகளை உடனடியாக நீக்கவேண்டும் எனவும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களின் சங்கம் அரசுக்கும், நிதியமைச்சுக்கும் தெரியப்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட பொருள்களின் விலை மட்டங்கள் உலக சந்தையில் பெருமளவில் அதிகரித்திருப்பது மற்றும் வரவு-செலவுத் திட்டத்தில் வரிகள் குறைக்கப்படாதுள்ளமை காரணமாக, அந்தப் பொருள்களை இறக்குமதி செய்யும்போது கட்டுப்பாட்டு விலையை விட அதிகரித்த தொகையைச் செலவிட வேண்டியுள்ளது.

விசேடமாக, இந்த விலைக் கட்டுப்பாட்டின் கீழ்வரும் சீனி, பருப்பு, நெத்தலிக் கருவாடு, உளுந்து மற்றும் கடலை ஆகிய பொருள்களை இறக்குமதி செய்யும்போது, நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை விட அதிக செலவினத்தை இறக்குமதியாளர்கள் ஏற்க வேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளனர். (த-ஜ-22)

> “ நிர்ணயிக்கப் பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை விட அதிக செலவினத்தை இறக்குமதியாளர்கள் ஏற்கவேண்டியுள்ளது ”

# பிள்ளையானுக்கு சிறையில் சலுகை



கொழும்பு,ஜன.5
விசாரணைகளுக்காக மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான பிள்ளையானுக்கு சிறைச்சாலையில் சலுகைகள் கிடைத்து வருவதாக அங்குள்ள உத்தியோகத்தர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பிள்ளையான் உட்பட மூவர் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையில் விளக்கமறியல் தொகுதியில் தங்கவைக்கப்பட்டிருக்கும் பிள்ளையானுக்கு அங்கு, நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ள செல்லிட அலைபேசி ஒன்றைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாலை 5 மணிக்குப் பின்னரும் எந்தவொரு விருந்தாளியையும் சந்திப் பதற்கும் பிள்ளையானுக்கு இடமளிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்காக அங்கு உயர் பதவியொன்றை வகிக்கும் அதிகாரியின் உத்தியோகபூர்வ அறை ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-22)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அலரி மாளிகையில் அமைச்சர்களைச் சந்தித்தார். இதன்போது புது வருட வாழ்த்துக்களைத் தெரிவித் ததுடன் அரசின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினார். (த)

# கிழக்கு மருத்துவ பீடத்துக்கு 62 புதிய மாணவர்கள் சேர்ப்பு

மட்டக்களப்பு, ஜன. 5
கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு 62 புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு மருத்துவபீட பீடாதிபதி வைத்திய கலாநிதி கே.ரி.சுந்தரேசன் தலைமையில் நடை பெற்றது.

மட்டக்களப்பு அரசடி மருத்துவ பீட வளாகத்தில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் கிழக்குப் பல்கலைக்கழக பதில் பதிவாளர் எஸ்.பகீதரன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர்மருத்துவர் எம்.எஸ்.இப்றாலெப்பை உட்பட கிழக்கு பல்கலைக் கழக அதிகாரிகள் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் கைலாகு கொடுத்து வரவேற்றமை விசேட அம்சமாகும்.

இங்கு உரையாற்றிய பீடாதிபதி சுந்தரேசன், ஏனைய மருத்துவ பீடங்களில் பகிடிவதைகள் இடம்பெற்றாலும், இந்த மருத்துவபீடத்தில் பகிடிவதையை ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம். பகிடிவதை அற்ற மருத்துவ பீடமாக இது மிளிர்கிறது என்றும் தெரிவித்தார். (த)



# குறுந்தகவல் மூலம் புதிய லொத்தர் சீட்டுகள்

கொழும்பு,ஜன.5
குறுந்தகவல் இலக்கங்கள் மூலமாக வெற்றியாளர் களைத் தெரிவு செய்யும் புதிய லொத்தர் சீட்டொன்றை இந்த வருடம் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக தேசிய லொத்தர் சபையின் பிரதம விற்பனை அதிகாரியான அசங்க கல்யாணந்த தெரிவித்துள்ளார்.

அலைபேசிகள் போன்ற தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தும் பாவனையாளர்களின் வசதி கருதி இந்தப் புதிய லொத்தரை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெற்றியாளர்கள் தாம் விரும்பும் எண்களைக் குறுந்தகவல்கள் மூலம் அனுப்பி அந்த வெற்றிச் சீட்டிழுக்கும் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

இதேவேளை - அனைத்து லொத்தர் சீட்டுக்களினதும் வெற்றி இலக்கங்களை எதிர்காலத்தில் பாவனையாளர்களின் அலைபேசிகளில் பார்த்துக் கொள்ளக்கூடிய விதத்திலான செயற்றிட்டமொன்றையும் முன்னெடுப்பதற்கு தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைக் கட்சிகள் பிளவு மிக ஆபத்தானது

## எச்சரிக்கிறார் பஷீர் சேகுதாவூத்

மட்டக்களப்பு, ஜன.5

பெரும்பான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெரிய கட்சிகள் ஒன்றுபடுகின்றபோது, சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிறுபான்மை இனங்களின் கட்சிகள் பிளவுபடுவது ஆபத்தானது என, முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

முன்னாள் செனட்டர் மசூர் மௌலானாவின் நினைவு கூரல் நிகழ்வில் சம கால அரசியல் எனும் தலைப்பில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏறாவூர் அஷ்ரப் நற்பணி மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஏறாவூர்க் கிளைக் கொள்கை பரப்புச் செயலாளர் யூ.எல். முஹைதீன்பாவா தலைமையில் ஏறாவூர் வாவிக்கரையோரப் பூங்காவில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பஷீர் சேகுதாவூத் மேலும் தெரிவிக்கையில்,

முக்கியமான அரசியல் யாப்புத் திருத்தத்தினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என்று அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற தற்போதைய சூழ்நிலையிலே, சிறுபான்மைச் சமூகக் கட்சிகளுக்குள்ளும் சிறுபான்மை இனங்களுக்குள்ளும் பிளவுகள் ஏற்படுவது மிகவும் ஆபத்தானது.

> **"தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலும் புரிந்துணர்வோடு பேசி, அசைக்கமுடியாத உடன்பாட்டை எட்டிக்கொண்டு அதனைச் சிங்களத் தேசியத்திடம் முன்வைக்க வேண்டும்."**



தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற ஒரு கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றபோது, இப்பொழுது புதிதாக தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு அமைப்பு உருவாகியிருக்கின்றது.

பெரும்பான்மை இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளின் ஒப்பந்தத்திலே புதிய அரசியல் யாப்புத் திருத்தம் நிறைவேறிவிடும் என்கின்ற ஆபத்து இருக்கத்தக்கதாக, ஒட்டுமொத்தமாக சிறுபான்மைத் தமிழினத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கட்சி பிளவுபட்டுப் பிரிந்து நின்று, ஏகோபித்த தமிழர் அதரவு என்கின்ற அந்த நிலைப்பாட்டிலும் மாற்றம் வருவதென்பது ஏற்றுக் கொள்ள முடியாதது மாத்திரமல்ல பேராபத்து நிறைந்ததுமாகும்.

சில அரசியல் தலைவர்களுடைய தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்கு தகுந்த பாடம் கற்பிக்கவேண்டும் என்று புத்திஜீவிகளும் சிவில் சமூகமும் விரும்பினால், அந்தத் தலைவர்களோடு பேசி உடன்பாட்டைக் கொண்டு வந்து இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலே ஒரு ஏகோபித்த முடிவுக்கு வர வேண்டுமே தவிர வெண்ணெய் திரண்டு வருகின்றபோது தாழியை உடைக்கின்ற நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பொதி, தமிழ் மக்கள் பேரவை ஒரு பொதி என்று மேசைக்குக் கொண்டு வந்தால் அது இது வரை நாம் கண்டிராத ஆபத்தைச் சிறுபான்மை இனங்களுக்குக் கொண்டு வருவதோடு எதுவுமே கிடைக்காத ஒரு கையறு நிலைக்கும் இட்டுச் செல்லும்.

அத்துடன் அந்தப் பிளவுபட்ட நிலைப்பாடு அடுத்த சிறுபான்மை இனமான முஸ்லிம்களையும் அதிகளவில் பாதிக்கும்.

புதிய அரசியல் யாப்புக்கு முன்பாக முதலில் சிறுபான்மைச் சமூகங்கள் தங்களது சமூகத்துக்குள்ளும் பின்னர், தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலும் புரிந்துணர்வோடு பேசி, அசைக்க முடியாத உடன்பாட்டை எட்டிக் கொண்டு அதனைச் சிங்களத் தேசியத்திடம் முன்வைக்க வேண்டும்-என்றார். (தி)

# தெமட்டகொட கடத்தல்; சூத்திரதாரிகள் மறியலில்

கொழும்பு, ஜன.5

கொழும்பு தெமட்டகொட பிரதேசத்தில் நபரொருவரை கடத்தி - தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட எட்டுப் பேரையும், விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று திங்கட்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றபோது சந்தேகநபர்களை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை- அன்றைய தினம் சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி, நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திராவுக்கு சொந்தமான டிபென்டர் ரக வாகனத்தில், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் நபரொருவர் கடத்தி நையப் புடைக்கப்பட்டார்.

இது குறித்து, ஹிருணிகா கைதுசெய்யப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் தெரிவித்து வரும் நிலையில், அவர் இரண்டு முறை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வரும் அதேவேளை, ஹிருணிகாவைக் கைதுசெய்வதற்கான தேவை இருக்கவில்லையெனப் பொலிஸார் தம்மிடம் தெரிவித்ததாக, சபாநாயகர் கரு ஜயசூரிய ஊடகமொன்றுக்கு விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

# இனவாதக் கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ரோகித

சிங்கலே இயக்கம், பொதுபல சேனாவைப்போன்றுசெயற்படாது இலங்கையின் இயக்கமாக செயற்படவேண்டும் என மகிந்த ராஜபக்சவின் இளைய மகன் ரோகித ராஜபக்ச கருத்து வெளியிட்டுள்ளார்.

நுகேகொடையில் முஸ்லிம் வீடுகளின் வாயிற்கதவுகளில் சிங்கலே என்ற சொல் கடந்த சில தினங்களாக எழுதப்பட்டிருந்தது.

இது இனவாதத்தை தூண்டும் செயல் என்று பலரும் விமர்சனம் செய்த நிலையிலேயே ரோகித ராஜபக்ச தமது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.தமது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்திலேயே இந்தக் கருத்தை அவர் பதிவுசெய்துள்ளார்.

சிங்கலே இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் தவறான கருத்துக்களை வெளியிடுபவர்கள் தொடர்பில் கண்டனம் வெளியிட்டுள்ள அவர், சிங்க லே என்ற சொல், சிங்களம் பேசுபவர்கள் அல்லது பௌத்தர்கள் என்ற அர்த்தத்தை குறிப்பிடவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அது, எவருக்கும் தலை வணங்காத, எந்த நாட்டுக்கும் கீழ்படியாத, சிங்கத்தின் உடலில் ஓடும் இரத்தம்போல இருக்கவேண்டும். அத்துடன், தைரியமான சிங்கத்தைப் போன்று நாங்கள் தலை நிமிர்ந்து நடக்கவேண்டும் என அர்த்தப்படுத்துகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில்குறித்தவிடயத்தை இனவாதமாகமாற்றும்முயற்சியில் சிலர்ஈடுபட்டுள்ளமையானதுதமக்கு மிகுந்த கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (தி)

# டிசெம்பர் மாத இறுதி வாரத்தில் 10,000 கடவுச்சீட்டு விநியோகம்

கொழும்பு, ஜன 5

கடந்த 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதி வாரத்தில் 10 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் விண்ணப்பித்துப் பெறப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள பிரதம கட்டுப்பாட்டாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், வரவு-செலவுத் திட்ட அறிவிப்புக்கு அமைய கட்டண அதிகரிப்பு செய்யப்படவிருந்த நிலையிலேயே 10,000 இற்கும் அதிகமானவர்கள் கடவுச் சீட்டுக்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வழமையான சேவை மூலம் வழங்கப்படும் கடவுச்சீட்டுக்கான கட்டணம் 2ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 3 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டது.

ஒருநாள் சேவை மூலம் வழங்கப்படும் கடவுச்சீட்டுக்கான தொகை 7ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

16 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கான சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டை வழமையான சேவையில் பெறுவதற்கான தொகை ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (தி)

# கடலில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்ட இளைஞர் சாவு

மட்டக்களப்பு, ஜன.5

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி டச்பார் கடலில் நீராடிய இளைஞரொருவர் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளதாகக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி கடலில் கடந்த ஞாயிறன்று குடும்பத்தாருடன் பொழுது போக்குக்காகச் சென்ற குறித்த இளைஞர், கடலில் இறங்கிக் குளித்துள்ளார்.

இந்தநிலையில், திடீரெனக் காணாமற்போன அவரை, இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் பிரதேசவாசிகள் தேடிக் கண்டுபிடித்து கரை சேர்த்தனர்.

மேலும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த இளைஞனின் சடலம் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (தி)

# ஐ.எஸ். அமைப்பில் 36 இலங்கையர்கள்

## உறுதி செய்தது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, ஜன 5

இலங்கையைச் சேர்ந்த பலர் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் இணைந்துள்ளதாகத் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை சுமார் 36 இலங்கையர்கள் சிரியா சென்றுள்ளதாகவும், அவர்களில் அனேகமானோர் குறித்த அமைப்பில் இணைந்துள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன கெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதக் குழுவுக்கு ஆட்சேர்க்கும் இலங்கை பிரசை ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கையைச் சேர்ந்த பலர் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் இணைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியானதோடு, பொதுபல சேனா அமைப்பும் இலங்கைக்கு தீவிரவாத அச்சுறுத்தல் உள்ளதாக அடிக்கடி அறிவுறுத்தல் விடுத்து வந்தது.

குறிப்பாக கடந்த வருடத்தில் சிரிய வான் தாக்குதலில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததோடு, அவர் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்திருந்தமை பின்னர் தெரியவந்தது. அத்துடன், குறித்த நபர் தமது குடும்பத்தார் சகிதம் சிரியாவுக்குச் சென்றிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பில் ஒருவர் கைது செய்யப்பட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இவ்வாறான நிலையில் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள தகவல்கள், இலங்கைக்குப் பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளதென்பதை ஊர்ஜிதப்படுத்துவதைப் போல அமைந்துள்ளது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிறுபான்மையினர் உரிமைகளை வழங்க செயலூக்கம் உயரட்டும்

இலங்கையை ஒரு நாடு என்றும், சிங்கள தேசம் என்றும் நிலை நாட்டுவதற்கு, இங்கு வாழும் தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலாயர் ஆகிய எல்லாத் தரப்பினரதும் உரிமைகளை மதிக்க வேண்டும்.

அவர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்காவிடின், இந்த நாடு ஒருபோதுமே இனங்கள் இடையேயான நல்லிணக்கத்தையும், அமைதியையும், ஒருமைப்பாட்டையும் எய்த இயலாது.

சிறுபான்மை இன மக்கள் இப்போது கொண்டுள்ள நம்பிக்கையைச் சீர்குலைக்கும் வகையில், எதிர்காலத்தில் எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்படமாட்டாது.

நாட்டின் சிறுபான்மை இன மக்களின் விருப்பங்களை-வேணவாவைப்-பூர்த்தி செய்யாமல் நாட்டில் உண்மையான அமைதியோ, அன்றி அபிவிருத்தியோ ஏற்பட மாட்டாது; அதற்கு வாய்ப்பே இல்லை.

இவ்வாறாக கருத்து வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

டட்லி-செல்வா, பண்டா-செல்வா ஒப்பந்தங்களைக் கிழித்துப் போட்டதே பிரபாகரன் உருவாகியமைக்குக் காரணம்.

தமக்குரிய உரிமைகள் கிடைக்காது என்ற நம்பிக்கையீனமே அவர்களை வேறு பாதைகளுக்கு இட்டுச் சென்றன.

இந்த மாதம் எட்டாம் திகதியுடன், தாம் ஜனாதிபதிப் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாக உள்ள தருணத்தில், ஜனாதிபதி மேற்போந்தவாறு தொட்டுக் காட்டி உள்ளார். உண்மையான நிலவரத்தை உறுதிபடக் கூறியுள்ளார்.

அத்தோடு தரிக்காமல், அத்தகைய தவறுகளை எதிர்காலத்தில் நாம் செய்யாது இருக்க வேண்டும் என்றும் அவர் அழுத்திக் கூறியிருக்கிறார்.

தற்போது சிறுபான்மை இனமக்கள், அரசு மீது கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சிதறடிக்கும் வகையில் எந்த ஒரு தீர்மானத்தையும் மேற்கொள்ளக்கூடாது என்று அவர் இடித்துரைத்து உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதியின் கருத்துக்கள், மானிட நேயம் கொண்ட அனைவரையும் ஒன்றுக்குப் பல தடவைகள் சிந்திக்க வைக்கும் என்று எதிர்பார்க்கலாம்; நம்பலாம்.

மறுபக்கத்தை ஆழமாகத் துருவிப் பார்த்தால், உலக நாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில், அதற்கு முன்னோட்டமாக, நாட்டின் தலைவர் தமது கருத்துக்களை இவ்விதம் முன்வைத்து இருக்கக்கூடும் என்பதற்கான சாத்தியமும் உண்டு.

ஆயினும், உலக நாடுகள் எந்த விடயத்திலும், எந்த விவகாரத்திலும் வெறும் வாய்ச் சொற்களையோ, கருத்துக்களையோ முழுக்க முழுக்க உள்வாங்கிக் கொள்வதில்லை. உகந்த செயலாக்கத்தையே எதிர்பார்க்கின்றன.

தென்னிலங்கையில், பேரினவாதிகளில் ஒருசாரார் 'சிங்கலே' என்ற இனவாத வடிவத்தில் பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அவை சிறுபான்மை இனமக்களுக்கு (தமிழர்கள் முஸ்லிம்களுக்கு,) எதிராகக் கலவரங்களைத் தூண்டிவிடும் உள்நோக்கம் கொண்டவையாக இருக்கலாம் என்று அரசல் புரசலாகப் பேசப்படுவதாகவும் கூறப்படுகிறது.

எது எவ்வாறாயினும், சிறுபான்மை இனமக்களின் உரிமைகளை வழங்குவதற்கு இப்போதைய அரசு மனமார்ந்து செயற்படுவதற்கான செயலூக்கம், தாமதங்கள் இன்றி மேலுயரட்டும்.

# கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குத்தான்

தில்லாலங்கடி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் உருவாக்கவில்லை என்று, அந்தக் கட்சியின் முன்னாள் ஊடகப் பேச்சாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கிளிநொச்சியில் நடந்த ஊடக சந்திப்பில் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். இவர் நிதானமாகத்தான் பேசுகின்றாரா? அல்லது தமிழகத்தில் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் உளறுவது போல் பேசுகின்றாரா என்பது தெரியவில்லை.

ஐயா பிரேமச்சந்திரன் அவர்களே, நடந்து வந்த பாதைகளைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். நீங்கள் மாற்றி மாற்றிச் சொல்வதில் அசகாய சூரர் என்பது தமிழ் மக்களுக்கு பட்டவர்த்தனமாகத் தெரியும். இருப்பினும் சில விடயங்கள் உங்கள் நினைவுகளிலிருந்து அழிந்து போய் விட்டனவோ என்ற பயத்தால் சுட்டிக்காட்ட விளைகின்றேன்.

### 2014இல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பு

2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி உங்களின் நீர்வேலி அலுவலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியிருந்தீர்கள். அதற்கு ஆதாரம் கேட்டால், அடுத்த நாள் வெளியாகிய சகல தினசரிகளிலும் பத்திரிகையாளர் சந்திப்புத் தொடர்பாக வெளிவந்திருந்த செய்திகளைத் தூக்கிப் போட முடியும். அந்தச் சந்திப்பில், தமிழ் மக் களின் அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிப்பதற்காக சிவில் சமூகத்தினரிடமிருந்து (தாயக தமிழ் மக் கள் - புலம்பெயர் தமிழர்கள் -நிபுணத்துவ அறிவுடையவர்கள்) ஆலோசனைகளை கோருவதாகத் தெரிவித்திருந்தீர்கள். அதற்காக ஒரு மின்னஞ்சல் முகவரியையும் வெளியிட்டிருந்தீர்கள். அவ்வாறு கோருவதற்கு அப்போது ஒரு காரணத்தையும் முன்வைத்திருந்தீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மகிந்த தலைமையிலான அரசின் பிரதிநிதிகளுக்கும் இடையில் 2011 ஆம் ஆண்டு முழுவதிலும் பேச்சு நடந்தது. இந்தப் பேச்சுக்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டது. அந்தத் தீர்வுத் திட்டத்தில் சிவில் சமூகத்தவர்களது கருத்துக்கள் உள்வாங்கப்படவில்லை என்ற குறை உள்ளது. அதனாலேயே புதிய தீர்வுத் திட்டம் தயாரிக்கும் பொழுது அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கித் தயாரிக்கவே இந்த ஆலோசனைகளைக் கேட்கின்றோம் என்று, பத்திரிகையாளர் சந்திப்பில் குறிப்பிட்டீர்கள்.

சரி, 2011 ஆம் ஆண்டு கூட்டமைப்பாக தீர்வுத் திட்டத்தை முன்வைத்தோம் என்று உங்கள் வாயாலேயே நீங்கள், 2014 ஆம் ஆண்டு பத்திரிகையாளர் சந்திப்பில் ஒப்புக் கொண்டிருந்தீர்கள். இப்போது - நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை - 



நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் கூட்டமைப்பு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவில்லை என்று சொல்லுகின்றீர்கள். எது ஐயா உண்மை? அப்போது பேசியது வேறு வாய், இப்போது பேசுவது வேறு வாயா? (அது நாறல் வாய், இது நல்ல வாய் என்று

> 2011 ஆம் ஆண்டு கூட்டமைப்பாக தீர்வுத் திட்டத்தை முன்வைத்தோம் என்று உங்கள் வாயாலேயே நீங்கள், 2014 ஆம் ஆண்டு பத்திரிகையாளர் சந்திப்பில் ஒப்புக் கொண்டிருந் தீர்கள்.

காமெடியடிக்காதீர்கள்) ஏன் இந்த தடுமாற்றம் ஐயா?

சரி அடுத்த விடயத்துக்கு வருவோம். கிளிநொச்சியில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் இன்னொரு விடயத்தையும் சுட்டிக் காட்டினீர்கள். கூட்டமைப்பு தீர்வுத் திட்டம் வைத்திருந்தால் அது கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது மாகாண சபை உறுப்பினர்களுக்கோ தெரியாது என்று சொல்லியுள்ளீர்கள்.

### கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவில் அங்கம்

2011 ஆம் ஆண்டு நடந்த அத்தனை பேச்சுக்களின் போதும் நீங்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றுத்தானே இருந்தீர்கள். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நீங்கள், மற்றையது அப்போதும் இப்போதும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகிய நால்வரும்தானே பேச்சுக்குச் சென்று வந்தீர்கள்.

இதனை விட அப்போது கூட்டமைப்பின் பேச்சாளர் என்று ஒரு பதவியும் உங்களிடம் இருந்தது. 2011 ஆம் ஆண்டு மகிந்த அரசிடம், கூட்டமைப்புச் சார்பாகச் சென்ற குழுதானே தீர்வுத் திட்டத்தை முன்வைத்தது. அப்படியானால் அந்தத் தீர்வுத் திட்டம் உங்களுக்குத் தெரியாமலா முன்வைக்கப்பட்டது. அப்படி உங்களுக்குத் தெரியாமல் முன்வைக்கப்பட்டதாயின், ஏன் நீங்கள் அதனை அப்போது வெளிப்படுத்தவில்லை. சரி அப்போது வெளிப்படுத்தாவிட்டாலும், 2014 ஆம் ஆண்டு நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், புதிய தீர்வுத் திட்ட யோசனைக்கான அழைப்பு விடுக்கப்படும்போதாவது வெளிப்படுத்தியிருக்கலாமே? யாருக்கு ஐயா கதையளக்கின்றீர்கள்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான நல்லதொரு தீர்வை முன்வைத்தால் அதனை ஏற்போம். இல்லையேல் தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களுக்கான சிறப்பான தீர்வை முன்வைத்தால் அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்க வேண்டும் என்று கிளிநொச்சியில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் முழங்கியிருக்கின்றீர்கள்.

### இப்போது எந்த அணியில்?

கோபித்துக் கொள்ளாமல் ஒரு பதிலைச் சொல்லுவீர்களா ஐயா? நீங்கள் முழங்கியதைக் கேட்கும் போது, இப்போது நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சியில் இருந்து தமிழ் மக்கள் பேரவைக்குதாவியதைப் போன்று இருக்கின்றது. நீங்கள் இன்னமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்றீர்களா? இல்லையா? இப்போதைக்கு உங்கள் இருப்பிடம் தமிழ் மக்கள் பேரவையா? இதைத் தெளிவுபடுத்துங்கள். நீங்கள் யார் என்பதை மக்கள் இலகுவாக அறிந்து கொள்வார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டாத தொலைவிலும் தெரியவில்லை

சேரலாதன்

இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குரிய தீர்வு எங்கோ எட்டாத தொலைவிலும் தெரிவதாகத் தோன்றவில்லை.

**தமிழர்கள் ஓரளவு நிம்மதியுடன்**

தற்போதைய நல்லாட்சி அரசில் தமிழ் மக்கள் ஓரளவு நிம்மதியுடன் வாழ்ந்து கொண்டிருப்பது உண்மைதான். ஆனால் நிரந்தரமான தீர்வொன்றையே அவர்கள் நாடி நிற்கின்றனர். இந்த நாட்டின் இனப்பிரச்சினை, நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்தே ஆரம்பித்து விட்டது. பெரும்பான்மையினத் தலைவர்கள் சிறுபான்மையினரை சகல வகைகளிலும் அடக்கி ஒடுக்குவதில் குறியாக இருந்தமையே இனப்பிரச்சினை ஆரம்பமாவதற்கான முக்கிய காரணமாக அமைந்து விட்டது. நாட்டின் முதலாவது பிரதம மந்திரியான டி.எஸ்.சேனநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர். நாடு சுதந்திரம் அடைந்தபோது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையினராகத் தமிழர்களே விளங்கினர்.

முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு அடுத்த இடத்தில் இருந்தனர். சொற்ப தொகையான சிங்களவரே கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்தனர். வடக்கும், கிழக்கும் இணைந்த நிலப்பரப்பு, முழு நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்காகக் காணப்பட்டது. அத்துடன் கிழக்கு மாகாணம் விவசாயத்துக்கு உகந்த செழிப்பான மண்வளத்தையும் கொண்டிருந்தது. மேலும் இயற்கையாக அமைந்த துறைமுகத்தைக் கொண்ட திருகோணமலை, உலகின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. வடக்கு மாகாணம் வறண்ட பூமியாகக் காணப்பட்ட போதிலும், கிழக்கு மாகாணம் நீர்வளத்தைக் கொண்டிருந்தது.

**இனப்பிரச்சினைக்கு பிள்ளையார் சுழி**

இது பெரும்பான்மையின இனவாதிகளின் கண்களைக் குத்தியது. அப்போதைய பிரதம மந்திரியான டி.எஸ். சேனநாயக்க சிங்களக் குடியேற்றங்களை கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டு வெற்றியும் பெற்றார்.

அவரது இனவாதச் செயற்பாடுகள் காரணமாகவே இன்று தமிழர்கள் சிறுபான்மையினராக கிழக்கு மாகாணத்தில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர்களுக்குச் சொந்தமான செழிப்பான விவசாய நிலங்களும் பறித்தெடுக்கப்பட்டு விட்டன. இந்த வகையில் தமது இனவாதச் செயற்பாடுகள் மூலமாக இந்த நாட்டில் இனப்பிரச்சினை தோன்றுவதற்குப் பிள்ளையார் சுழி இட்ட பெருமை டி.எஸ்.சேனநாயக்கவுக்கே உரியது.

பின்னாளில் வடக்கிலும் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தமிழர் பகுதிகளான திருகோணமலையையும், முல்லைத்தீவையும் துண்டாடிப் பிரிக்கும் வகையில் வெலி ஓயா என்னும் சிங்களக் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்து 67 ஆண்டுகள் கடந்த நிலையிலும், தற்போதும் கூட சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**சமஷ்டிக்கு இணங்கிய பண்டாரநாயக்க**

கடைந்தெடுக்கப்பட்ட இனவாதியான எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க தமிழர்களுக்கு சமஷ்டி ஆட்சி முறையில் அதிகாரங்களை வழங்குவதற்குத் தயாராகவே இருந்தார். இதைவிட தந்தை செல்வாவுடன் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டிருந்தார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இன்னொரு இனவாதியான ஜே. ஆர். ஜெயவர்த்தனா இதனைக் கடுமையாக எதிர்த்து பாதயாத்திரை ஒன்றையும் மேற்கொண்டார்.

தமிழர்களுக்குச் சிறு துரும்பைக்கூட வழங்கக்கூடாது என்பது ஜே.ஆரின் கொள்கையாகும். இவரது ஆட்சிக் காலத்திலேயே, 1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான பெரும் அட்டூழியம் இடம்பெற்றது. ஜூலைக் கலவரம் என இது அழைக்கப்பட்ட போதிலும் தமிழர்களை முற்றாக அழிக்கின்றதொரு திட்டத்துடனேயே கலவரங்கள் அரங்கேற்றப்பட்டன. அரசினதும், சிங்கள அரசியல்வாதிகளினதும் ஆசீர்வாதம் முழுமையாக இருந்ததால் சிங்களக் காடையர்கள் தமிழர்களைத் தேடித் தேடி அழிக்கத் தலைப்பட்டனர். ஆட்சிப் பொறுப்பில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர்.பிரேம தாசா, சந்திரிகா என வரிசையாகப் பலர் அமர்ந்த போதிலும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப் பதற்கு இவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மகிந்த ராஜபக்சவின் பதவிக்காலம் தமிழர்களின் வாழ்வில் ஓர் இருண்ட யுகமாகவே மாறிவிட்டது.

**விருப்பமில்லாத தலைவர்கள்**

உண்மையைக் கூறுவதாயின், பெரும்பான்மையின மக்கள் தமிழர்களுக்கு எதையாவது வழங்குவதற்குத் தயாராக இருந்தபோதிலும், அவர்களின் தலைவர்கள் அதற்கு விருப்பமில்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்துவதன் மூலமாகத் தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவே இவர்கள் விரும்புகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவை நம்ப முடியாது விட்டாலும் மைத்திரியை நம்பித்தான் தீர வேண்டும். ஆனால் அவர் சார்ந்த கட்சியினரும் இனவாதிகளும் அவரது செயல்களைக் குழப்புவதிலேயே குறியாக இருக்கின்றனர். அவரது தலைமையிலான சுதந்திரக் கட்சியின் ஒருதரப்பினரும் இனவாதிகளும் தமிழர்களுக்கு உரிமைகள் எதுவும் வழங்கக்கூடாது என்பதில் கடுமையாகவே நடந்து வரு கின்றனர். தற்போதைய ஆட்சியைக் கலைத்து மகிந்த தலைமையிலான ஆட்சியொன்றை அமைத்துக் கொள்வதே அவர்களது பிரதான நோக்கமாகும். அவ்வாறானதொரு நிலை உருவாகுமானால், அதனை எண்ணிப் பார்ப்பதற்குக் கூட தமிழர்கள் அஞ்சுகின்றனர்.

தற்போதைய அரசியல் நிலவரங்களைக் பார்க்கும்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டாத தொலைவில் கூடத் தெரிவதாகத் தோன்றவில்லை.

> “வடக்கிலும் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தமிழர் பகுதிகளான திருகோணமலையையும், முல்லைத் தீவையும் துண்டாடி விடும் வகையில் வெலி ஓயா என்னும் சிங்களக் குடியேற்றம் ஏற்படுத் தப்பட்டது.”

# உண்மையை மட்டும் எழுதுங்கள்

எம்.ஜி.ராமச்சந்திரனின் நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த 24.12.2015, 26.12.2015 31.12.2015 ஆகிய திகதிகளில் உதயன் பத்திரிகையில் வ.இ.செல்வகுமார் என்பவரால் எழுதப்பட்ட தொடர் கட்டுரைகளில் எம்.ஜி.ஆரின் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவங்களை வைத்துப் புகழ்வதுடன் நிற்காமல், உண்மைக்குப் புறம்பாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனை இகழும் விதமாகக் குறிப்புக்களைத் தந்துள்ளார். இது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

பத்மினி பிக்சர்ஸ் உரிமையாளர் பி.ஆர்.பந்துலு, சித்ராலயா உரிமையாளர் ஸ்ரீதர், ஸ்ரீவிஜயலக்ஷ்மி பிக்சர்ஸ் உரிமையாளர் அருட்செல்வர், ஏ.பி.நாகராஜன் ஆகியோர் நடிகர் திலகத்தை வைத்துச் சிறந்த பல படங்கள் எடுத்துப் பெரும் பெயரும் புகழும், அத்துடன் பெரும் பொருளும் ஈட்டிக் கொண்டனர். சிவாஜியின் மிக நெருங்கிய நண்பர்களாகவும் விளங்கினர்.

பந்துலு தயாரித்து டைரக்ட்செய்த வீர பாண்டிய கட்டப் பொம்மன் அவருக்கு நிறையப் புகழையும், பொருளையும் ஈட்டித் தந்துதவியது. எகிப்தியப் படவிழாவிலும் 1959 ஆம் ஆண்டின் சிறந்த தமிழ்ப் படமாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசுகளும் பெற்று பந்துலுவுக்கு மங்காத புகழைப் பெற்றுக் கொடுத்தது. இவரது தயாரிப்பில் கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி, பலே பாண்டியா போன்ற படங்களும் வெற்றி பெற்றன. கர்ணன், கப்பலோட்டிய தமிழன் போன்ற படங்கள் மிகுந்த புகழையும் பெற்றுத் தந்தன.

ஏ.பி.நாகராஜன் நடிகர் திலகத்தை வைத்துத் தயாரித்த திருவிளையாடல் படம் பெரும் புகழையும், பொருளையும் அள்ளிக் கொடுத்தது. தொடர்ந்து திருவருட்செல்வர், நவராத்திரி, சரஸ்வதி சபதம், தில்லானா மோகனாம்பாள் போன்ற படங்களும் மிகப் பெரிய வெற்றிகளைப் பெற்றன.

இயக்குநர் ஸ்ரீதர் நடிகர் திலகத்தை வைத்துத் தயாரித்த நெஞ்சிருக்கும்வரை, சிவந்தமண், ஊட்டி வரை உறவு போன்ற படங்கள் வெற்றி பெற்றன.

100 ஆவது படமாக ஏ.பி.நாகராஜன் தயாரித்த படத்தை வெளியிடுவேன் என்று நடிகர் திலகம் வாக்குக் கொடுத்து, அவருக்கு உதவி செய்யும் விதமாக ஊதியம் எதுவும் பெறாமல் ஒன்பது வேடங்களில் நடித்து நவராத்திரி படத்தை வழங்கினார். ஏற்கனவே ஏ.பி.நாகராஜனுக்கு வாக்குக் கொடுத்ததால், பந்துலு தயாரித்த முரடன் முத்து படத்தை 100 ஆவது படமாக வெளியிட (பந்துலு கோரிக்கை பலமுறை விடுத்தும்) நடிகர் திலகம் மறுத்து விட்டார்.

இதனால் விரக்தியடைந்த பந்துலு, சிவாஜியுடனான நட்பை முறித்துக் கொண்டார். ஆனால் பந்துலுக்கு உதவும் முகமாக ஊதியம் பெறாமல் நடித்துக் கொடுத்த படம்தான் முரடன் முத்து. சிவாஜியுடனான நட்பு முறிந்ததாலேயே பந்துலு பின்னர் எம்.ஜி.ஆரை நாடிச் சென்றார்.

ஆயிரத்தில் ஒருவன் வெற்றிப் படமாக அமைந்தாலும் தொடர்ந்து இருவரும் இணைந்து எடுத்த நாடோடி, ரகசியப் பொலிஸ் 115, தேடி வந்த மாப்பிள்ளை ஆகிய படங்கள் தோல்வியைத் தழுவின. இறுதியாக அவர் இறக்கும் வரை தயாரித்து இயக்கிய மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் (இதுவே எம்.ஜி.ஆரினதும் கடைசிப் படம்) படமும் தோல்வியே அடைந்தது.

பல அரும்பெரும் திரைப்படங்களைத் தயாரித்து வெற்றி கண்ட ஏ.பி.நாகராஜன் எம்.ஜி.ஆரிடம் சென்று தயாரித்த நவரத்தினம் படமும் படுதோல்வியடைந்தது. அத்துடன் படம் வெளிவருவதற்கு ஏ.பி.நாகராஜன் மாரடைப்பால் இறக்கவும் நேரிட்டது.

பொருளாதாரக் கஷ்டத்தில் சிக்கிய தயாரிப்பாளர்கள் பலருக்கு எம்.ஜி.ஆர். கைகொடுத்து உதவியதாகக் குறிப்பிட்டுள்ளார் கட்டுரையாளர் வ.இ.செல்வகுமார். அப்படியானால் தாலி பாக்கியம் படம் பல வருடங்களாகத் தயாரிப்பில் இழுத்தடிக்கப்பட்டதால் மனமுடைந்து இறந்து போன தயாரிப்பாளர் நடிகை கண்ணாம்பாவின் நிலைக்கு யூார் காரணம்? இதேபோன்ற நிலைதான் நேற்று-இன்று-நாளை படத்தின் தயாரிப்பாளர் நடிகர் அசோகனுக்கும் நேர்ந்தது. எம்.ஜி.ஆரை வைத்து மாடி வீட்டு ஏழை என்ற படத்தைத் தயாரித்து வெளியிட முயன்ற நடிகர் சந்திரபாபு அதைத் தயாரித்து வெளியிட முடியாமல் துன்பப்பட்டு கஷ்ட நிலைக்கு ஆளாகியமைக்கு எவர் காரணம்? இவையனைத்தும் திரையுலக ஆர்வலர்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மையான விடயங்கள்.

இப்படியாகக் கைவிடப்பட்ட நடிகர் சந்திரபாபு பட வாய்ப்புக்களின்றி இருந்த தேங்காய் சீனிவாசன் போன்றோருக்கு தனது படங்களில் நடிக்க வாய்ப்புக் கொடுத்து உதவினார் நடிகர் திலகம்.

எனவே இனிமேலாவது கட்டுரைகள் எழுதும்போது உண்மைகளை மறைத்து இன்னொருவரை இகழ்வதற்காக பொய்க் கதைகளை எழுதுவதைத் தவிர்க்கும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

ரங்கநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 102 புதிய உயிரிகள் கண்டறிவு

கலிபோர்னியா, ஜன.5
அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள விஞ்ஞான கல்வி நிலையம் உலக நாடுகள் பலவற்றில் இருந்தும் 102 புதிய இனஉயிரிகளின் புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.
உலக உயிர்ப் பல்வகைமையில் இதுவரை 10 சதவீதத்திற் குட்பட்ட உயிரினங்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார் கல்வி நிலையத் தலைவர் மெக் லோமென்.
"புவியில் கண்டுபிடிக்கப்படாத பல இடங்களில் புதிய இனங்கள் இருக்கலாம். புது இனங்களைக் கண்டுபிடிப்பது மட்டுமல்லாமல், இயற்கைத் தொகுதியில் அவற்றின் முக்கியத்துவம் என்ன என்பதை அறியவும் அது உதவும்" என்றார். அத்துடன் புதிய இனக்கண்டுபிடிப்புகள் எதிர்காலத் தலைமுறையினரின் இருப்பைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.
புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இனங்களில் 2 தவளை இனங்கள், 23 எறும்பு இனங்கள், 3 வண்டு இனங்கள், 8 அந்துப்பூச்சி இனங்கள், 11 சிலந்தி இனங்கள், 26 மீன் இனங்கள், 9 கடல்நத்தைகள், புதிய வகை பவளப்பாறைகள், தாவரங்கள், வைரஸ்கள் என்பன அடங்கியுள்ளதாக குழுவினர் அறவித்துள்ளனர்.
பேய்ச் சுறா என்று அழைக்கப்படும் சுறா இனம் நியூசிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டது. கூரான பற்களைக் கொண்ட ஆறு வகை எறும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
(உ-ரி4)





# சீனா அத்துமீற

பீஜிங், ஜன.5
தென் சீனக் கடலில் உள்ள சர்ச்சைக்குரிய தீவில் அத்துமீறி விமானத்தில் பறந்த சீனாவின் செயலுக்கு வியட்நாம் கண்டனம் தெரிவித்துள்ளது. சீனாவுக்கும் வியட்நாம் நாட்டிற்கும் கடந்த பல ஆண்டுகளாகவே எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது. இந்தநிலையில் தென் சீனக் கடலில் உள்ள சர்ச்சைக்குரிய தீவான ஸ்ப்ராட்லி அருகே சீனா சட்டவிரோதமாக அமைத்துவரும் விமானத் தளத்தில் தனது விமானத்தின் சோதனை ஓட்டத்தை மேற்கொண்டது.
இதற்கு வியட்நாம் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வியட்நாமின் வெளியுறவு அமைச் சர் லீ ஹை பின்ஹ் கூறியதா வது:
"வியப
டுக்கு
ஸ்ப்ரா
அருகி
பகுதியி
மீறிவி
ஓட்டம்
ளது.
நாமி
மைை
க்கூ
கும். இ
கும் இ
கொள்

## வட இந்தியாவில் நில அதிர்வு 4 பேர் சாவு; 100 பேர் காயம்

புதுடில்லி, ஜன.5
இந்தியாவின் வடகிழக்குப் பிரதேசத்தில் ரிச்டர் அளவில் 6.7 அளவிலான நில நடுக்கம் உணரப்பட்டது. நேற்று அதி காலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தில் குறைந்தது 4 பேர் உயிரிழந்ததுடன், 100 பேர் காயமடைந்தனர் என அறி விக்கப்பட்டுள்ளது.
பல கட்டடங்களும் சேதத்திற் குள்ளாகின. இந்தச்சேத விவரம் மணிப்பூர் தலைநகரான இம்பாலில் கிடைக்கப் பெற் றவை எனப் பொலிஸார் தெரிவித்தனர். சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் மாநில தலைநகர சந்தைக் கட்டடம் இடிந்து வீழ்ந்தது. அத்துடன் புதிதாகக் கட்டப்பட்ட கட்ட டங்களும் சேதமாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித் தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இந்திய வளிமண்டலவியல் திணைக் களம், இந்தச் சக்திவாய்ந்த நிலநடுக்கம் 17 கிலோ மீற்றர் ஆழத்தில் நிகழ்ந்தது. இந்திய-மியன்மார் எல்லைப் பிர தேசத்தில் இம்பால் நகரை மையமாகக் கொண்டு 35 கிலோமீற்றர் தூரத்துக்கு அதன் தாக்கம் உணரப் பட்டது.
நிலநடுக்கத்தால் பயந்த மக் கள் வீடுகளைவிட்டு வெளி யேறினார்கள். அயல் மாநில மான அசாம் தலை நகரில் ஒரு நிமிடத்தில் 2 பெரும் அதிர்வை உணர்ந்தார்கள். ஒரு நிமி டத்துக்கு உணரப்பட்ட நில அதிர்வில் கட்டடங்கள், அவற்றின் தளபாடங்கள் அதிர்ந்தன என மக்கள் தெரிவித் தனர். குறித்த நில அதிர்வு கொல் கத்தா மற்றும் மேற்கு வங்கா ளத்திலும் உணரப்பட்டது.
(உ-ரி4)

## ஷிய சவூ

தெஹ்ரான், ஜன.5
47 பேரில் ஒருவர
தலைவரும் சிரச்
பட்டதை அடுத்து
"ஈரான் உறவுகள் மிக
க்கப்பட்டுள்ளன.
பரஸ்பரம் தூதுவர்க
மாறு உத்தரவிட்டுள்
இஸ்லாம் மதத்தில்
களாகஷியாமற்றும்சுன
கின்றன. இந்த இரு
போதும் ஒன்றை ஒன்
ஈரானில் ஷியாக் கள்
யாக வசிக்கின்றன
காரமும் அவர்களிட
சவூதியில் சுனிகள்
யாக இருக்கின்றனர்.
வசமுள்ளது.
சவூதி அரேபிய
அண்மையில் 47
பேருக்கு சிரச் சேதப்
மூலம் சாவுத் தண்
டனை நிறைவேற்றி
யது. அதில் ஷிய
பிரிவு மதத் தலைவ
ஒருவரும் அடங்
கினார். அவருக்குத்
தண்டனை நிறைவேற்
றப்படுவதை ஈரான்
தொடர்ந்து எதிர்த்து
வந்தது. அதனைக்
கருத்தில் எடுக்காமல்
சவூதி தண்டனையை
நிறைவேற்றியது. இ
பெரும் கொந்தளிப்ப
தலைநகர் தெகரானி
தூதரகத்தை மக்கள்
கினர். இதற்குப் பதி
நாட்டில் இருந்து ஈர

## பிரிட்டிஷ

லண்டன், ஜன. 5
பிரித்தானிய உளவா
5 பேரை ஐ.எஸ். தர
கொன்றுள்ளனர்.
கொலைசெய்யும்போ
காணொலியும் வெ
ளது.
இஸ்லாமிய அரசின்
ராக்காவில் தான் இரு
ஒரு நபர் விவரிப்பது
காணொலி ஆரம்ப
ணர் பாலைவனப் பகு
அணிந்த துப்பாக்கின
செம்மஞ்சள்நிற ஆ
நபர்களின் தலையில்
சுடுகின்றனர். இதன்
தானியப் பிரதமர்

# ஐ.எஸ். தற்கொலைத் தாக்குதல் 12 பேர் ஈராக்கில் உயிரிழப்பு

பக்தாத், ஜன.5
ஈராக்கின் திகிரித் நகரில் உள்ள முன்னாள் அமெரிக்க இரா ணுவ முகாமில் இருந்த ஈராக் இராணுவத்தினர் மீது இஸ் லாமிய அரசு (ஐ.எஸ்.) அமைப் பினர் நடத்திய தாக்குதலில் பலர் உயிரிழந்தனர்.
ஞாயிறு காலை இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் 12 ஈராக் பாதுகாப்புப் படையினர் கொல் லப்பட்டனர்; 20 பேர் காயம டைந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பொலிஸ் அணிக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள்.
முகாமின் மேற்கு பகுதி வாயி லில் 5 தற்கொலையாளிகள் குண்டுகளை வெடிக்க வைத் தனர். தாக்குதலை தாமே நடத் தினர் என ஐ.எஸ். அமைப்பினர் பொறுப்பேற்றனர்.
"நிராகரிக்கப்பட்ட படையின் பயிற்சியாளர்களை இலக்கு வைத்தோம்" என்று ஐ.எஸ். விடுத்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.
அண்மையில்தான் ரமாடி நக ரம் ஈராக்கிய துருப்புகளால் ஐ.எஸ். அமைப்பினிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இதற்குப் பதி லளிக்கும் வகையில் இந்தத் தாக்குதல் ரமாடி நகர எல் லையில் நிகழ்த்தப்பட்டது என்கிறது ஐ.எஸ்.
ரமாடியை தாம் கைப்பற்றி விட்டதாக அரசு அறிவித்த போதும் வட - கிழக்கு மாவட் டங்களில் பலத்த மேதல்கள் இடம்பெறுவதாகவும், ஈராக்கிய படையினர் அதிக இழப்புக ளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்றும் அங்கு சென்று வந்த பி.பி.சி. ஊடகவியலாளர் தெரிவித்தார். (உ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீறல்: குற்றம் சாட்டுகிறது வியட்நாம்



"வியட்நாம் நாட்டுக்கு சொந்த மான ஸ்ப்ராட்லி தீவுக்கு அருகில் உள்ள பகுதியில்சீனா அத்துமீறிவிமானசோதனை ஓட்டம் நடத்தியுள்ளது. இது வியட்நாமின் இறைமையை அவமதிக்கக்கூடிய செயலாகும். இருநாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தையும் மீறுவது போன்ற செயலாகும். இந்தச் செயலை மீண்டும் தொடரக்கூடாது என்றும் சீனாவிடம் எச்சரிக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

சீனாவால் உருவாக்கப்பட்டுள்ள செயற்கையான விமானத் தளமானது, சீனா வின் இராணுவப் பாவனைக்கு பயன்படுத்த உருவாக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமெரிக்க வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் பூஜா ஜுன்ஜுன்வாலா,"புதிய கட்டுமான விடயங்களையும், இராணுவ மயமாக்கல் தொடர்பான பதற்ற நிலையையும் குறைக்க முயற்சி செய்கிறோம், அத்துடன் பிரதேச உறுதிப்பாட்டையும் கருத்தில் கொண்டு ராஜதந்திர தீர்வுகள் எடுக்க முயற் சிப்போம்" என்றார்.

தெற்கு சீன கடலுக்கு சீனா மற்றும் வியட்நாம் அல்லாமல் மலேசியா, புருனே, பிலிப்பைன்ஸ், தைவான் ஆகிய நாடுகளும் உரிமை கோருகின்றன.

(உ-ரி4)

# யா தலைவர் கொலையால் வூதி - ஈரான் உறவு பாதிப்பு

## மத்திய கிழக்கில் பெரும் பதற்றம்

ஜன.5

ஒருவராக ஷியா மதத்
ம் சிரச் சேதம் செய்யப்
அடுத்து சவூதி அரேபிய
வுகள் மிக மோசமாகப் பாதி
ளன. இரு நாடுகளும்
தூதுவர்களை வெளியேறு
ரவிட்டுள்ளன.
மதத்தில் இரு பெரும் பிரிவு
மற்றும்சுனிஆகியனவிளங்கு
ந்த இரு பிரிவுகளும் எப்
றை ஒன்று எதிர்க்கின்றன.
யாக் கள் பெரும்பான்மை
க்கின்றனர். ஆட்சி அதி
வர்களிடமே இருக்கின்றது.
சுனிகள் பெரும்பான்மை
கின்றனர். ஆட்சி அவர்கள்
ரேபியா
பில் 47
ரச் சேதம்
வுத் தண்
றவேற்றி
ல் ஷியா
தலைவர்
அடங்
வருக்குத்
நிறைவேற்
த ஈரான்
எதிர்த்து
அதனைக்
டுக்காமல்
டனையை
றியது. இதனால் ஈரானில்
ந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.
தெகரானில் உள்ள சவூதித்
த மக்கள் அடித்து நொறுக்
ற்குப் பதிலடியாகத் தனது
ருந்து ஈரானியத் தூதரை

வெளியேறுமாறு சவூதி உத்தரவிட்டது. இதற்கான உடனடி நடவடிக்கை யாக சவூதித்தூதரை தெகரானை விட்டு வெளி யேறுமாறு ஈரானும் உத்தரவிட்டுள்ளது.

ஈரானுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் நிலவும் முறு கல் நிலை குறித்து அமெரிக்கா அதிக கவலை அடைந்துள்ளது. இஸ்லாமிய அரசுக்கு (ஐ.எஸ்.) எதிரான போரில் இதுவரையில் ஈரான் அமெரிக்காவுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தது. இப்போது ஏற்பட்டுள்ள பதற்றம் இந்த விடயத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் சவூதி, அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடு. ஈரானில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சி நிலை ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என அமெரிக்கா அச்சமடைந்துள்ளது.

> மத்திய கிழக்கில் பதற்றத்தைத் தணித்து மீண்டும் உறுதியை நிலைநாட்டத் தேவையான ராஜதந்திர நகர்வுகளை மேற் கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித் துள்ளது.



மத்திய கிழக்கில் பதற்றத்தைத் தணித்து மீண்டும் உறுதியை நிலைநாட்டத் தேவையான ராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி, "வேறுபாடுகளினூடாக விடயங்களைக் கையாளும்போது இராஜதந்திர உறவுகளும், நேரடித் தொடர்புகளும் மிக முக்கியமானவை. பதற்ற நிலையைக் குறைப்பதற்காக இரு தரப்பினரையும் உடன்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியை முன்னெடுப்போம்" எனத் தெரிவித்தார்.

இந்த நிலமை மோசமானது என அமெரிக்க அதிகாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

இந்த நிலமையினால் அமெரிக்க - சவுதி அரேபிய உறவுசுவப் பாதிக்கப்படும் என அஞ்சுகின்றனர்.

(உ-ரி4)

# டிஷ் நபர்கள் ஐவரைச் சுட்டுக் கொன்றது ஐ.எஸ்.

ஜன. 5

உளவாளிகள் என குற்றம்சாட்டப்பட்ட
.எஸ். தரப்பினர் சுட்டுக்
ளனர். அவர்களைக்
ய்யும்போது எடுக்கப்பட்ட
யும் வெளியிடப்பட்டுள்

அரசின் தலைநகரான
தான் இருக்கிறார் என்று
விவரிப்பதுடன் அந்தக்
ஆரம்பமாகிறது. பின்
வனப் பகுதியில் முகமூடி
ப்பாக்கி வைத்திருப்போர்
ர்நிற ஆடை அணிந்த
தலையில்துப்பாக்கியால்
ர். இதன் பின்னர் பிரித்
பிரதமர் டேவிட் கம

ரூனுக்கு ஒருவர் எச்சரிக்கை விடுத்தார். பிரித்தானியாவுடன் போரிடப்போவதாகவும் அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டது.



குறித்த காணொலி, உலகளாவிய ரீதியில் ஜிகாதிகளை அவதானிக்கும் உளவுத்துறை நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டது. ஆனால் பிரித்தானியத் தரப்பினர் குறித்த காணொலியை உறுதிப்படுத்தவில்லை. இது தொடர்பாக அதிக கவனத்துடன் இருப்பதாகவும், மேலும் ஆராய்வதாகவும் வெளியுறவு ஊடகப் பேச்சாளரால் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான வீடியோக்களை வெளியிடுவதன் மூலம் ஐ.எஸ். தனக்கு ஈராக்கில் ஏற்பட்ட தோல்வியை மறைக்க எத்தனிப்பதாகவும், மக்கள் மத்தியில் பயத்தை உருவாக்க முயற்சிப்பதாகவும் அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தனர். (உ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் மிகச்சிறிய பறக்கும் கமரா

நியூயோர்க், ஜன.5

அக்சிஸ் விடியஸ் என்ற நிறுவனம் உலகிலேயே மிகச்சிறிய பறக்கும் கமராவை தயாரித்துள்ளது. 1.5 அங்குல அளவுக்கும் குறைவான மிகச்சிறிய குவாட்காப்டர் விமானத்தில் இந்த கமரா பொருத்தப்பட்டுள்ளது. இதன் எடை 0.55 பவுன்டுகளைவிட குறைவானதாகும்.

2.4 ஜிகாஹேர்ட்ஸ் கட்டுப்படுத்தியுடன் (ரிமோர்ட் கொன்ட்ரோலர்) வெளிவரும் இந்தக் கமராவை ஆன்ட்ராய்டு, ஆப்பிள் ஸ்மார்ட்போன் அல்லது டேப்லட்டை பயன்படுத்தி நாம் இயக்கலாம். 360 பாகைக்கும் சுழலக்கூடிய இந்த கமரா 100 அடி உயரம் வரை பறக்கும்.

வை-பை இணைய இணைப்பு வழியாக இந்த கமராவில் வானில் இருந்து பதிவு செய்யப்படும் வீடியோ நேரடியாக ஸ்மார்ட்போனுக்கு அனுப்பப்படுகிறது.

அதற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள் மூலம் உடனடியாக படம் பிடித்துக் கொண்டிருக்கும் வீடியோவை சமூக வலைத்தளங்களிலோ, மின்னஞ்சலிலோ பகிர்ந்து கொள்ள முடியும். அதிகபட்சமாக 420 பிக்சல்கள் வரை படங்களை ஓரளவுக்கு தெளிவாக படம் பிடிக்கிறது இந்தக் குட்டிக் கமரா.

வீடியோ மட்டுமல்லாது, புகைப்படங்களையும் எளிதாக எடுக்க முடியும். ஆனால், இதில் 150 எம்.ஏ.எச். அளவே பற்றரி இருப்பதால் 20 நிமிடங்களுக்கு சார்ஜ் செய்தால் அதிகபட்சமாக 5-7 நிமிடங்கள் வரை மட்டுமே இந்தக் கமராவால் வானில் பறக்க முடியும்.

அதனைச் சுமந்து செல்லும் சிறிய விமானத்தின் நிலைமையை பொறுத்து 3 அளவுகளில் பறக்கும் வேகத்தை நாம் கட்டுப்படுத்தலாம். இதில் உள்ள 6 ஆக்சிஸ் சைரோவின் தொழில்நுட்பம் சிறிய கமராவை சுமந்து செல்லும் மிகச்சிறிய விமானத்தை காற்றின் வேகத்தால் நிலைகுலைந்துவிடாமல் நிலையாகப் பறக்க உதவி செய்கிறது. இரவு நேரங்களில் பறக்க விடும் போது நாம் எளிதாக இந்தச் சிறிய கமராவை கண்காணிக்கும் வகையில் கலர் கலரான எல்.இ.டி பல்புகளும் உள்ளன.

நிறை குறைவாக இருப்பதால் இதைப்பறக்கவிட அதிக அளவில் கட்டுப்பாடுகள் இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாதம் 7ஆம் திகதி முதல் விற்பனைக்கு வரவுள்ள இந்தச் சிறிய விமான கமரா 95 டொலர்களுக்கு விற்கப்பட உள்ளது. (உ-ரி4)

# நேர்மையும், துணிச்சலும் கொண்ட குமார் பொன்னம்பலம்

## அன்னாரது 16 ஆவது நினைவு தினம் இன்றாகும்

மு.ஈழத்தமிழ்மணி

ஈழத்தமிழினத்தின் விடுதலை தான் முக்கியமென அதனைத் தனதுமூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும், தனது வாழ்வின் குறிக்கோளாகவும் கொண்டு வாழ்ந்த, ஈடுஇணையற்ற, வரலாற்றில் பதிவாகிய தலைவரான குமார் பொன்னம்பலத்தின் 16 ஆவது நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

**அரசியல் நடவடிக்கைகளில் போராட்டம்**

1938 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம்திகதிபிறந்த குமார்பொன்னம்பலம் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்று 1974 ஆம் ஆண்டு பாரிஸ்டராகப் பட்டம் பெற்றார். 1966 ஆம் ஆண்டில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் வாலிப முன்னணிச் செயலாளராக அரசியலில் குமார் பிரவேசித்தார். பின்னர் தந்தையின் மறைவுக்குப் பின்னர் அந்தக் கட்சியின் தலைவராகவும் விளங்கினார்.

1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குமார் பொன்னம்பலத்தினது அரசியல் நடவடிக்கைகள் பெரும் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய தேவைக்குள்ளானது. அரசியல்வாதியாக மட்டுமல்லாமல் அரசியல் அரங்கில் அவர் ஒரு ஜாம்பவானாகவே மாறினார். குமார் பொன்னம்பலம் இனத்தின் விடுதலைக்காக இறக்கும் வரை குரல் கொடுத்து வந்தவர். சிங்கள அடக்குமுறையாளர்களின், ஆக்கிரமிப்புக்காரர்களின், மனித உரிமை மீறல்களை எதிர்த்து எழுந்த அவரது குரல் தனித்து நின்று பலமாகவும், துணிவாகவும் தலைநகரில் ஓங்கி ஒலித்தது. ஆரம்ப கால நாள்களில் அவர் எதையும் அகிம்சை முறையில் சாத்வீகப் போராட்டங்களில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை வைத்திருந்தார். எல்லோரையும் இலகுவாக நண்பர்களாக்கிக் கொள்ளும் தமது இனிய சுபாவத்தினாலும், மனம் திறந்த வெளிப்படையான பேச்சினாலும், கஷ்டத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்கின்ற பரோபகார சிந்தனையாலும் அவருக்குச் சாதி, மத, பேதமற்ற நண்பர்கள் பலர் இருந்தனர்.

**சந்திரிகாவுக்குச் சிம்ம சொப்பனம்**

முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகாவின் ஆட்சிக்கு குமார் பொன்னம்பலம் சிம்ம சொப்பனமாக விளங்கினார். தமிழ் மக்களுக்கு எதிரான போரை சந்திரிகா அரசானது தீவிரமாக மேற்கொண்டிருந்தது.1988 இல் இருந்து குமார் பொன்னம்பலம் தனது அரசியல் செயற்பாடுகளை கொழும்பிலிருந்து தீவிரப் படுத்தினார். ஒரேயொரு நோக்கத்துக்காகவே குமார் பொன்னம்பலம் உழைத்தார். அது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கமாகும்.

குமார் பொன்னம்பலம், சந்திரிகா அரசில் ஓர் அமைச்சராக இருந்தவரான அஷ்ரப்பிடம் வடக்கில் நீங்கள் எடுத்துச் செல்லப்போகின்ற தீர்வுப்பொதியில் என்ன விடயங்கள் அடங்கியுள்ளன என்று கேட்டபோது, அப்படிபட்ட எந்தத் தீர்வும் கிடையாது என அஷ்ரப் கூறினார். தமிழினத்தை ஏமாற்றும் கொள்கையை சந்திரிகாவும் கடைப்பிடித்தார் என்பதை தெளிவாகப் புரிந்து கொண்ட குமார் பொன்னம்பலம் தனது போராடுகின்ற உணர்வுடன் செயற்பட்டார்.

**சிறைகளில் அடைக்கப்பட்டவர்களுக்கு உதவிகள்**

நாட்டில் போர் ஆரம்பித்த காலப்பகுதியிலிருந்து சந்தேகத்தின் பேரில் பல தமிழர்கள் சிங்கள அரசுகளால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகினர். இனவெறிச் சட்டங்களால் சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் மக்களை விடுவிப்பதற்காக தனது சட்டத் தொழிலின் பெரும் பகுதி நேரத்தை அர்ப்பணிப்புடன் செலவிட்டிருந்தார். தமிழ் அரசியல் கைதிகளின் 95 வீதமான வழக்குகளை குமார் பொன்னம்பலமே கையாண்டிருந்தார். கைதிகளின் வழக்குகளுக்காக எந்தவித கட்டணங்களையும் பெறாது இலவசமாகவே வாதாடியிருந்தார். இதனைத் தனது கடமையாகவே பொறுப்பேற்றுக் கொண்டார். அரசின் பல சதிமுயற்சிகளுக்கு குமார் பொன்னம்பலம் அசைந்து கொடுக்கவில்லை. மாறாக தனது செயற்பாடுகளை அவர் தீவிரப்படுத்திப் பதிலடி கொடுத்திருந்தார். சட்டத்துக்குப் புறம்பான வகையில் தமிழர்களை இம்சைப் படுத்துகின்ற 'பாஸ்' நடைமுறை மற்றும் அடையாள அட்டைகளுடன் உலாவவேண்டும் என்ற படையினரின் உத்தரவுகளை நேரடியாகச் சந்திக்கும்போது அவற்றுக்குப் பணிய மறுத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு சட்ட ரீதியாக சவால்களை விடுத்திருந்தார்.

குமார் பொன்னம்பலம் நேர்மையையும், வெளிப்படையாகப் பேசுவதையுமே தனக்குப் பொருத்தமான ஆயுதங்களாகக் கொண்டிருந்தார். அந்த வகையில் அவற்றை எதிர்பார்க்க முடியாத வீரியத்துடன் பயன்படுத்தியவர் என்பது பலராலும் அறியப்பட்ட ஒன்றாகும்.

அரசின் நீதிக்கு விரோதமான நடவடிக்கை என்பதால் தேசிய அடையாள அட்டையை அவர் கொண்டு செல்வதில்லை. இலங்கை இராணுவம் அவரை அடையாள அட்டை கொண்டு செல்லாத காரணத்தால் கொழும்பு ரயில் நிலையத்துக்கு முன்னால் மறித்து நிறுத்தியது. குமார் பொன்னம்பலம் நடந்து கொண்ட விதம் எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பகிரங்கமாக இலங்கை இராணுவத் தலைமைத் தளபதிக்கு தேசிய அடையாள அட்டையை ஒரு போதும் எடுத்துச் செல்லமாட்டேன், எனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமானால் எடுங்கள் என்று சவால் விட்டார்.

**வார்த்தை ஜாலங்கள் இல்லாதவர்**

பிற அரசியல் கட்சித் தலைவர்களைப் போன்று அவர் வார்த்தை ஜாலங்களால் அரசியல் நடத்தவில்லை. துணிவுடன் பல காரியங்களைச் சாதித்தவர். மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச் சோலையில் 70 பொது மக்களினது படுகொலைச் சம்பவத்தின்போது அதை விமர்சித்ததுடன், அந்த விசாரணைக்குத் துணிவுடன் முன்னிலையாகியிருந்தார். பிற சட்டத்தரணிகள் தயக்கம் காட்டியிருந்த நிலையிலும், குமார் பொன்னம்பலம் துணிச்சலோடு முன்னிலையாகியிருந்தார்.

செம்மணியில் படையினரால் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கிரிசாந்தி குமாரசாமி கொலை வழக்கிலும், யாழ். பெண்கள் மனித உரிமைகள் சங்கத்தின் சார்பில் முன்னிலையாகியிருந்தார். இது போன்ற மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குமார் பொன்னம்பலம் முன்னிலையாவதற்குப் பின்னின்றதில்லை.

> கைதிகளின் வழக்குகளுக்காக எந்தவித கட்டணங்களையும் பெறாது இலவசமாகவே வாதாடியிருந்தார். இதனைத் தனது கடமையாகவே பொறுப்பேற்றுக் கொண்டார். அரசின் பல சதிமுயற்சிகளுக்கு குமார் பொன்னம்பலம் அசைந்து கொடுக்கவில்லை.

காலம் காலமாக இலங்கையில் கைது செய்யப்படுகின்ற அப்பாவித் தமிழ் இளைஞர்களுக்கும், தமிழ் யுவதிகளுக்கும் எதிரான வழக்குகளில் முன்னிலையாகி வாதிட்டவர். அவர்களுக்கான நீதி கிடைக்க குமார் பொன்னம்பலம் ஆற்றிய பணி அளப்பரியது. இன்றும் உலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற இளைய தலைமுறையினரின் இதயங்கள் அவரது நாமத்தை, அவரினதுநினைவுகளைப் புரட்டிப் பார்க்காமலில்லை.



2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதியன்று மனித உரிமைக்காகக் குரல் கொடுத்து வந்த துணிகரமிக்க தமிழ்த் தலைவரான குமார் பொன்னம்பலத்தின் குரல் ஓய்ந்து விட்டது.

துணிச்சலோடு பேசினாலும் அரசியல் ரீதியிலோ அல்லது தனிப்பட்ட ரீதியிலோ குமார் பொன்னம்பலம் எவருடனும் பகைமை பாராட்டியதும் இல்லை. வன்மம் சாதித்ததுமில்லை. பழி வாங்கியதுமில்லை. அவர் விமர்சிக்கும்போது உணர்ச்சி பூர்வமான வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வெடிக்கும். தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பில் அவர் கொண்டிருந்த அசட்டுத் துணிச்சல் காரணமான நிலைப்பாடுதான் அவர் படுகாலை செய்யப்படுவதற்கான காரணமாக அமைந்தது எனலாம்.

அமரர் குமார் பொன்னம்பலத்தை இழந்து இன்றுடன் 16 ஆண்டுகளாகி விட்டன. இன்று தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் சர்வஷேதசத் தின் மத்தியில் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், கொழும்பிலிருந்து சிங்கத்துக்கே சவால் விட்ட தமிழன் மாமனிதர் குமார் பொன்னம்பலம் இல்லையே என்றும் கவலை இன்றும் தமிழர்கள் மத்தியில் நிரந்தரமாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.மகேஷ்

# கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்டுள்ள தமிழ் நூல்கள்

# தரம் ஒன்றிலே கற்கும் சிறுவர்களுக்குப் பொருத்தமானதா?

**2016** ஆம் ஆண்டு அறிமுகமாகும் புதிய கலைத்திட்டத்துக்கு அமைவாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தரம் ஒன்றில் கற்கும் சிறுவர்களுக்காக இரண்டு தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளது. அவற்றுள் ஒன்று தமிழ் செயல் நூல் எனவும் மற்றையது தமிழ் பாடநூல் எனவும் பெயரிடப்பட்டுள்ளன.

இத்தமிழ் நூல்கள் தரம் ஒன்றில் கற்கும் சிறுவர்களின் தமிழ் மொழியறிவை மேம்படுத்தும் நோக்குடனேயே ஆக்கப்பட்டுள்ளன என்பதை முழுமையாக நம்பும் அல்லதுஎதிர்பார்க்கும்நிலையில், அவற்றில் காணப்படும் தமிழ் மொழி வழுக்களை எவரும் மௌனமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

தரம் ஒன்று தமிழ்ப் பாடநூல் 27 தலைப்பிடப்பட்ட உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. முதலில் செல்லக்குட்டி என்று தலைப்பிட்டுத் தரப்பட்டுள்ள நாய்க்குட்டி பற்றிய பாடல் ஒன்று உள்ளது. தொடர்ந்து என் பந்து என்ற பாடல் இடம் பெற்றுள்ளது. இவை இரண்டும் வாசித்துப் பாடிக் கற்கப் பொருத்தமானவையாகவுள்ளன. கவிஞர் த. துரைசிங்கம் அவர்களால் இயற்றப்பட்ட இவைகள் ஓசையெழுப்பிப் பாடவும் வாசிக்கவும் பொருத்தமானவையே.

பாடல் பாடுவோம் என்ற தலைப்புடன் அடுத்து வரும் பாடம், பறவைகள், மிருகங்கள் என்பவற்றின் ஒலிகளையும் வாத்தியமான மேளத்தில் இருந்து பிறக்கும் டம்.. டும்.. என்ற ஒலியையும் ஒலிக்கச் செய்யும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளது.

### கதை கேட்போம் என்ற பாடம்

கதை கேட்போம் என்ற பாடத்தில் தரப்பட்டுள்ள குரங்குகளும் முதலையும் என்ற கதை ஆபத்தில் உதவுவதே உண்மையான கருணை என்ற கருவை விளக்கும் என்ற வகையில் எழுதப்பட்டுள்ளது. கதைப் பாத்திரங்களான குரங்குகள் முதலை வேடன் ஆகியோருக்கு இடையேயான கதைப் பொருத்தம் சிறுவர்களைக் குழப்பமடையவே செய்யும். குரங்குகளை வேடன் வேட்டையாடுவதற்கான காரணம் தெளிவில்லை. வேடன் ஒருவன் வேட்டையாடும் மிருகமோ பறவையோ அவனது உணவுக்குப் பயன்படுத்தப்படுவதே வழக்கம். இந்த வேடன் குரங்கை வேட்டையாடிஎன்னசெய்யப்போகின்றான் என்ற வினா பெரியவர்களிடத்திலே எழுந்திருக்கும் நிலையில், சிறியவர்களின் சிந்தனை எவ்வாறு அமையும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. குரங்குகளைக் காப்பாற்றும் நல்லெண்ணம் முதலைக்குஏற்படுகிறது. ஆனால், மனிதனான வேட னுக்கு அத்தகைய எண்ணம் ஏற்படாமற் போனமை மன வருத்தத்திற் குரியதாகவே கொள்ளப்படலாம். சிறுவர்களுக்கான வாசிப்பு நூலாக இதனைப் பார்த்தால் ஒவ்வொரு வாக்கியமும் மூன்று சொற் களுக்குள் அமைந்து இலக்கணம் குலை யாத வாக்கியமாக அமைந்திருத்தல்நன்றாகும். இக்கதையில் தரப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களை நோக்குவோம். மகிழ்ந்த குரங்குகள் ஒரு வேடனைக் கண்டவுடன் பயந்து ஓடின. ஓடியவை குளத்தில் பாய்ந்து நீரில் நீந்த இயலாது தவித்தது. முதலாவது வாக்கியத்தில் எழுவாயாக அமையும் குரங்குகள் என்ற சொல் மகிழ்ந்த என்ற பெயரெச்சத்தை ஏற்றுள்ளது. இரண்டாவது வாக்கியம் ஓடியவை என்ற பன்மைச் சொல்லாகி செயலாகுபெயரை எழுவாயாகக் கொண்டு தொடங்கி, தவித்தது என்ற ஒருமை எண் தந்து முற்றுப் பெற்றுள்ளது. இவை சிறுவர்களிடத்தில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படுத்த வேண்டிய பிழையற்ற மொழி அறிவைச் சீர்படுத்த உதவுமா? என்பதே எமக்குள்ள சந்தேகமாகும். அத்துடன் குளத்தில் பாய்ந்து என்ற சொற்கள் புணர்ச்சி விதிக்கு உட்படாமல் எழுதப்பட்டுள்ளமையால் சொற்கள் சேர்த்து வாசிக்கப்படும்போது ஏற்படும் குளத்திற் பாய்ந்து என்ற மாற்றத்தை உணராநிலை தொடர்கிறது.

### நிறங்கள் என்ற பாடம்

நிறங்கள் என்ற பாடம் நிறப்படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளமை சிறப்பானது. கட்டளைகள், அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் எனத் தரப்பட்டுள்ள விடயங்கள் தலைப்புகளுக்குப் பொருத்தமானவை எனக் கருதினாலும், கட்டளைகளுக்குள் அறிவுறுத்தல்களும் உள்ளடங்குவதான மயக்கநிலை ஏற்படவே செய்கின்றது. சொற்றொடர்களை வாசிப்போம் என்ற தலைப்பின் கீழ்த் தரப்பட்டுள்ளவைகளில் வாக்கியங்களும் உள்ளனவா என்ற சந்தேகம் எழவே செய்கிறது. வெள்ளை முயல் என்பதைச் சொற்றொடர் என நோக்குகையில் ஆதவன் காலையில் உதிக்கும் என்ற வாக்கியத்தைச் சொற்றொடர் எனவும் பார்க்கலாமா? என்ற கேள்வி எழுகிறது.

> “கட்டளைகள், அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் எனத் தரப்பட்டுள்ள விடயங்கள் தலைப்புகளுக்குப் பொருத்தமானவை எனக் கருதினாலும், கட்டளைகளுக்குள் அறிவுறுத்தல்களும் உள்ளடங்குவதான மயக்கநிலை ஏற்படவே செய்கின்றது.”

பிராணிகளின்ஒலிகள்எனத்தலைப்பிட்டு, குரைக்கும், கரையும், பேசும் எனப் பிராணிகளின் ஒலியைக் குறிக்கும் மரபுச் சொற்கள் தரப்பட்டுள்ளன. தொடர்ந்து பிராணிகளின் ஒலிகள் என்ற அதே தலைப்பிட்டு அடுத்துவரும் பாடத்தில் வள்..வள்..வள் என்றும் கா..கா..கா. என்றும் கீ..கீ..கீ. என்றும் அவை ஒலிக்கும் வகை கூறப்பட்டுள்ளது. மரபுச் சொற்களுக்கும் ஒலிவடிவத்திற்கும் உள்ள வேறுபாடு விளக்கமின்றிக் குழப்பமடைவதை இங்கு பார்க்கலாம்.

### ஓரெழுத்துச் சொற்களுக்கு வியாக்கியானம்

தொடர்ந்துவரும் பாடத்தில், எழுத்துக்கள் என்ற தலைப்பில் ஓரெழுத்துச் சொற்களுக்கு வியாக்கியானம் தரப்படுகிறது. உதாரணமாக ஈ என்ற சொல் குறிக்கும் இலையான், எங்கள் வீடுகளில் பிள்ளைகள் தினமும் கண்டறிந்த பூச்சியாகும். அதைக் குறிக்கும் எழுத்து என்றுமே பறந்து செல்வதில்லை. அது சொல்லாகக் கணிக்கப்படும்போது ஒரு பூச்சியைக் குறித்து பேசப்படும்; அவ்வாறே தீ என்ற எழுத்து என்றுமே சுடுவதில்லை கை என்ற எழுத்து உதவுவதோ போ என்ற எழுத்துத் துரத்துவதோ இல்லை. இந்த நிலையில் சிறுவர்களின் சிந்தனையில் அவ்வெழுத்துக்கள் சொல்லாக மாற்றமுறும்போது எண்ணக்கரு பெயராகவோ செயலாகவோ மனத்திலெழும். இங்கே அந்த நிலை ஏற்படாத வகையில் எழுத்துக்கள் பொருள்தர லாமா? எழுத்துகளுக்கும் சொற்களுக்கும் இடையேயான மயக்கம் தொடரவே செய்யும். இத்தகைய வாசிப்பு தரம் ஒன்றில் கற்கின்ற சிறுவர்களின் மொழி விருத்திக்கு எவ்வாறு உதவும் என்பதில் தெளிவில்லா நிலை காணப்படுகின்றது. சொற்களும் வாக்கியங்களும் இலக்கண விதிப்படி அவற்றுக்குரிய மொழி வளம் தரும் முறையில் அமையாதிருப்பின், தமிழ் மொழியின் செம்மை குலைந்துவிடும்.




ஓரெழுத்துச் சொற்களை விடுகதை மூலம் அல்லது புதிர் மூலம் ஆரம்ப வகுப்புச் சிறுவர்களுக்கு அறிமுகம் செய்வது பொருத்தமானதா? என்பதை ஆய்வுக்கு உட்படுத்துவது நலமானதென எண்ணுகிறேன்.

வாசிப்போம் என்ற வகையில் குறில் நெடில் ஓசைச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவை ஓசை எழுப்பி வாசிக்கவும் குறில் நெடில் வேறுபாடுகளை விளங்கிக் கொண்டு வாசித்தலைத் தொடரவும் மிகவும் பொருத்தமானவையே.

அடுத்து வரும் சுயவிபரம் என்ற பாடம் தமிழ்ப் பாடநூலில் சேர்க்கப்பட்டுள்ளது. கீறிட்ட இடங்களை அல்லது இடைவெளிகளை நிரப்பும் வகையில் அங்கே வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன.

சிறுவர்களைச் செயற்பாட்டுக்குத் தூண்டவும் எழுதவும் தரப்படும் பயிற்சிகளுக்கெனத் தரம் ஒன்றுக்குத் தனியான தமிழ் செயல் நூல் அச்சிடப்பட்டுள்ள நிலையில், பாடநூலில் சுயவிபரம் இவ்வாறு அமைந்திருப்பது பொருத்தமானதா என்பதைச சற்றுச் சிந்திக்க வேண்டுகிறேன். வாசிப்புக்குப் பொருத்தமானவை பாடநூலில் சேர்க்கப்படுவதும் செயற்பாடுகளில் ஈடுபடப் பொருத்தமானவை செயல் நூலில் சேர்க்கப்படுவதும் சிறப்பானது எனக் கருதுகிறேன். தொடரும் ஆத்திசூடி வழமையானதே.

### புணர்ச்சி விதிகள் பேணப்படவில்லை

புதிர்கள் விடுகதைகள் என்பவற்றோடு இந்நூலில் தரப்பட்டுள்ள தகவல்கள் சிந்தனைக்கும் அறிவு விருத்திக்கும் பொருந்தும். எனினும், மொழி சார்ந்த திறன்கள் எவ்வகையில் இச்சொற்றொடர்களை அல்லது இவ்வாக்கியங்களைக் கற்பதன் மூலம் சிறுவர்கள் பெற்றுக் கொள்ளுதல் சாத்தியமாகலாம் என்பதைச் சிந்திப்பது அவசியமானதாகும்.

சிங்கம், ஆபத்தில் உதவுதல், காகமும் குருவியும், பெரியவர், பட்டம் ஆகிய சிறுவர் கதைகளில் அமைந்துள்ள வாக்கியங்கள் பெரும்பாலானவை பல சொற்களால் ஆக்கப்பட்டு நீளமானவையாக உள்ளன. அத்துடன் கதைகளைச் சொல்லும் வாக்கியங்களிலும் சொற்றொடர்களிலும்புணர்ச்சிவிதிகள்பேணப்படவில்லை. உதாரணமாக என்னை சாப்பிட்டு விடுவாய், என்பதை என்னைச் சாப்பிட்டு விடுவாய் எனவும், அந்த குருவிக்கும், என்பதை அந்தக் குருவிக்கும், எனவும் என்று எண்ணி திருட் டுத் தொழிலை என்பதை என்று எண்ணித் திருட்டுத் தொழிலை எனவும், அப்பா தம்பிக்கு பட்டம் என்பதை அப்பா தம்பிக்குப்பட்டம்; எனவும் வேகமாக காற்று வீசியது என்பதை வேகமாகக் காற்று வீசியது எனவும் வானத்தை பார்த்தவாறு என்பதை வானத்தைப் பார்த்தவாறு எனவும் எழுதுவதே மொழிச் சிறப்புடையதாகும்.

*- கட்டுரையாளர்*
*ஆரம்பக்கல்வி ஓய்வுநிலை*
*உதவிக் கல்விப் பணிப்பாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1945 – சோவியத் அரசுக்குச் சார்பான போலந்துநாட்டை சோவியத் யூனியன் அங்கீகரித்தது.

1972 – விண் ஓடம் திட்டம் ஒன்றை விருத்தி செய்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் கட்டளை பிறப்பித்தார்.

1781 – அமெரிக்கப் புரட்சிப் போர். பெனடிக்ற் அர்னோல்ட் தலைமையிலான பிரித்தானிய கடற்படையினரால் அமெரிக்காவின் றிச்மண்ட் வெர்ஜினியா எரியூட்டப்பட்டது.

1990 – ஜோன் றெட்மொண்ட் எனும் ஐரிஷ் தலைவர் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்ய அழைப்பு விடுத்தார்.

1914 – போர்ட் மோட்டார் நிறுவனம் நாள் ஒன்றுக்கு 8 மணி நேர வேலையை அறிவித்தது. ஒரு நாளைக்கான 'வாழ்க்கை ஊதியமாக' 5 டொலர்களை அறிவித்தது.

1994 – தாவடி மற்றும் சாவகச்சேரியில் புக்காரா மற்றும் சுப்பர் சோனிக் விமானத் தாக்குதல் 6 பேர் பலி; 7பேர் படுகாயம்.

1994 – அரச பிரமுகர்கள் வீடுகளின் பின்னால் புதைகுழிகள் உள்ளன என சந்திரிகா குற்றச்சாட்டு

1993 – கிளாலிப்படுகொலை. மேலும் சில சடலங்கள் கரை யொதுங்கின. கரையொதுங்கிய சடலங்களில் கத்திவெட்டு அடையாளங்கள்.

1993 – புக்கார விமானங்கள் கொழும்பு வந்து சேர்ந்தன.

1993 – அமைதியை மீண்டும் நிலை நாட்ட அரசியல்வாதிகளுக்கும் ஏனையோருக்கும் வழங்கப்பட்ட ஆயுதங்கள் மீளப்பெறப்பட வேண்டும் என நிதியமைச்சர் றொனி டிமெல் தெரிவிப்பு.

1993 – தோட்டைச் சூறையாடுவதற்கு பெண்ணின் காதை வெட்டினர். கிளாலிப் படுகொலையில் சம்பவம்.

2000 – குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொலை. கொழும்பில் முற்பகல் 11.15 மணியளவில் சம்பவம்.

2000 – நேருக்கு நேர் மோதிய ரயில்கள். நோர்வேயில் சம்பவம். 33 பேர் பலி.

2009 – வன்னியில் போர்க்குற்றங்கள்; அரசு இன அழிப்பை மேற்கொள்கின்றது. இது ஜெனிவாப் பிரகடனத்தை மீறும் செயல் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்.

2009 – வட்டக்கச்சி கண்டாவளைப் பகுதிகளிலிருந்து மக்கள் பெருமளவு இடம் பெயர்வு; இருப்பிடங்களைத் தேடிக்கொள்வதில் இடர்.

2008 – காணாமற் போனோர் மற்றும் கொலையுண்டோர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு திருகோணமலையில் பகிரங்க விசாரணையைத் தொடங்கியது. ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் நிசங்க உடலகம இதன் தலைவர்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க!



## வாய்



வாயுள்ள பிள்ளை பிழைக்கும் – அது
பழமொழி என்பது தெரியும்
வம்புகள் பேசுதற்கா வாயிருக்கு – என்றும்
வாய்மையே பேசிட அது இருக்கு!

பற்களை நன்றாய்த் தேய்க்கணும் – துர்
நாற்றத்தை விரட்டி அடிக்கணும்!
வாயைச் சுத்தமாய் வைத்திருந்தால்
வருமா பல்வலி வியாதியெல்லாம்!

# கண்ணன் கொடுத்த வரம்!

மகாபாரத்தில் வருகின்ற ஒரு சம்பவம் இது. கண்ணனும் அர்ச்சுனனும் ஒரு காட்டுப் பாதையின் வழியே நடந்து சென்று கொண்டிருந்தனர்.

அது உச்சி வெயில் நேரம். உஷ்ணம் மண்டையைப் பிளந்தது. அர்ச்சுனனுக்கோ பயங்கரத் தாகம் எடுத்தது. தொண்டையும் நாக்கும் வறண்டு போன நிலையில், நடப்பது அவனுக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

"கண்ணா! ஒரே தாகமாக இருக்கிறது. என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. எனக்குத் தண்ணீர் வேண்டும்" என்று கேட்டான் அர்ச்சுனன்.

"அர்ச்சுனா! அருகில் அருவியோ சுனையோ எதுவுமே இல்லை. அதோ... அங்கே அரண்மனை போன்ற ஒரு பெரிய வீடுதெரிகிறது. அங்கே சென்றால் உனது தாகத்துக்கு நிச்சயம் நீர் கிடைக்கும். வா அங்கு செல்லலாம்!" என்றான் கண்ணன்.

அர்ச்சுனன் தாகத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு கண்ணனுடன் அந்த மாளிகைக்குச் சென்றான்.

கண்ணன் கதவைத் தட்ட, உள்ளே இருந்து வாட்டசாட்டமான ஒரு மனிதன் கதவை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தான்.

அவனது முகம் கடுகடுப்பாக இருந்தது.

"யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று சிங்கத்தின் கர்ஜனைக் குரலில் கேட்டான்.

அப்பொழுது அர்ச்சுனன், "ஐயா! நாங்கள் வழிப் போக்கர்கள். எனக்கு ஒரே தாகமாக உள்ளது. குடிப்பதற்குச் சிறிது தண்ணீர் வேண்டும்!" என்று கேட்டான்.

உடனே அந்த மனிதன் எரிக்கும் பார்வையால் அர்ச்சுனனைப் பார்த்து "தண்ணீரும் இல்லை ஒன்றும் இல்லை. உடனே இவ்விடத்தை விட்டுச் சென்று விடுங்கள்" என்று கத்தினான்.

பிறகு 'படீர்' என்று கதவை அடைத்து விட்டு உள்ளே போய்விட்டான்.

அர்ச்சுனனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"இவன் என்ன மனிதனா, அல்லது மிருகமா? தாகத்துக்குச் சிறிது தண்ணீர் கேட்டால் இப்படி முகத்தில் அடித்தாற்போல் பேசிவிட்டுப் போகிறானே? கண்ணா.... இவனைச் சும்மா விடக் கூடாது. இவனை நன்றாகச் சபித்து விடு" என்றான் அர்ச்சுனன்.

"ஆமாம்! இவன் சபிக்கப்பட வேண்டியவன் தான். இவனது செல்வம் இப்பொழுது இருப்பதைவிட பத்து மடங்கு பெருகட்டும்!' என்று சாபம் கொடுத்தான் கண்ணன்.

அதைக் கேட்ட அர்ச்சுனன் திடுக்கிட்டு, 'கண்ணா! இதென்ன.. சாபம் கொடுக்கச் சொன்னால் அவனை வாழ்த்தி வரம் கொடுக்கிறாயே!" என்று சற்றுக் கோபமாகவே கேட்டான்.

அதைக் கேட்டு முறுவலித்த கண்ணன், "அர்ச்சுனா! அவனை நான் சபிக்கத்தான் செய்தேன். அதைப் பற்றி இப்போது விளக்குவது முக்கியமல்ல. அதைவிட முக்கியமானது உன் தாகத்துக்குத் தண்ணீரைப் பெறுவது. வா... நீரைத்தேடிச் செல்வோம்!" என்று சொல்லி விட்டு நடந்தான்.

எதுவும் புரியாமல் குழப்ப நிலையில் இருந்த அர்ச்சுனன் வேறு வழியில்லாமல் கண்ணனின் பின்னே சென்றான்.

சிறிது தூரத்தில் ஒரு விவசாயி ஒரு பசுவைப் பிடித்தபடி வந்துகொண்டிருப்பதை இருவரும் பார்த்தனர்.

"அர்ச்சுனா! ஒரு ஏழை விவசாயி வருகிறான். அவனிடம் தண்ணீர் கேட்டுப்பார்!" என்றான் கண்ணன்.

அர்ச்சுனன் அந்த விவசாயியை நெருங்கி, "ஐயா! தாகம் உயிர்போகிறது. எனக்குக் குடிக்க சிறிது தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டான்.

அதைக் கேட்ட அந்த விவசாயியின் மனம் இளகி விட்டது.

"இதோ பாருங்கள்! என்னிடம் தண்ணீர் இல்லை. எனது வீடோ வெகு தூரத்தில் இருக்கிறது. அங்கு செல்லும் வரை உங்களால் தாகத்தைப் பொறுக்க முடியாது. ஒன்று செய்கிறேன். இந்தப் பசுவிலிருந்து பால் கறந்து தருகிறேன். இதுவும் தாகம் தணிக்கும்!" என்று சொல்லிக்கொண்டே தன்னிடம் இருந்த ஒரு மண் குவளையில் பசுவின் பாலைக் கறந்துகொடுத்தான் விவசாயி.

மிகவும் மன மகிழ்வுடன் அந்தப் பாலை வாங்கிப் பருகினான் அர்ச்சுனன்.

பருகி முடித்ததும் தான் அவனுக்கு உயிரே வந்தது.

"ஐயா! என் தாகம் தணித்த உங்களுக்கு மிக்க நன்றி. வருகிறோம்!" என்று சொல்லிவிட்டு அர்ச்சுனன் நடக்க கண்ணன் அவனைப் பின் தொடர்ந்தான்.

பிறகு அவன் கண்ணனிடம் "கண்ணா! மனிதன் என்றால் இந்த விவசாயி தான் மனிதன். நான் தண்ணீர் கேட்டதும் என்னிடம் இல்லை என்று சொல்லிவிட்டு அவன் தன் வழியே சென்றிருக்கலாம். ஆனால் அதைச் செய்யாமல் தனது பசுவின் பாலைக் கறந்து கொடுத்தானே. இந்த இரக்க சுபாவமும் உதவும் மனப் பான்மையும் எத்தனை பேருக்கு வரும். ஆகவே ஏழ்மை நிலையில் இருக்கும் அந்த விவசாயிக்கு நல்ல வரம் கொடு!" என்றான்.



"வரம் தானே! கொடுத்து விட்டால் போயிற்று. அவனது ஒரே பசுமாடு இறந்துவிடட்டும்!" என்று கூறினான் கண்ணன். இந்த முறையும் அர்ச்சுனன் திடுக்கிட்டான்.

"கண்ணா! உனக்கு என்னாவாகிவிட்டது. கெட்ட குணம் கொண்டவனுக்கு நல்லவரம் கொடுக்கிறாய். நல்ல மனம் கொண்டவனை தீய சொற்களால் சபிக்கிறாய். ஏனிந்த முரண்பாடு. எனக்கு விளக்கம் தெரியவேண்டும்" என்று சற்று மிகையான கோபத்துடன் கேட்டான் அர்ச்சுனன்.

அதைக் கேட்ட கண்ணன் "அர்ச்சுனா! எனது செயல்களில் எவ்வித முரண்பாடும் இல்லை. நான் அந்தச் செல்வந்தனுக்கு நல்ல வரம் எதுவும் கொடுக்கவில்லை. சாபம்தான் கொடுத்தேன். இந்த விவசாயியை நான் சபிக்கவில்லை. நல்ல வரம்தான் கொடுத்தேன்" என்றான்.

"எப்படி?" என்று கேட்டான் அர்ச்சுனன்.

"அந்த செல்வந்தனுக்குப் பத்து மடங்கு செல்வம் பெருக வேண்டும் என்பது வரமல்ல; சாபம். எப்படித் தெரியுமா? இந்தச் செல்வத்துக்கே அவன் மனிதத் தன்மையை இழந்து இரக்க குணமே இல்லாத அரக்கனாகி விட்டான். அவன் சொத்துக்கள் மேலும் பத்து மடங்கு பெருகினால் என்னவாகும்? அவன் இன்னும் பாவங்களைச் செய்து கொண்டே இருப்பான். அப்படிச் செய்கின்ற பாவங்களுக்கெல்லாம் இறுதியில் அவனுக்குக் கிடைக்குப் போகும் கூலி என்ன..? நரகம் . இப்பொழுது சொல்... அந்த செல்வந்தனுக்கு நான் வரம்கொடுத்தேனா அல்லது சபித்தேனா?" என்றான் கண்ணன்.

அவனது விளக்கத்தைக் கேட்ட அர்ச்சுனன் அப்படியே வியப்புற்று நின்றுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலவரத்தைத் தூண்டிவிடும் கைங்கரியங்களா இவை?

போருக்குப் பிந்திய காலப்பகுதியில் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எதிராகக் குரோதப் பேச்சு, வெறுப்புணர்வுக் கருத்துகள் அதிகரித்துவந்ததுடன், கடந்தாண்டு அளுத்கம கலவரத்துடன் முன்னெப்போதுமில்லாத வகையில் அது அபாயகரமான உச்சம் பெற்றது.

கடந்தாண்டு ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இனவாதத் தரப்பு தோற்கடிக்கப்பட்டதுடன் அந்தப் பிரசாரங்களும் தற்காலிகமாக அதன் வீச்சை இழந்திருந்தன. எனினும், இன்னமும் சில மாதங்களில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், மீண்டும் தென்பகுதியில் இனவாதப் பிரசாரங்களும் கருத்துகளும் வலுவடையத் தொடங்கியுள்ளதைக் காணமுடிகின்றது.

சிங்கத்தின் இரத்தம் என்பதன் ஊடாகச் சிங்களவர்கள் சிங்கத்தின் வழித்தோன்றல்கள் என்று இனவாதத்தைப் பரப்பும் வகையில் நாட்டின் பல பகுதிகளிலும் குறிப்பாக, தென்பகுதியில் ஸ்ரிக்கர்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதன் பின்னணியில் பேரினவாதச் சக்திகள் இருப்பதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சிங்கள இனப்பற்றுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்களில் இந்த ஸ்ரிக்கர்களை ஒட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுவருகிறது. இதன் ஊடாகச் சிலர் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முனைவதாகவும் ஊடகங்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன.

குறித்த இலச்சினை பொறிக்கப்பட்ட ரீசேர்ட்டுகளும் விற்பனை செய்யப்படுகின்றன. சிங்கள மக்களைக் கவரும் வடிவத்திலும் வர்ணத்திலும் அச்சடிக்கப்பட்ட இந்தப் பொருட்கள் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.




சிங்கலே என்று பொறிக்கப்பட்ட ரீசேர்ட்டும் இலச்சினையும் 3 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதேவேளை, சமூக வலைத்தளங்களிலும் இந்தக் குறியீடுகள் பரப்பப்பட்டு இலட்சக்கணக்கான விருப்பக்குறிகள் இடப்பட்டுத் திட்டமிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறான பிரசாரங்கள் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டுக் கலவரங்களைத் தூண்டும் முன் ஆயத்த நடவடிக்கை என்று சிவில் அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. இதேவேளை, உடலில் குறித்த சின்னத்தை பச்சை குத்தும் நடவடிக்கையும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கலவரங்களின்போது சிங்களவர்களையும் அவர்களின் சொத்துகளையும் பாதுகாக்கவே இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றதா என்று கொழும்பு ஊடகங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

இதேவேளை, இது திட்டமிட்டு உருவாக்கப்படும் ஒரு செயற்பாடு என்றும், இதன் பின்னணியில் யாரோ ஒரு முக்கியஸ்தர் உள்ளார் என்றும் தெரிவித்துள்ள ராவய பத்திரிகை, இது மகிந்த ராஜபக்சவின் இனவாத எண்ணக் கருவிலிருந்து தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

இதனால்தான் குரோதப் பேச்சு, வெறுப்புணர்வுக் கருத்துகளுக்கும் பிரசாரங்களுக்கும் எதிரான சட்டங்கள் பலப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

அரசு கடந்த மாதத்தில் கொண்டுவந்ததுபோன்று அரைகுறையான சட்டவரைவுகளை வெறுப்புப் பேச்சு தொடர்பில் கொண்டு வராது முறைப்படி முழுமையான ஒரு சட்டவரைவைக் கொண்டுவந்து முற்றுமுழுதாக இனவாதப் பிரசாரத்தை முடுக்கி இனங்களின் இருப்புக்கு ஆபத்தை உண்டு பண்ணுகின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும். இதனை வெறுமனே தேர்தல் உத்தி என்று தட்டிக்கழிக்க முற்படக்கூடாது. ஏனெனில், அளுத்கம கலவரத்துக்கு வித்திட்டது இத்தகைய [illegible] பிரசார நடவடிக்கைகள் என்பதை அ[illegible] கொள்ள வேண்டும்.

கலைச்செல்வி

# எண்ணமும் இயங்கு சக்தியும்



எண்ணங்களின் சக்தி எம்மைச்சுற்றிப் பரவுகின்றன. பிறரின் எண்ணச் சக்திக்குள் நாம் வரும்போது, மாறுபாட்டை உணர்கிறோம். எமது தமிழ்ப்பாட்டு சொல்கிறது. நல்லோர் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை; என்று. எமது நாட்டு யோகிகளும், ரமணர்களும், சங்கரர்களும், ஞானசம்பந்தர்களும் தங்களுக்காக வாழ்ந்ததில்லை. துயரத்துடன் வந்தோருக்கு ஆறுதலையும், நோயுடன் துன்பப்பட்டோர்களுக்கு நிவர்த்தியையும், சஞ்சலத்துடன் வந்தோருக்கு நிம்மதியையும் வழங்கிக் கொண்டிருந்தவர்கள் அவர்கள். மனிதர்கள் சாகிறார்கள்; ஆனால் எண்ணங்கள் சாவதில்லை. அவை காற்றில் மிதக்கின்றன. திட்டம், உங்கள் பாதைக்கு அதன் நிஜத் தன்மையைக் குறித்து ஒரு நிதர்சனப் புத்தியைத் தருகிறது. திட்டம், உங்கள் காலடி எந்தத் திசையில் எத்தனை அடிகளை எடுத்து வைக்க வேண்டுமென்று உறுதியளிக்கிறது. இதுவரை இல்லையெனில் இப்போது திட்டமிடுங்கள்.

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் ஞானியாகிய சாலமோன் கூறியதைக் கவனிப்போம். எல்லாவற்றுக்கும் ஒரு காலமுண்டு. அறுக்க ஒரு காலம்; விதைக்க ஒரு காலம்; புசிக்க ஒரு காலம்; துக்கிக்க ஒரு காலம்; உழைக்க ஒரு காலம்; ஓய்ந்திருக்க ஒரு காலம். இந்த ஞான மொழிக்கும் எல்லாத்துக்கும் காலம் வர வேண்டுமா என்று தோல்வியுற்றோரும் வெற்றி கைவரப் பெற்றோரும் கூறும் அலுப்பு மொழிக்கும் தொடர்பு படுத்திக் கொள்ளலாகாது. விதைத்தல், அறுத்தல் என்ற இந்த இரு செயல்களின் இடைப்பிரிவில் நீண்டு உள்ள காலம் இவற்றின் தயாரிப்புக்கு, விதை முற்றிப் பழுத்துத் தானியமாவதற்கு எடுத்துக் கொள்ளும் அழிவைக் குறிக் கிறது அந்த வாசகம்.

> இதன்மூலமே உங்கள் திட்டம் முன்னெடுக்கப்பட் போகிறது. அது வெறும் காகித வேலையல்ல, காரியமாக்கப்போவது. அதற்குப் பொருள் தேவை. அதைச் செய்வதற்குக் கருவிகள் வேண்டும் அல்லது தகுதிகள் வேண்டும்.

உலகில் தோன்றியிருந்த மக்கள் தலைவர்களெல்லாம் நூதனமாகச் செயலாற்றியவர்களேயாகும். அவர்களின் முன் பத்தாம் பசலிக் கொள்கைகளெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விடுகின்றன. பழையன என்பதற்காக அவர்கள் அவைகளைக் கௌரவிப்பதில்லை. ஒவ்வொரு அடியும் முன்னையதைவிட முன்னேற்றமேயன்றிப் பின்வாங்குதல் அன்று. அவர்கள் அடிமைகள் போன்று பிறரைப் பின் தொடர்ந்து செல்வதில்லை. வீரர்கள் போன்று முன்னேறிச் செல்கின்றார்கள். அவர்கள் தங்களின் உள்ளே உள்ள ஒன்றின் கட்டளையைச் சிரமேற்தாங்கிச் செயலாற்றுகின்றார்கள். அவர்கள் தாங்கள் எண்ணுவதையே முழுமையாக நம்புகின்றார்கள். அவர்களுக்குப் பின்னால் ஒரு கூட்டம் தாங்கி நின்றபோதிலும் அவர்கள் தனித்து எண்ணுகின்றார்கள்; செயலாற்றுகின்றார்கள். மற்றவர்கள் சொல்லவோ செயலாற்றவோ செய்கின்றார்கள். அவர்கள் தாங்களாகவே இழுக்களுக்குப் பயப்படாது, செயலாற்றி தங்களின் பெயரை உலக சரித்திரத்தில் பதித்து விடுகின்றார்கள். அதன் பின் அவர்களை உலகம் ஆச்சரியக்கண் கொண்டு பார்க்கின்றது.

எல்லாத்திட்டங்களும் முதன்முதலில் காகிதத்தில் எழுதப்படுவதில் இருந்துதான் தொடங்குகின்றன. அவ்விதம் காகிதத்தில் எழுதும்போது உங்கள் இலட்சியத்தை நீங்கள் முதலாவதாக வரையறுக்கின்றீர்கள். இரண்டாவதாக அந்த இலட்சியம் எத்தகையது என்பதை உங்கள் கண்ணும் மனமும் ஒருமுறை உற்றுநோக்குகின்றது. மூன்றாவதாக அதன் பெருமை அல்லது அதை அடைவதற்கு வேண்டிய அரிய முயற்சியின் அளவு உங்களுக்குப் புலப்படும்.

பொருள், கருவி, காலம், வினையிடனொடு ஐந்தும் இருள்தீர எண்ணிச் செயல். இதன் மூலமே உங்கள் திட்டம் முன்னெடுக்கப் படப்போகிறது. அது வெறும் காகித வேலையல்ல, காரிய மாக்கப்போவது. அதற்குப் பொருள் தேவை. அதைச் செய்வதற்குக் கருவிகள் வேண்டும் அல்லது தகுதிகள் வேண்டும். அவற்றைப் பெறக் காலம் தேவைப்படும். தற்போது நீங்கள் செய்யும் தொழிலுக்கும் அந்த மாறுதலுக்கும் உரிய இடம் வேண்டும். அவற்றை நிதானித்து உங்கள் பட்டியலைப் போடுங்கள்.

யோகிகள் எண்ணங்கள் மூலம், மனதின் மூலம் விடயங்களை அணுகிறார்கள். இப்போது விஞ்ஞானிகள், எண்ணங்களைக்கட்டுப் படுத்த முடியாதவர்களுக்கு சில சோதனைகள் மூலம் இதயத்தைக் கட்டுப் படுத்தும் பயிற்சியை மனித இயல்பான பழக்கமாக மாற்ற முனைந்திருக்கிறார்கள்.

மனித இதயத்தையும் வயிற்றுச் சதைகளையும் பிற இயங்கு தசைகளையும் எமது கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் உள்ளே ஏற்படும் நோய்களைக் குறைக்கமுடியும் என்று கண்டார்கள். நினைவில் கொள்ளுங்கள் -எமது பழம் பெரும் தத்துவங்கள் இன்று கிழக்கத்தேய மனத் தத்துவம் என்று பேசப்படுகின்றன, ஆராயப்படுகின்றன.

எவருடைய வேலையில் பிறரை ஒளிந்து கொண்டிருக்க நாம் காணவில்லையோ அவனே உண்மையான பெரிய மனிதன். தன்னில் பொதிந்து கிடப்பவையேயன்றி, பிறரில் செய்யும் வேலையிலே, எழுதும் எழுத்திலே, தீட்டும் சித்திரத்திலே, ஆற்றும் பிரசங்கத்திலே பரிணமிக்கவில்லையோ அவனையே உண்மையான உலகம் வரவேற்றுக் கொள்கின்றது. எவனொருவன் கும்பலில் இருந்தும் வெளியாகி முந்தையதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றாது தனித்தன்மையுடன் சிந்தித்துச் செயலாற்றுகின்றானோ அவனை - அந்த மனிதனை பல்லாயிரக்கணக்கான மக்கள் பின் தொடர்ந்து செல்கின்றார்கள். இது உலகறிந்த உண்மை.

ஒரு வெற்றியே அடுத்த வெற்றியைப் பெற உங்களைத் தூண்டிவிடும். அடுத்த கட்டத்துக்குப் போக உங்களுக்குள் அபாரமான ஆற்றலை உருவாக்கும், இவை கற்பனை அல்ல. இதை எழுதுகின்றவன் முதல், உலகில் மகத்தான வெற்றிகள் பெற்ற உன்னத மனிதர்கள் வரை அனைவருக்கும் பொதுவான அனுபவ உண்மைகள் இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கடவுள் இருக்கான் குமாரு

"த்ரிஷா இல்லனா நயன்தாரா" படத்துக்குப் பின்னர் எம்.ராஜேஷ் இயக்கத்தில் "கடவுள் இருக்கான் குமாரு" படத்தில் நடிக்கவிருக்கிறார் ஜி.வி.பிரகாஷ். இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக இரண்டு நாயகிகளை ஒப்பந்தம் செய்துள்ளனராம். ஒருவர் ப்ரியா ஆனந்த்... "த்ரிஷா இல்லனா நயன்தாரா" படத்தில் சிறப்புத் தோற்றத்தில் நடித்த ப்ரியா ஆனந்த் இந்தப் படத்திலும் நடிக்கிறார்.

இன்னொருவர் கீர்த்தி சுரேஷ். விக்ரம் பிரபு, சிவகார்த்தி கேயன், தனுஷ் ஆகியோரைத் தொடர்ந்து முதல் முறையாக ஜி.வி.பிரகாசுடன் இணைகிறார் கீர்த்தி.

படத்தின் முக்கியமான ஒரு வேடத்தில் நடிக்க பிரகாஷ் ராஜும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். முழுக்க முழுக்க நகைச்சுவையை மையமாக வைத்து உருவாகவிருக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு வேலைகள் ஜனவரி இறுதியில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, "டார்லிங்" சாம் ஆண்டன் இயக்கத்தில் ஆனந்தியுடன் புதிய படமொன்றில் நடித்துக் கொண்டிருக்கிறார் ஜி.வி.

!!! "எமகாதகன்" !!! @

சாமி சிலைக்கு பட்டுத் துணி கொடுப்பதற்கு பதில் சட்டை இல்லாத ஏழைப் பிள்ளைகளுக்கு சட்டை வாங்கிக் கொடுங்கள் அவர்களுக்கு நீங்களே தெய்வமாகலாம்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | 4 | 7 | 3 | |
| 4 | 7 | | | | | | | 8 |
| | | | 1 | | 8 | 5 | | |
| | 6 | 5 | | | 7 | | 9 | |
| | | | | 6 | | | | |
| | 2 | | 3 | | | 1 | 6 | |
| | | 7 | 2 | | 6 | | | |
| 1 | | | | | | | 5 | 7 |
| | 4 | 9 | 7 | | | 3 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 1 | 6 | 2 | 4 | 7 | 3 | 9 |
| 4 | 7 | 2 | 9 | 3 | 5 | 6 | 1 | 8 |
| 6 | 9 | 3 | 1 | 7 | 8 | 5 | 2 | 4 |
| 3 | 6 | 5 | 8 | 1 | 7 | 4 | 9 | 2 |
| 9 | 1 | 4 | 5 | 6 | 2 | 8 | 7 | 3 |
| 7 | 2 | 8 | 3 | 4 | 9 | 1 | 6 | 5 |
| 5 | 3 | 7 | 2 | 8 | 6 | 9 | 4 | 1 |
| 1 | 8 | 6 | 4 | 9 | 3 | 2 | 5 | 7 |
| 2 | 4 | 9 | 7 | 5 | 1 | 3 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: விஜயா

**மேடம்:** இனிய பேச்சால் வாழ்வில் நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணமும் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**மிதுனம்:** புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் தடை ஏற்படலாம். இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்குவர். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.

**கடகம்:** உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபார நிலை மந்தமாக இருக்கும். இலாபம் சுமார். உடல் நலனில் எச்சரிக்கை தேவை. பெண்களுக்கு ஆடம்பர எண்ணம் கூடாது.

**சிங்கம்:** பணியில் ஆர்வம் நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் உயரும். நண்பருடன் பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**கன்னி:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். விஷ ஜந்துக்களிடம் விலகியிருப்பது நல்லது. பிள்ளைகளால் உதவியுண்டு

**துலாம்:** உறவினர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாகும். குடும்பத் தேவை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். பெண்களால் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வருமானம் சுமார். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை தேவை.

**தனுசு:** சிரமத்தைத் தகர்த்தெறிந்து சாதனை படைப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி கிடைக்கும். மாணவர்கள் ஆர்வமாகப் படிப்பர்.

**மகரம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை விலகும். இலாபம் படிப்படியாக உயரும். மனைவியின் பாசம் கண்டு மகிழ்வீர்கள். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்:** எதிர்மறையாகப் பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். தெய்வ வழிபாடு மனம் அமைதி பெற உதவும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மீனம்:** குடும்பத்தில் பொறுப்புக் கூடும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பெண்கள் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். திடீர் செலவால் சேமிப்புப் பணம் கரையும்.



விதை விதைச்சவுடனே பழம் சாப்பிடனும்' என்று நெனைக்க முடியுமா?
இன்னைக்கு நான் விதைக்கிறேன்;
நாளைக்கு நீ பழம் சாப்பிடுவே-
அப்புறம் உன் மகன் சாப்பிடுவான்-
அதுக்கப்புறம் அவன் மகன் சாப்பிடுவான்.
அதெல்லாம் வந்து பார்க்குறதுக்கு
நான் இருக்க மாட்டேன்!
ஆனா விதை, நான் போட்டது...
இதெல்லாம் எனக்கு பெருமையா??
கடமை, ஒவ்வொருத்தருடைய கடமை!

டாடி... எனக்கு ஒரு டவுட்டு
ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான்
என்று ஒரு பழமொழி இருக்கு
இதில எனக்கு என்ன டவுட்டுன்னா...!!!



ஐந்து பெண் பெற்றால் அரசிதானே ஆண்டி(aunty) ஆவாங்க?
அது எப்பிடி அரசன் ஆண்டி (aunty) ஆவான்???
சொல்லுங்கள் டாடி... சொல்லுங்க...

ஏன்யா பணத்த மட்டும்
கரெக்டா பேங்கில
போடுறீங்களே!! அது மாதிரி
குப்பையையும்
குப்பத் தொட்டில போட்டா
என்ன?

பேஸ் புக்கில் பிடித்தவை...

## நான் அப்படியே மொய் மறந்துட்டேன்....

"அடிக்கடி திருடிட்டு எனக்கு முன்னாடி வந்து நிக்கிறியே, உன்ர மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கே?"
ஒரு நாற்காலி போட்டா, நிற்காமல் சௌகரியமா உட்கார்ந்துக்கலாம்னு தான் எசமான்!

"டாக்டர் எனக்கு கூச்சமா இருக்குது."
எதுனாலும் டாக்டர்கிட்ட கூச்சப்படாமல் சொல்லுங்க.
எனக்கு பல்லு கூச்சமா இருக்கு டாக்டர்.

... வந்திட்டேன்..."
... மொய் மறந்துட்டேனு
சொல்லு.



படித்ததில் பிடித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இது புதுசு



## பருமனான பெண்களுக்கு

பருமனான பெண்களுக்கான நவீன ஆடைகள் கடைகளில் கிடைக்கின்றன. பிளவுஸ் ஆகவும் டொப்பாகவும் அணியக்கூடிய இந்த ஆடை. பருமனான உடல் வாகு உள்ள பெண்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது. இவை 800 ரூபா முதல் 1400 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

# அசைவ சமையலில் அசத்துவதற்கு

கையில் எண்ணெய் தடவிக் கொண்டு மீன் சுத்தம் செய்தால், கையில் வாடை இல்லாமல் இருக்கும். அல்லது சுத்தம் செய்த பிறகாவது, கையில் எண்ணெய் தடவ வேண்டும்.

இறாலை உரித்துக் கழுவியதும் சிறிது நேரம் மோரில் ஊறவிட்டால், வாடை மிகவும் குறைந்து விடும். சுவையும் கூடுதலாக இருக்கும்.

இறால் நாலு நிமிடம் வெந்தால் போதும். அதற்கு மேல் வெந்தால், இறப்பரைப் போல் அழுத்தமாகி விடும். இறாலில் வாயு அதிகம். எனவே, இறால் சமைக்கும்போது, இஞ்சியும் பூண்டும் அதிகம் சேர்க்க வேண்டும்.

கோழியின் தோற்பகுதிக்கு அடியில், அதிக கொழுப்பு படிந்துள்ளது. எனவே, கோழி சமைக்கும் போது, அதிக கொழுப்புள்ள



எண்ணெய், நெய் ஆகியவை சேர்த்துத் தயாரிக்கக்கூடாது.

கொழுப்பு நிறைந்த பொருள்களைத் தவிர்க்க வேண்டும் என்று எண்ணுபவர்கள், கோழியின் தோலை நீக்கி விட்டு இறைச்சியை மட்டும் சமைத்து உண்ணலாம்.

## நாளை

மார்கழி -21
புதன்கிழமை 06.01.2016
திதி: சுவாதசி முழுவதும்
நட்சத்திரம்: விசாகம் கா.07.12
ராகுகாலம்: 12.31-02.01 வரை
சுபநேரம்: 05.01- 06.31 வரை
வைஷ்ணவ ஏகாதசி விரதம்





## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 140 | 100 | 120 | 100 |
| கத்தரி | 180 | 180 | 180 | 200 | 160 | 200 | 110 |
| கரட் | 300 | 240 | 200 | 280 | 320 | 480 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 60 | 30 |
| பயிற்றை | 150 | 160 | 180 | 240 | 200 | 200 | 150 |
| பாகல் | 200 | 280 | 200 | 260 | 220 | 400 | 250 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 80 | 80 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 100 | 80 | 90 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 130 | 180 | 120 | 140 | 150 | 200 | 100 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 40 | 60 | 40 |
| தக்காளி | 100 | 140 | 100 | 100 | 80–100 | 120 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 60 | 40 |
| கீரை | 40 | 60 | 40 | 20 | 40 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 50 | 30 | 40 | 12 |
| பச்சை மிளகாய் | 600 | 500 | 600 | 400 | 600 | 800 | 600 |
| புடோல் | 100 | 120 | 100 | 120 | 80 | 120 | 80 |
| கோவா | 180 | 160 | 180 | 140 | 120 | 200 | 130 |
| வெண்டி | 160 | 170 | 200 | 120 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 200 | 240 | 240 | 280 | 260 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 260 | 160 | 180 | 160 | 200 | 120 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 50–60 | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 80 | 90 | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 120 | 120 | 140 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | 280 | 400 | 280 | 450 | 400 | 300 |
| இராசவள்ளி | 150 | 160 | 140 | 150 | 160 | 120 | 100 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 650 | 550 |
| நண்டு | 250 | 400 | 400 | 500 | 300 | - |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 700 | - |
| பாரை | 450 | 500 | 600 | 700 | 500 | - |
| சுறா | 300 | 500 | 600 | 700 | - | - |
| சீலா | 250 | 500 | 500 | 450 | 400 | 350 |
| விளை | 500 | 450 | 300 | 600 | 600 | 400 |
| மூரல் | 250 | 350 | 400 | 500 | 200 | - |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 | 600 | 250 |
| விழாத்தன் | 400 | 800 | - | 500 | - | - |
| ஓரா | 300 | 400 | 300 | 350 | - | 300 |
| திரளி | 200 | 300 | 200 | 250 | 300 | 300 |
| நகரை | 150 | 300 | - | 400 | - | 300 |
| அடை | 130 | 200 | 100 | 200 | 200 | - |
| ஒட்டி | 200 | 250 | 250 | 400 | - | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 250 | 360 | - |
| மதனம் | 250 | 250 | 220 | 300 | 200 | 250 |
| கொய் | 100 | 100 | 60 | 120 | 200 | - |
| பாலை | 100 | 250 | 300 | 400 | 500 | - |
| வாளை | 150 | 100 | - | 300 | - | 250 |

## சமைப்போம் வாங்க காளான் ஊறுகாய்

**தேவையானவை**

பட்டன் காளான் – ஒன்றரைக் கப்
மிளகு – 1 கரண்டி
கடுகு – 1 கரண்டி
வெந்தயம் – 1 கரண்டி
உப்பு – தேவைக்கு,
சீனி – 1 கரண்டி
வினிகர் – 100 மி.லீ.
தண்ணீர் – 250 மி.லீ.

**செய்முறை**

சுத்தம் செய்த காளானைத் தண்ணீரில் சிறிது உப்புச் சேர்த்துக் கொதிக்க விடவும். நீரை நன்கு வடிகட்டி காளானை கண்ணாடிப் போத்தலில் போடவும். வினிகர், சீனி, உப்பு, மிளகு சேர்த்து சிறிது நீர் விட்டு கொதிக்க வைக்கவும். நன்றாக ஆறியவுடன் போத்தலிலுள்ள காளானில் ஊற்றவும். அத்துடன், கடுகு, வெந்தயம், ஓமத்தைச் சட்டியில் எண்ணெய் விட்டு வறுத்துச் சேர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ச்சிகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

### சகல உரிமைகளும்

இதுவரை இடம்பெறாத அபிவிருத்தியை இலங்கையில் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்த அவர், இந்தப் பயணத்தில் அனைவரும் கைகோர்க்கவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

மேலும், தற்போது தம்மைக் குற்றஞ்சாட்டி, விமர்சிப்பவர்கள் எதிர்காலத்தில் தம்முடன் இணைந்து கொள்வர் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

புதுவருடத்தை முன்னிட்டு அலரி மாளிகையில் நேற்று வாழ்த்துத் தெரிவித்து ஆற்றிய விசேட உரையின்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்ட விடயங்களைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சபாநாயர் கரு ஜயசூரிய, ஐ.தே.கவின் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன, ரவூப் ஹக்கீம், டி.எம். சுவாமிநாதன், லக்ஸ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக்க உள்ளிட்ட பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட பிரதமர்,

மக்கள் வழங்கிய ஆணைக்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அதனூடாக எமது நாட்டைப் புதிய பாதையில் கொண்டு செல்லும் பயணம் ஆரம்பிக்கப்பட்டது. நல்லாட்சி ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைய இன்னும் நான்கு (மூன்று) நாள்கள் உள்ளன. இந்தக் காலப்பகுதிக்குள் நாட்டில் சுதந்திரத்தை ஏற்படுத்தி, புதிய அரசமைப்பொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், நாட்டில் முதன்முறையாக ஜனாதிபதி ஒருவர் தனது நிறைவேற்று அதிகாரங்களை நீக்க தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையில் தேர்தலை நடத்தினோம். நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததன் பின்னர், பிரதான இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசை உருவாக்கினோம்.

உலகில் நாம் முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட மனித உரிமை பிரச்சினைகளில் வெற்றிபெற்று, உலகை எம்முடன் இணைத்துக்கொண்டு, இந்த நாட்டில் உரிமைகளை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம். வடக்கில் துன்பங்களை அனுபவித்த மக்களின், அவர்கள் வாழ்ந்த காணிகளை மீளப் பெற்றுக்கொடுக்க, மீள்குடியேற்ற, ஏனைய பகுதிகளிலுள்ள மக்களைப் போல உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

இந்த வருடத்தில் நாம் இன்னுமோர் புதிய பயணம் செல்கின்றோம். அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் ஆரம்பித்து, பொருளாதார சமூக செயற்பாட்டை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றோம். மக்களின் வருமானத்தை அதிகரிக்க, இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளைப்பெற்றுக்கொடுக்க, நல்ல பொருளாதாரத்தைப் பெற்றுக்கொடுக்க, உலகில் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற, வறுமையை ஒழிக்க, சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய கல்வி முறைமையை ஏற்படுத்த, நாட்டில் சட்டம், ஒழுங்கை உறுதிப்படுத்தும் சமூக முறைமையை உருவாக்க எதிர்பார்க்கின்றோம். அந்த வேலைத்திட்டத்தைச் செய்ய நாட்டிலுள்ள அனைவரும் எம்முடன் இணையவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றேன். இந்தப் பயணத்தில் நாட்டு மக்களும் உலகமும் இணையும். இதற்கமைய மூன்று வருடத்துக்குள் சமூக பொருளாதார அபிவிருத்தி செயற்றிட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாம் முன்வைப்போம்.

நாம் 2015இல் முழு நாட்டுக்காகவும், அனைவருக்காகவும் புதிய பயணத்தை ஆரம்பித்தோம். இன்று நாம் செல்லும் பயணம் உங்கள் வீட்டுக்குத் தாக்கம் செலுத்தும் பயணமாகும். உங்களுக்கு அபிவிருத்தியை ஏற்படுத்தும் பயணம். எமது பயணத்தை நிறுத்த எதிர்பார்க்கும் சிலர் விமர்சனம் செய்ய, குற்றஞ்சாட்ட எதிர்பார்ப்பர். விமர்சனம் செய்யும், குற்றஞ்சாட்டும் அனைவரும் காலம் செல்லும் போது எம்முடன் இணைவர். இந்த நாட்டின் வரலாற்றில் இடம்பெறாத பாரிய அபிவிருத்தி மேல்மாகாணம் முதல் திருகோணமலை, அம்பாந்தோட்டை முதல் யாழ்ப்பாணம் வரை ஏற்படுத்த நாம் எதிர்பார்க்கின்றோம். இந்தப் பயணத்தில் இணைய அனைவருக்கும் மீண்டும் அழைப்புவிடுப்பதுடன், அனைவருக்கும் சுப வாழ்வு கிட்ட பிரார்த்திக்கின்றேன் என்றார். (கு-சி)

### நேற்று வந்தார்

சங்கர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜின் இலங்கைப் பயணத்துக்கான முன்னாயத்தங்களை மேற்கொள்வதும், இந்திய - இலங்கை கூட்டுக் குழுக் கூட்டத்துக்கான திட்ட வரைவுகளை தயாரிப்பதுமே, இவரது பயணத்தின் முக்கிய நோக்கம் என்று தெரிய வருகிறது.

அடுத்த மாதம் இலங்கையில் நடக்கவுள்ள இந்திய- இலங்கை கூட்டுக் குழுக் கூட்டத்தில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் கலந்து கொள்ளவுள்ளார். எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு வரும் இந்திய வெளிவிவகாரச் செயலர், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவார்.

இந்தப் பேச்சுக்களில், இருதரப்பு வர்த்தகம், முதலீடு, பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல் குறித்தும், மீனவர்களின் பிரச்சினைகள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

அதேவேளை, இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெய்சங்கர் இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்திப்பது தொடர்பாக இதுவரை எந்த முடிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

பாகிஸ்தானியப் பிரதமர் நவாஸ் ஷெரீப் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு திரும்பிய பின்னர் - உடனடியாகவே - இந்திய அதிகாரி ஒருவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது முக்கியமானதாகக் கணிக்கப்படுகின்றது. (கு-5)

### நியாயமான

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது, வடக்கின் அதிகரித்த இராணுவப் பிரசன்னம், தமிழ் மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாமல் இருப்பது, காணாமற்போனோர் தொடர்பிலான விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட விடயங்களை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதைப் பிரிட்டன் முன்னாள் பிரதமருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. தீர்மானம் தொடர்பில் இதன்போது கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர், பொறுப்புக் கூறுதலானது உண்மை, நீதி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தவேண்டும். அது மாத்திரமின்றி நிலையான - ஏற்றுக் கொள்ளக் கூடிய - நியாயமான - செயற்படுத்தக் கூடிய ஓர் தீர்வு அவசியம் என்பதையும் இதன்போது பிரிட்டனின் முன்னாள் பிரதமருக்கு எடுத்துரைத்துள்ளார். (கு-5)

### இரட்டையர்களுக்கு

ஏ. பி.அனோஜன், ஏ.பி.அர்ஜன் ஆகிய இருவருமே உயர்தரப் பரீட்சையில் வணிகப் பிரிவில் 2ஏ, பி பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். இவர்கள் தொடர்பில் பாடசாலைச் சமூகத்தினரிடம் கேட்டபோது,

'இருவரும் அமைதியான சுபாவம் கொண்டவர்கள். நல்ல ஒழுக்கமுள்ள மாணவர்கள். ஒரே பெறுபேற்றைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கவில்லை. சுவாரஸ்யமான விடயமாக இது அமைந்துள்ளது' என்றனர்.

ஒரே பெறுபேற்றைப் பெற்ற இரட்டையர்கள் தமது பெறுபேற்றைப் பற்றிக் கூறுகையில்,

நாவாந்துறைக்குள் ஹீரோவாகி விட்டோம். உருவத்திலும் நாங்கள் இருவரும் ஒரேமாதிரி இருப்போம். எங்கள் பழக்கவழக்கங்களும் ஒரே மாதிரியானவை. ஆனால் பெறுபேறும் இருவருக்கும் ஒரேமாதிரியாக வரும் என எதிர்பார்க்கவில்லை. ஊர் முழுவதும் எங்களைப் பற்றித்தான் பேச்சு. மகிழ்ச்சியாகத்தான் உள்ளது. ஆனாலும் இருவரும் 3 ஏக்கு இலக்கு வைத்திருந்தோம். எதிர்பார்த்திருந்தோம். அது கிடைக்கவில்லை என்பது கவலை. இரட்டைச் சகோதரர்கள் ஒரே பெறுபேற்றைப் பெற்றமை போன்ற சம்பவத்தை நாங்கள் இதுவரை கேள்விப்பட்டதில்லை. நாங்கள் பல்கலைக்கழகத்திலும் பிரியமாட்டோம். ஒன்றாகவே படிக்கப்போகிறோம் என்றனர்.

இரட்டைச் சகோதரர்களின் தாயார் கூறுகையில்,

இவர்கள் ஒத்த இரட்டையர்கள். ஒருவருக்கு ஏதும் நோய் வந்தால் மற்றவருக்கும் நோய் ஏற்படும். இப்போது பெறுபேறும் ஒரே புள்ளிகளில் வெளிவந்துள்ளது. சந்தோசமாக உள்ளது என்றார். (கு-10)

### முல்லைத்தீவு

5லட்சம் ரூபா பெறுமதியான படகு மற்றும் வலைகள் முற்றாகச் சேதப்படுத்தப்பட்டதை அடுத்தே இந்தக் கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

படகைச் சேதப்படுத்திய 8 இந்திய மீனவர்களும் குறித்த ட்றோலர் படகுடன் நேற்றுத் தீர்த்தக்கரை மீனவர்களால் பிடிக்கப்பட்டு முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு, தீர்த்தக்கரைக் கடற்பரப்பில் நேற்று அத்து மீறி ட்றோலர் படகுகளுடன் நுழைந்த இந்திய மீனவர்கள், கரையில் இருந்து 15 பாகம் அளவு தூரத்தில் நின்ற தீர்த்தக்கரை மீனவர் ஒருவரின் மீன்பிடிப் படகையும் வலைகளையும் முற்றாகச் சேதப்படுத்தியுள்ளனர்.

கடலில் மீன்பிடித்துக்கொண்டு நின்றவாறு இதனை அவதானித்த படகின் உரிமையாளரான மீனவரும் ஏனையவர்களும் படகு நின்ற இடத்துக்கு வேகமாக வந்து குறித்த இந்திய மீனவர்களை மடக்கிப்பிடித்துள்ளனர். இதனால் கடலிலேயே இரு மீனவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இருந்தபோதும் குறித்த ட்றோலர் படகுடன் பிடிக்கப்பட்ட 8 இந்திய மீனவர்களையும் கரைக்கு கொண்டுவந்துள்ளனர் தீர்த்தக்கரை மீனவர்கள்.

இந்தத் தகவல் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண சபை உறுப்பிர் து.ரவிகரன், பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் மற்றும் உரிய அதிகாரிகள் ஆகியோருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவர்கள் கடற்கரைக்குச் சென்றுள்ளனர்.

கரைக்கு கொண்டுவரப்பட்ட இந்திய மீனவர்களிடம் படகை சேதப்படுத்தியதற்கான நட்டஈட்டை வழங்குமாறு கோரி தீர்த்தக்கரை மீனவர்கள் தாக்க முற்பட்டனர். ஆயினும் அது அதிகாரிகள், மாகாணசபை உறுப்பினர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதனை அடுத்து குறித்த 8 மீனவர்களும், ட்றோலர் படகுடன் முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு-21-ரி7)

### ஊஞ்சலின்

இவ்வாறு உயிரிழந்த சிறுமி சிறிஜங்கரன் சுனித்தா (வயது-12) ஆவார்.

பெற்றோர் வீட்டு வேலை செய்வதற்காக அருகிலிருக்கும் சாந்தசோலை என்னும் இடத்தில் மணல் எடுத்து வருவதற்காகச் சென்றுள்ளனர். குறித்த சிறுமியுடன் அவரது இரண்டு இளைய சகோதரிகளும் இருந்துள்ளனர்.

இரண்டு சகோதரிகளும் நித்திரையாகியதைத் தொடர்ந்து குறித்த சிறுமி ஊஞ்சலில் தனிமையாக ஆடிக்கொண்டிருந்துள்ளார். இதன்போது ஊஞ்சல் கயிறு இறுகியதால் நெரியுண்டு உயிரிழந்துள்ளார்.

அங்கு வந்த பெற்றோர் உடனடியாக அவரை வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்றுப் பிற்பகல் 3.30மணிக்கு சேர்த்தனர். எனினும் சிறுமியைக் காப்பாற்ற முடியவில்லை. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் இறப்பு விசாரணையின் பின்னர் நேற்றுப் பிற்பகல் சிறுமியின் உடலைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (கு-21)

### கேப்பாப்பிலவுக்

ஒன்றை முன்னெடுத்தனர்.

கேப்பாப்பிலவு இராணுவ முகாமுக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 475 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட பொதுமக்களின் காணிகளை விடுவிக்குமாறு கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. முல்லைத்தீவு கேப்பாப்பிலவில் 391 ஏக்கரும், கிச்சிராபுரத்தில் 34 ஏக்கரும், பிலச் குடியிருப்பில் 25 ஏக்கரும் தற்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்தக் காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு கோரி அவற்றின் உரிமையாளர்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எமது ஊர் எமக்கு வேண்டும், இராணுவமே எமது சொந்த இடத்தை விட்டு வெளியேறு, வேண்டும் வேண்டும் சொந்த நிலம் வேண்டும் போன்ற சுலோகங்களைத் தாங்கியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கேப்பாப்பிலவில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் இன்று வரை குடியேற முடியாமையால் தற்போது கால் ஏக்கர் காணியில் இருந்து துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிப்பதாகவும், எனவே அந்தக் காணிகளை விடுவிக்கவேண்டும் எனவும் கோரியுள்ளனர். (கு-21-ரி7)

### போர்க்குற்ற

சிறப்பு நீதிமன்றத்தை அமைக்கும் விவகாரத்தில், தமது அரசு அவசரமாகச் செயற்படாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த ஒக்ரோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நிலைமைகள் குறித்து, சர்வதேச ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போரின்போது என்ன நடந்தது என்று முதலில் மதிப்பீடு செய்ய வேண்டும். அதனை அறிந்த பின்னரே, தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். நல்லிணக்கம் தொடர்பாக சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் குறித்த முறைப்பாடுகள் தொடர்பாக மற்றொரு அமைப்பு அமைக்கப்படவுள்ளது, என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (கு-5)

### விலகி விடுத்த

யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் சட்டமா அதிபரும் சட்ட அறிஞருமான சிவா பசுபதியை தமிழ் மக்கள் பேரவையின் உபகுழுவில் தனது பிரதிநிதியாக இணைந்து கொள்ளுமாறு பேரவையின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்திருந்தார்.

இதனைச் சட்ட அறிஞர் சிவா பசுபதி உடனடியாகவே நிராகரித்து விட்டார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்று திங்கட்கிழமை தெரிவித்தன.

ஆஸ்திரேலியாவில் வசித்துவரும் சிவா பசுபதி, கடந்த வாரம் தனிப்பட்ட பயணமாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரைத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்ட முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் பேரவையின் உபகுழுவில் தனது பிரதிநிதியாக இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கும் சரியான வேளையில் தமிழ் மக்கள் பேரவை என்ற தனி அமைப்பை உருவாக்குவது பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டுள்ள அவர், இந்த வேளையில் தமிழ் மக்களின் ஒற்றுமை அவசியம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை விக்னேஸ்வரன் ஏற்க மறுத்து விடாப்பிடியாக இருந்தார். எனினும் பசுபதி தளர்ந்துவிடாமல் தமது பதிலில் உறுதியாக இருந்தார். இதனால் கோபமடைந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொலைபேசி அழைப்பைச் சடுதியாக நிறுத்திவிட்டார்.

சட்ட அறிஞர் சிவா பசுபதி, 1985ஆம் ஆண்டு திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழர்களின் முழுமையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் வண்ணம் யோசனைகளை முன்வைப்பார் என்று முதலமைச்சர் நம்பியிருந்தார்.

இதேவேளை, 2003ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக சபை யோசனை வரைவை முன்வைத்தவர் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி என்பது குறிப்பிடத்தக்கது என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்க லே பேசியது பொது பல சேனாவே

## சொல்கிறார் அதன் தலைவர்

கொழும்பு, ஜன.5
சிங்க லே (சிங்கத்தின் இரத்தம்) குறித்து தமது அமைப்பு 2014 ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற மாநாட்டில் பேசியதாகவும் அதுவரை இது பற்றி எவரும் பேசியதில்லை எனவும் கடும் போக்கு பௌத்த அமைப்பான பொது பல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

1815ஆம்ஆண்டுமேல்நாட்டுஉடன்படிக்கையில் இலங்கையை சிங்க லே என்றே குறிப் பிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இதனடிப்படையில், நாட் டின் பெயரை சிங்க லே என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என வும் நாட்டில் வாழும் ஏனைய இன மக்களையும் சிங்க லே என அழைக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்ததாக வும் இது இனவாதத்தை அடிப்படையாகக் கொண் டது அல்ல எனவும் டிலந்த விதானகே குறிப் பிட்டுள்ளார்.

இதனைத் தவிர சிங்க லே என தற்போது முன் னெடுக்கப்பட்டு வரும் பரப்புரைகளுடன் எந்தத் தொடர்பும் பொதுபல சேனாவுக்கு இல்லை என அவர் மேலும் கூறி யுள்ளார்.

இதேவேளை, ராஜ பக்சக்களால் பொதுபல சேனா உருவாக்கப்பட்ட நிலையில் சிங்க லே என்ற இனவாதப் பின் னணியிலும் ராஜபக்சக் கள் இருக்கலாம் என கொழும்பு அரசியலில் பேசப்படுவதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன. ராஜபக்சக்கள் அதிகாரங்களை இழந் துள்ள நிலையில் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற இனவாதத்தை தூண்டி நாட்டில் குழப்பங்களை உருவாக்கவும் ஆட்சியை கைப்பற்றவும் திட்டமிட்டுள்ள தாகவும் அவை சுட்டிக்காட்டுகின்றன.

(வ)


## மரண அறிவித்தல்

### சபாபதி பாலசுப்பிரமணியம்



பிறப்பு 22 . 01 . 1936

இறப்பு 02 . 01 . 2016

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பையும், கொக்குவிலையும் வதிவிடமாகவும் நியூசிலாந்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சபாபதி பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம்) 02.01.2016 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சபாபதி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ராஜகேசரி - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சறோஜினி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் நீரஜாவின்(நியூசிலாந்து) அன்பு தகப்பனாரும் சபேசனின்(நியூசிலாந்து) அன்பு மாமனாரும் தேனுகா, நந்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் நாகேஸ்வரி(கனடா), காலஞ்சென்ற விக்கினேஸ்வரி(இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாசனி(கனடா), காலஞ்சென்ற Dr.தயாபரன்(UK), சாரதா மணி(கனடா), Dr.மீனலோசனி(கனடா), கலாதரன்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருச்செல்வம் (கனடா), பஞ்சலிங்கம் RMP (இணுவில்), அரியரத்தினம்(கனடா), சிவக்குமாரி (UK), தில்லையம்பலம்(கனடா), கைலேஸ்வரி(கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.01.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் ''கணேசவாசா'' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| திருமதி ச.பாலசுப்பிரமணியம்<br>"கணேச வாசா"<br>பாடசாலை ஒழுங்கை, கொக்குவில்.<br>076 936 5568 | தகவல்:<br>குடும்பத்தினர். | 006445866957<br>நியூசிலாந்து |

## மரண அறிவித்தல்

### கந்தசாமி பூபாலரத்தினம்

மலர்வு 06 . 08 . 1941



உதிர்வு 02 . 01 . 2016

பருத்தித்துறை, புலோலியைப் பிறப்பிடமாகவும், புதியவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பூபாலரத்தினம் 02.01.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், மாசில்லாமணி - றோசம்மாவின் அன்பு மருமகனும், ரமணன் (சுவிஸ்), செந்தில் (இத்தாலி), பவானி (லண்டன்), கணேஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், தர்மலிங்கம், பூமணி மற்றும் பரமானந்தம், இராதா, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவளகாந்தன் (ஜேர்மனி),வசந்தகுமாரி, ராஜநந்தினி (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வினோதா, சுஜாதா (இத்தாலி), ஜெயகாந்தன் (லண்டன்),கோபிதா (சுவிஸ்), ஆகியோரின் மாமனாரும், மதுமிதா, பிரவீன், சகானா, சரன், சஞ்சனா, ஸ்ரீகுமரன், அக்ஷனா, அபிராமி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை பிற் பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| புதியவீதி, (67304)<br>கொக்குவில் மேற்கு, (11,15,18)<br>கொக்குவில்.<br>(ஞான பண்டித வித்தியாசாலை அருகில்) | தொ.பே:<br>077 411 9887,<br>077 966 7849 | தகவல்:<br>குடும்பத்தினர். |

## மரண அறிவித்தல்கள்

### Dr. எலிசத்துரை சைமன்

Dr .எலிசத்துரை சைமன் 29.12.2015 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எலிசத்துரை - எலிசப் பிள்ளை தம்பதிகளின் மகனும் பொற்செல்வியின் அன்புக்கணவரும் வினோஷனின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க சடங்குகள் புசல்லாவையில் 31.12.2015 நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

| | | |
|---|---|---|
| தகவல்:<br>ஆனந்தராஜா<br>திலகராணி(பேறாமகள்) | 41,ஈச்சமோட்டை வீதி,<br>யாழ்ப்பாணம்<br>T.P: 021 222 7718 | புசல்லாவை மெடிக்கல் சென்ரர்,நுவரெலியா வீதி,புசல்லாவை.<br>081 247 8433 |

### சின்னத்தம்பி சின்னையா

பிறப்பு 1928 . 01 . 02



இறப்பு 2016 . 01 . 04

கெருடாவில் வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னையா நேற்று (04.01.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் தங்கமணி, சிவராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மலிங்கம், இரத்தினம் ஆகியோரின் மாமனாரும் பாமினி, சுபாஜினி, ஜனனி, தாரணி, சிவகுமார், நடேஸ்வரன், கலைவதனி, மஞ்சுளா, ஜெயக்குமார் ஆகியோரின் பேரனும் சுருதிகா, சுவாதிகா, ரனுஷியா, பவிஷன், புகழினி, ஐஸ்வினி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(60693)(14,16)

| | |
|---|---|
| கெருடாவில் வடக்கு,<br>சாவகச்சேரி. | தகவல்:<br>குடும்பத்தினர். |

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புளோசம் இராசதுரை

(ஓய்வு பெற்ற ஆசிரியை - யா/இராமநாதன் கல்லூரி)



யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி புளோசம் இராசதுரை நேற்று (04.01.2016) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை நாகரட்ணம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஜெயம், ஸ்ரீ மற்றும் இராதா, டெய்லி மல்லிகா ஆகியோரின் அன்புச் சகோ தரியும் மனோகரன், உமா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் பரமேஸ்வரன் (ஓய்வு பெற்ற நில அளவையாளர்) பஞ்சலிங்கம், பிரமிளா, யோகா (ஆஸ்திரேலியா), சாந்தா (கனடா), சாரதா ஆகியோ ரின் அன்பு மைத்துனியும் விதுஷா, விஜயாளன், நிர்மலா, நித்தியா, நிர்த்தனா, சிவகானா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் மாலா, பிரபாத், ஜீத்தேந்திரா, சிவாத்மிகா (ஆஸ்திரேலியா), சசிபன் (கனடா), கோபிகிருஷ்ணா, மதி, இரஜனி, ஜெயாளினி, ஜெயலக்ஷி ஆகியோரின் அன்பு மாமியும் நிரஜா, சாகித் தியன், சுகவீணா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.354, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொடர்புக்கு: 021 222 5721, 077 1510 454

தகவல்: கி.பரமேஸ்வரன் (மைத்துனர் - ஓய்வுபெற்ற நில அளவையாளர்)



### திருமதி சொர்ணகாந்திமலர் சின்னத்துரை

அளவெட்டி சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் இல.401, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணகாந்திமலர் சின்னத்துரை அவர்கள் நேற்று(04.01.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-நல்லம்மா தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளங்கோ மற்றும் இளங்குமார் (ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்விப் பணிமனை-கிளிநொச்சி), இளஞ்சுரேஸ் (சிற்றூழியர், இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை), இளம்திவாகர் (பொறுப்பதிகாரி, கரைச்சிப் பிரதேச சபை, உப அலுவலகம், முரசுமோட்டை), சோபானா (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாநந்தினி (ஆசிரியர், கிளி பரந்தன், இ.ம.வி), தமிழ்ச்செல்வி (வட்டக்கச்சி) , ஆனந்தி (ஆசிரியர், கிளி, பரந்தன் இந்து ம.வித்), அரவிந்தன் (முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியும், காங்கேயபூசணி (கனடா), காலஞ்சென்ற ஜெயநாதன், அன்ன லட்சுமி (உருத்திரபுரம்), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன், தனலட்சுமி, (திருகோண மலை), சொர்ணலட்சுமி (உருத்திரபுரம்), காலஞ்சென்ற தயாபரன் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், ஆறுமுகதாஸ் (கனடா), டெய்சி (ஜேர்மனி), காலஞ்சென்ற குணரத்தினம், செல்வநாயகி (விசுவமடு), காலஞ்சென்ற தில்லைநாதன், சந்திரசேகரம் (உருத்திரபுரம்), விஜயா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தமிழினி, தமிழ்மதி, இனியவன், தனஞ்செயன், தவதருணா, லிபானுசன், நர்மிதன், நயனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டக்கச்சி மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 401, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி — 077 1147462 — தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய அஞ்சலி



சரவணபவானந்தன் (கட்டட படவரைஞர்), தவநேசன் ( கிராம அலுவலர் J 103), ரவிதரன் (கதிரவன் கோல்ட் சென்ரர்), சுபாஜினி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயார்

### நடராசா லீலாவதி

அவர்கள் காலமானதையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

628/3, காங்கேசன் துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி.

நவபவனம் குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் J/103 கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிராமஉத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. நடராசா தவநேசன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி லீலாவதி நடராசா

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நல்லூர்.

நல்லூர் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்

# பாணந்துறை இரட்டைக் கொலை; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

பாணந்துறை உயன்கெலே காலி வீதியின் அருகில் உள்ள இரு மாடி வீட்டின் கீழுள்ள இடத்தில் இருந்து கடந்த வருடம் மார்ச் மாதம் மீட்கப்பட்ட இரு பெண்களின் எலும்புக் கூடுகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது. சந்தேகநபர், குறித்த வீட்டுக்குத் திருடச் சென்றதாகவும், அப்போது அங்கு இந்த எலும்புக்கூடுகளைப் பார்த்ததாகவும், பின்னர் அந்த எலும்புக் கூடுகளை துணியொன்றினால் மூடிவிட்டு வீட்டில் உள்ள பொருள்களைத் திருடியதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (து)

## மரண அறிவித்தல்கள்

### வாமதேவன் இராதாகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற மருந்தாளர்)



மட்டக்களப்பு தாமரைக்கேணியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வாமதேவன் இராதாகிருஷ்ணன் 03.01.2016 ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வாமதேவன்-சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், நந்திகேஷ் (டுபாய்), கார்த்திகாயினி, ஆரணி, நிரூஷன் (பொறியியல் பீடம்-மொறட்டுவ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் இராதாராணி, மேதாகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், லாவண்ஜா, இரவீந்திரன் (பணிப்பாளர் உயர் தொழில்நுட்ப நிறுவகம்), சொரூபன் (முகாமையாளர்-Alliance வவுனியா) ஆகியோரின் மாமனும், யஷ்வா, கானப்பிரியன், பிரியதர்ஷன், விதுர்ஷன், கிருஷ்ணப்பிரியா, டஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிப்பிரார்த்தனை இன்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, இறுதி அடக்கத்துக்காக பிற்பகல் 3.00 மணியளவில் ராசவீதி கோப்பாயில் உள்ள கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். | தொ.பே.இல:- 021 300 2094 077 4533 287 | தகவல்: குடும்பத்தினர். |

(67356)(10,17)

## மரண அறிவித்தல்கள்

### சுந்தரம்பிள்ளை புவனேந்திரன் (சொக்கர்)



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப் பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை புவனேந்திரன் (04.01.2016) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற தம்பிராசா, தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், பிரபாலினி (யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்), தயாளினி (லண்டன்), தாரணி (நோர்வே), இராகுலன் (லண்டன்), யசோதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தில்மணாளன் (பிரதேச சபை வவுனியா), பாலசிறி (லண்டன்), குகநேசன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், இராசகோபால், காலஞ்சென்ற இராசேந்திரம், தெய்வேந்திரம், தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மகுலசிங்கம், புஸ்பராணி, ரஞ்சினிதேவி, குமாரகுலசிங்கம், இந்திரநாதன், தவநாதன், சிவசோதி, சிவமணி, காலஞ்சென்ற சிவலிங்கம், அருட்சோதி, மல்லிகாதேவி, விக்னேஸ்வரி, தவமணி, பிறேமா ஆகியோரின் அன்பு மைத்துனரும், லக்ஷன் (லண்டன்), சயானா (லண்டன்), இலக்கியா (நோர்வே), சாகித்தியா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2016)புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| ஊரெழு கிழக்கு, சுன்னாகம் | 021 224 1159 | தகவல்: குடும்பத்தினர் |

## உ வீட்டுக்கிருத்திய அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



நிகழும் மன்மத வருடம் கார்த்திகைத் திங்கள் 20ஆம் நாள் (06.12.2015) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி
### மங்கையற்கரசி ஏகாம்பரம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியம் பிலிப்



யாழ். கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் பிலிப் அவர்கள் 02.01.2016 சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து -அலங்காரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை -வெருணிக்கா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிலிப் அவர்களின் அன்பு மனைவியும், ஆன்மேரி புஸ்பராணி (ராசாத்தி-பிரான்ஸ்), அன்ரன் சின்னராசா (கனடா),கிறேஸ்ருக்மணி (இலங்கை), லில்லிசெல்வமணி (பிரான்ஸ்), பெஞ்சமின்ராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற நீக்கிலாப்பிள்ளை, மரியம்மா, காலஞ்சென்ற சாமிநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இலங்கநாதன், சகாயநாயகிதேவி, அந்தோனிப் பிள்ளை (முத்து), நகுலன், அன்னமேரி, ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற மரியமுத்து, மனுவேல்பிள்ளை, ஜெயராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரமேஸ் லக்சி, ரமா அனஸ்ரின், எட்வேட், வீணா, மேசி பிரசன்னா, பப்பிரிஸ், பிறெடரிக், புளோரா, அபிநயா, ஆரூரன், அமிர்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ராயன், ராகல், ஜெசிக்கா, யூலியானா, யூலியன், ரம்மியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இன்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் கரவெட்டி புனித பரலோக மாதா ஆலயத் தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கரவெட்டி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| மேசி இல்லம் விக்னேஸ்வரா வீதி, கரணவாய் தெற்கு, கரவெட்டி. | 021 521 8149 077 340 0516 | தகவல்: குடும்பத்தினர் |

### திருமதி அன்னபூரணம்(சின்னப் பிள்ளை) தங்கராசா



நயினாதீவு 07ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி அன்னப்பூரணம் (சின்னப்பிள்ளை) தங்கராசா கடந்த (01.01.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து -வள்ளி யம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து -நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தங்கராசாவின் அன்பு மனைவியும், நாகராஜேஸ்வரி, நாகபரமேஸ்வரி, நாகசிவனேஸ்வரி, காலஞ்சென்ற நவரத்தினராசா மற்றும் நாகவரலேஸ்வரி (சுவிஸ்), அமிர்தராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாதேவன், காலஞ்சென்ற யுகநாதன் மற்றும் கருணகுமாரன், நவநீதன் (சுவிஸ்), அருட்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற குழந்தைவேலு மற்றும் அன்னலெட்சுமி, இரத்தின சபாபதி, காலஞ்சென்ற சபாரத்தினம் (ஐயா வாத்தியார்), சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ் சென்றவர்களான இராசரெத்தினம், அன்னலெட்சுமி, தைரியலெட்சுமி, நாகராசா, கோபால பிள்ளை, நடராசா மற்றும் நாகபுஸ்பம், நாகரெத்தினம், பவானியம்மா, ஞானப்பூங்கோதை, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், கணபதிப்பிள்ளை, இரத்தினம், கணபதிப்பிள்ளை மற்றும் சின்னம்மா, அருள்ச்சக்தி ஆகியோரின் அன்புச் சகலியும், காலஞ்சென்ற செல்லையா- இராசலெட்சுமி, தம்பிஐயா-சிவக்கொழுந்து, நடராசா-இரத்தினம், முத்தையா-ஞானேஸ்வரி, சுந்தரலிங்கம்-கனகலெட் சுமி ஆகி யோரின் சம்பந்தியும், மயூரா-விஜயதாசன், மயூகரன், நவரூபன் (லண்டன்), சாந்தரூபன், சோதிரூபன், நவஜெனனி, நிதர்ஷிகா (சுவிஸ்), வேணுஜன் (சுவிஸ்), அபிஜஜா, அபிஷனன், அபிஷாலினி ஆகியோரின் பேர்த்தியும், மனோஜா, விஷ்ணுஜன், சேனுஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2016) புதன்கிழமை காலை 08.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| [illegible] வட்டாரம், [illegible]தீவு. | 077 188 4566 077 214 0987 | தகவல்: குடும்பத்தினர் |

### திருமதி லீலாவதி நடராஜா



பிறப்பு :- 1945.12.15    இறப்பு :- 2016.01.04

இல.525/1, கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு யாழ்ப்பாணம் எனும் முகவரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராஜா லீலாவதி நேற்று (04.01.2016) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நடராஜாவின் அன்பு மனைவியும், சரவண பவானந்தன் (கட்டட பட வரைஞர்) தவநேசன் (கிராம அலுவலர் J/103 கந்தர்மடம்) ரவிதரன் (கதிரவன் கோல்ட் சென்ரர்), சுபாஜினி (ஆசிரியை-கொ.வ. கலைமகள் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ் சென்றவர்களான நாகலிங்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசாம்பாள், மணி, பாலசிங்கம் மற்றும் இராசேந்திரம், ஈஸ்வரி (நெதர்லாந்து) ஆகியோரின் சகோதரியும், கஸ்தூரி, வசந்தகுமாரி (ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) மஹித்குமார் (அபான்ஸ்-கொழும்பு) ஆகியோரின் மாமியும், மகதீஸ், மஞ்சரி, கிருஷிகா, காருண்யா, மயூரி, யதுமிதன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு இல.55, பூநாரி வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| தொ.பே.இல: 077 4833 931, 077 8925845, 077 929 4656 | தகவல்: குடும்பத்தினர். |

(67361)(10,17)

### லூயிஸ்கஸ்மர் யேசுதாசன்



சென்.ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லூயிஸ்கஸ்மர் யேசுதாசன் 03.01.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக்கணவரும் இராசேந்திரம் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, லூட்ஸ் மேரி, சேவியர் ஆகியோரின் சகோதரரும், ஜெயா கிறிஸ்ரிபோல், பிறின்சிவிஎரிபிறிடா, கிறேஸ்மேரி இமெல் டா, அலன்சியாட்டா, ஜீன்மேரி மெற்றில்டா ஆகியோரின் அன்புத் தந்தையும் டோமினிக்சாவியோ, அருள்நாயகம், கென்றிஆஞ்சலோ, நிசாந்தன் ஆகியோரின் பாசமுள்ள மாமனும் அருட்தந்தை S.J.இராசநாயகத் தின் அன்புமைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (06.01.2016) புதன் கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: அருட்தந்தை S.J. இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் இந்துக் கல்லூரி பெயர்ப் பலகை திரைநீக்கம்

## நேற்று வைபவரீதியாக நடைபெற்றது

காரைநகர், ஜன.5

காரைநகர் இந்துக்கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ள காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயப் பெயர் பலகைத் திரைநீக்க விழா நேற்றுத் திங்கட்கிழமை கல்லூரி வளாகத்தில் நடை பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், காரைநகர் இந்துக்கல்லூரிப் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்விப் பணிப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார்,தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை வடமாகாணக் கல்வி அமைச் சின் பிரதிச் செயலரும் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவருமான பா.விக்னேஸ்வரன், காரைநகர் கோட்டப் பணிப்பாளர் பு.ஸ்ரீ விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம் கடந்த முதலாம் திகதி முதல் காரைநகர் இந்துக்கல்லூரி என பெயர் மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வ-250)

# காரைநகர் விபத்தில் வயோதிபப் பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜன.5

காரைநகர், பொன்னாலை வீதியில் இடம்பெற்ற பஸ்-ஓட்டோ விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்தில் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த யோகேஸ்வரன் தவமணி (வயது-65) என்ற வயோதிபப் பெண்யன சாவடைந்தவராவார்.

குறித்தவிபத்தில்படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட நிலையில் சாவடைந்தார் என தெரிவிக்கப்பட்டது. (வ)

## பதவி வெற்றிடம்

பேச்சாற்றல் உடைய 25வயதிற்குட்பட்ட பெண் வரவேற்பாளர் தேவை.
இம்முறை A/L எடுத்தவர்களும்தொடர்பு கொள்ளலாம்.

வேதனம் - 12,000/- சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

WINSTAR
106, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி.

தொடர்புக்கு: 021 320 2789

## Spoken English

ஆரம்பம்: 06.01.2016
4.30 pm
*Colombo Royal College*
பிரபல ஆசிரியர்
(c 28273) (14,16)
Beefort International School
136, Navalar Rd, Jaffna.

# அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களுக்கான அறிவித்தல்.
கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் 09.01.2016 சனிக்கிழமை.

மேற்படி சங்கத்தின் துணைவிதி 27,28 (02) இன்படி இச்சங்கத்தின் கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களைக் கீழ் குறிப்பிட்ட இடங்களில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அமைய வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்குக் கூட்ட அறிவித்தல் கடிதம் தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காகக் கிளைப்பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவு செய்ய உதவவும். அறிவித்தல் கிடைக்கப் பெறாவிட்டாலும் இவ்வறிவித்தலை அழைப்பாக ஏற்றுக்கொண்டு கூட்டத்துக்குச் சமுகமளிக்க முடியும்.

1. கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும்.
   09.01.2016 சனிக்கிழமை முற்பகல் 10 மணி.
2. கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம்.

| தொடர் இலக்கம் | கிளை இலக்கம் | கிளையின் பெயர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 01 | ஸ்கந்தபுரம் | ஸ்கந்தபுரம் இல 01 அ.த.க.பாடசாலை |
| 02 | 02 | கோணாவில் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 03 | 03 | யூனியன் குளம் | யூனியன்குளம் அ.த.க.பாடசாலை |
| 04 | 04 | அக்கராயன் | அக்கராயன் மகாவித்தியாலயம் |
| 05 | 05 | வன்னேரி | வன்னேரி மகா வித்தியாலயம் |
| 06 | 06 | ஆனைவிழுந்தான் | ஆனைவிழுந்தான் அ.த.க.பாடசாலை |
| 07 | 07 | ஊற்றுப்புலம் | ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை |
| 08 | 08 | கண்ணகைபுரம் | கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை |
| 09 | 09 | ஸ்கந்தபுரம் மேற்கு | ஸ்கந்தபுரம் இல.02 அ.த.க.பாடசாலை |

முக்கிய கவனத்துக்கு :-

1. கிளைப்பொதுச்சபைக் கூட்டத்துக்கான நிறைவெண் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுள்ள அங்கத்தவர்களின் ¼ அல்லது 25 பேர் இதில் எது குறைவோ அதுவாகும்.

2. கிளைப்பொதுச்சபைக்கு சமுகமளித்துள்ள தகுதியான வாக்காளர்களிடமிருந்து 9 உறுப்பினர் தெரிவு செய்யப்படுவர். இக்கிளைக்குழுவுக்கு 18-35 வயதுக்கிடைப்பட்ட இருவரையும் பண்டகுழுவிலிருந்து ஒருவரும், மகளிர் குழுவிலிருந்து இருவரும் உள்ளடக்கியதாக அறுவரும் தெரிவு செய்யப்படுவர்.

செயலாளர்,
அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்,
அக்கராயன் குளம்.

# மரண அறிவித்தல்

## திருமதி கண்மணி நாகலிங்கம்



சங்கானை முருகமூர்த்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், இல.189, ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி நாகலிங்கம் 03.01.2016 அன்று காலமானார்.

அன்னார் நாகலிங்கம் (பப்பா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் துரைசிங்கம், காலஞ்சென்றவர்களான தவமணி, நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும்காலஞ்சென்றவர்களான கந்தையா, சுந்தரம்பிள்ளை மற்றும் நாகம்மா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற தர்மச்சந்திரன் மற்றும் கமலினி (றஞ்சி), செந்திலிங்கம் (வவா), ஜெயதேவி (விசயா), சிவலிங்கம்(சிவா- உதயநகர் மேற்கு), சற்குணலிங்கம் (குணா - கனடா), கலாதேவி (ரதி - ஜேர்மன்), நிர்மலாதேவி (றாஜினி - ஜேர்மன்), சுந்தரலிங்கம் (சிறி - ஜேர்மன்), சிவபஞ்சலிங்கம்(ஜீவா - கனடா), சிவயோகலிங்கம் (யோகன் - இந்தியா), சுதாஜினி (சுதா- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் சறோஜினிதேவி, காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் பரிமளாதேவி, நடேஸ்வரி (கனடா), சிவ சுந்தரம் (ஜேர்மன்), லோகேஸ்வரன் (ஜேர்மன்), தயாளினி (ஜேர்மன்), ராஜினி (கனடா), அருளானந்தம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஜெயசீலன் (ஜெயந்தன்), தர்மலோஜினி (லோஜினி), தர்ம ரூபினி (மாலினி - ஜேர்மன்), தர்மகலா (தர்மினி - கரைச்சி பிரதேசசபை - கிளிநொச்சி), நிசாந்தன் (சாந்தன் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - கிளிநொச்சி), சர்மிலன் (ஜெகன் - கனடா), காலஞ்சென்ற கோமதி மற்றும் கோகுலன் (கோபி), திபோதன் (திபோ - நாறோ நிறுவனம்), லோஜி, கேதவன், பாமதி, பகீரதன் (பகீ), மயூரதன் (சின்னக்கண்ணா), கஜன், வாசுகி (Vovcod- வவுனியா), வாசன் (நோர்வே), வினோபா, அனோஜன் (கனடா), கவீனா (கனடா), நிஜந்தன் (லண்டன்), பொபி (லண்டன்), அனிற்றா (லண்டன்), நிலோஜா (ஜேர்மன்), மில்டன் (ஜேர்மன்), அர்ஜீன் (ஜேர்மன்), கஜிந்தா (கனடா), பிருந்தா (கனடா), பிரவீனா (கனடா), தமிழ்வாணன் (பிரான்ஸ்), சுஜீபா (பிரான்ஸ்), றஜீபா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் கோமிதன், சுபிந்தா, பிரணவன், கரிஸ்தரன் (ஜேர்மன்), தியானா (ஜேர்மன்), அபிராம், யோகித், கேசகி, நர்த்தகி, துவாரகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.189, ஸ்கந்தபுரத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக நாளை (06.01.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் ஸ்கந்தபுரம் பொது [illegible]

இந்த அறிவித்தலை உற்றார் [illegible] ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## வேலைவாய்ப்புக்கள்

நீங்கள் விரும்பும் உங்கள் தகுதிக்கேற்ப தனியார் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

WINSTAR JOB BANK
(முன்னணி வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)

இம்முறை உயர்தரப்பெறுபேறு கிடைக்கப் பெற்றவர்களுக்கும் வேலைவாய்புக்கள்

WINSTAR JOB BANK உடன் உங்கள் சுயவிவரக்கோவையுடன் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

106, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி.
10.00 am - 04.00 p.m
T.P : 021 320 2789

## Study Engineering

SICHUAN UNIVERSITY-CHINA

100% SCHOLARSHIPS AVAILABLE
*Conditions Apply

Admission Open for the March 2016



# No IELTS
# No Interview
# No Bank Balance
# 100% Visa Success Rate
# Part Time Job Allowed
# Fully English Medium
# Apply with A/L Simple pass

* Admissions open for MBBS Year 2016 *

ICS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
Appointments 077 3013060

## ST.JOHN'S COLLEGE, JAFFNA AND THE JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY

Admission 2016

**1. G.C.E (A/L) August 2018 - Bio & Maths in English & Tamil Medium**
-Bio System Technology, Engineering Technology & Arts in Tamil Medium
- Register on or before 06.01.2016 (Hostel Facilities available)
- Classes will begin on 06.01.2016

**2. Boys and Girls - G.C.E (A/L) August 2016 2nd / 3rd Attempt** - Bio, Maths, Technology, Commerce.
- Register on or before 09.01.2016 (Hostel Facilities available)
- Classes will begin on 06.01.2016

**3. Boys and Girls - G.C.E (O/L) December 2016 2nd / 3rd Attempt** - (Technology Subjects Available)
- Register on or before 09.01.2016 (Hostel Facilities available)
- Classes will begin on 06.01.2016

**4. Boys and Girls - Sinhala Language**
- Spoken Sinhala
- Second Language Sinhala to prepare for G.C.E (O/L) December 2016 Examination
- Register on or before 09.01.2016
- Classes will begin on 18.01.2016

**5. Boys and Girls - English Language**
- Spoken English
- TKT- (Teaching Knowledge Test) - Cambridge University

TKT is a leading international qualification for teachers in English. Whether you teach English as a subject, or teach other subjects in the English medium, TKT will help you to improve your skills.
- Register on or before 09.01.2016
- Classes will begin on 18.01.2016

**6. Boys and Girls - IT**
- **Database Management**
- **Web Design** - **Hardware**
- Register on or before 09.01.2016
- Classes will begin on 18.01.2016

**The Director,**
**The Jaffna Academy**
**& School of Technology**
**021 321 6006 / 021 222 8585**

**The Principal**
**St.John's College,**
**Jaffna.**
**T.P: 021 222 2432**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் நாளிலும் மழையின் ஆதிக்கம்; ஆட்டத்தை சமன்செய்ய தீவுகளுக்கு வாய்ப்பு



ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாளிலும் மழையின் ஆதிக்கம் அதிகமாக இருந்தமையால் 11 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலையிலேயே நாள் முடிவுக்கு வந்தது. தற்பொழுது தீவுகள் 248-7 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கோல்டர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க, முதல் நாள் முடிவில் தீவுகள் 207-6 என்ற நிலையில் இருந்தது. ரம்டின் 23 ஓட்டங்களுடனும் பிரீத்வைட் 35ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். அவ்வப் பொழுது விளாசப்பட்ட சிக்சர்களுடன் அரைச்சதம் கடந்தார் பிரீத்வைட்.

ரம்டினின் ஆட்டத்தில் மாற்றம் இல்லை. மிகவும் நிதானித்துக் கொண்டிருந்தார். 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தபொழுது பிரீத்வைட்டை போல்ட் ஆக்கினார் பற்றின்சன்.

மழை குறுக்கிட ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு நீண்ட நேரமாகியும் மழை விடாத காரணத்தால் கைவிடப் பட்டது.

தற்பொழுது தீவுகள் 248-7 என்ற நிலையில் உள்ளது. ரம்டின் 30 ஓட்டங்களுடனும் றோச் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன், பற்றின்சன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கசில்வூட், கேக்பி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# சாதனைகளைப் படைத்த ஸ்ரோக்ஸ்; தோல்விக்கு தொலைவில் இங்கிலாந்து



இங்கிலாந்து தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின்நேற்றுமுன்தின இரண்டாம் நாளில் 629-6 என்ற நிலையில் இங்கிலாந்து தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியதுடன், பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா 141-2 என்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க, முதல் நாள் முடிவில் இங்கிலாந்து 317-5 என்ற நிலையில் இருந்தது. ஸ்ரொக்ஸ் 74 ஓட்டங்களுடனும் பரிஸ்ரெளவ் 39 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக களமிறங்கினர். இருவரினதும் ஆட்டத்தில் அனல் பறந்தது. ரி-20 ஆட்டங்களில் பாணியில் ஸ்ரோக்ஸ் ஒருநாள் பாணியில் பரிஸ்ரெளவ். மொத்தத்தில் தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களுக்கு மரண அடி நடந்து கொண்டிருந்தது. இருவரும் சதத்தை நிறைவுசெய்தனர். சதத்தை நிறைவுசெய்ததன் பின்னர் சிக்சர்களாக விளாசிக் கொண்டிருந்தார் ஸ்ரோக்ஸ். 163 பந்துகளில் ஸ்ரோக்ஸின் இரட்டைச்சதம் பதிவானது. இணைப்பாட்டமாக 401 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 258 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது ஸ்ரோக்ஸின் இன்னிங்ஸ். இதன்மூலம் வேகமான இரண்டாவது இரட்டைச்சதம், இடது கை வீரரின் வேகமான இரட்டைச்சதம், இங்கிலாந்து வீரர் ஒருவரின் வேகமான இரட்டைச்சதம்போன்றசாதனைகளை ஸ்ரோக்ஸ் படைத்தார். தற்பொழுது இங்கிலாந்து 622-6. ஸ்ரோக்ஸ் ஆட்டமிழந்தபொழுது பரிஸ்ரெளவ் 144 ஓட்டங்களுடன் இருந்தார். இதனால் இன்னிங்ஸை இடைநிறுத்த குக் விரும்பவில்லை. 150 ஓட்டங்களை பரிஸ்ரெளவ் எட்ட 629-6 என்ற நிலையில் இங்கிலாந்தின் இன்னிங்ஸ் இடை நிறுத்தப்பட்டது. இதுவே பரிஸ்ரெளவ்வின் அதிகபட்ச ஓட்டங்களாகும்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ரபாடா 3 இலக்குகளையும், மோர்கல், மொறிஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்தை வீழ்த்துவது கடினம். இதனால் தற்காப்பு ஆட்டத்தை கையிலெடுத்தது தென்னாபிரிக்கா. 4 ஓட்டங்களுடன் ஸ்ரியான் ரண் அவுட் ஆனமை சரிவை ஏற்படுத்தியது. எல்கர் - அம்லா இணை இங்கிலாந்தைத் தாக்குப்பிடிக்க தென்னாபிரிக்கா பலமான நிலையை அடைந்தது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 86ஆக இருந்தபொழுது வீழ்ந்தார் எல்கர். அரைச்சதம் கடந்தார் அம்லா. வில்லியர்ஸ் - அம்லா இணை நாள் முடிவுவரை தாக்குப்பிடிக்க இரண்டாம் நாளின் முடிவில் தென்னாபிரிக்கா 141-2 என்றுள்ளது. (ம)



## இந்தியத் தொடருக்கு எதிரான ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு

டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து 5 ஒருநாள் ஆட்டங்களிலும் , மூன்று ரி-20 ஆட்டங்களிலும் விளையாடவுள்ளது. ஒருநாள் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

13 வீரர்கள் கொண்ட ஆஸ்திரேலிய அணியில் அறிமுக வீரர்களாக ஸ்காட் போலண்ட், ஜோயல் பெரிஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இருவரும் பந்துவீச்சாளர்கள் என்பது கவனிக்கத்தக்கது. வேகப்பந்து வீச்சாளரான ஸ்ராக் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் ஆஸ்திரேலிய அணி வருமாறு:

சிமித் (தலைவர்), வோர்னர், ஆரோன் பிஞ்ச், சோன் [illegible], மிச்சேல் மார்[illegible], வேட், பல்க்னெர், ரிச்சர்ட்சன், கசில்வூட், பேலண்ட், ஜோயல் பேரிஸ். (ம)

## போட்டியிடத் திராணியற்ற தீவுகள்; ரொபேர்ட்ஸ் காட்டமான கருத்து



தற்போதிருக்கும் மேற்கிந்தியத் தீவுகளின் அணியால் ஏனைய அணிகளுக்கு நிகராகப் போட்டிட முடியாது என்று கருத்துத் தெரிவித்துள்ளார் தீவுகளின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ரொபேர்ட்ஸ்.

மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கும் அனுபவ வீரர்களுக்கும் இடையே பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இதனால் அனுபவ வீரர்களை அணியில் இருந்து விலக்கி வைத்துள்ளது மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. பிராவோ, கெயில், பொலார்ட், சமி, ரசல், சந்தர்போல் போன்ற அனுபவ வீரர்கள் அற்ற அணியே தற்பொழுது தீவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறது. அதற்கு ஏற்றால் போல், அந்த அணியும் ஏனைய அணிகளிடம் முறையாக வாங்கிக்கட்டவும் செய்கிறது. இதனையடுத்து தற்பொழுது உள்ள அணியால் ஏனைய அணிகளுடன் போட்டியிட முடியாது என்று கருத்து வெளியிட்டுள்ளார் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரரான ரொபேர்ட்ஸ். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் - மேற்கிந்தியத் தீவுகளின் அணியை இந்த நிலைமையில் பார்ப்பதற்கு மிகவும் கவலையாகவும், ஏமாற்றமாகவும் இருக்கிறது. தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் மீது முழுவதுமாக பழிபோட நான் விரும்பவில்லை. முக்கியமான வீரர்கள் மீதும் பழிபோடுகிறேன். ஏனென்றால், தீவுகளின் கிரிக்கெட்டை முன்னேற்றுவதற்கு, பொறுப்பை அவர்கள் கையில்எடுக்கவேண்டும். இரு தரப்பினருக்கும் இடையில் (கட்டுப்பாட்டுச் சபை, வீரர்கள்) உடன்பாடுகள் ஏற்படாது இதே நிலையில் அணி தொடருமானால் மேற்கிந்திய தீவுகளின் அணியால் ஏனைய அணிகளுடனும் போட்டியிட முடியாத நிலை ஏற்படும். என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினம் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடரின் முடிவுகள்

மாங்குளம், ஜனவரி. 5
யாழ். சதுரங்க முற்றம் நடத்திய இரத்தினம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடர் கடந்த 26ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நல்லூர் பவன் விடுதியில் நடைபெற்றது. இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு.

**ஆண்கள் பிரிவு**

8வயது ஆண்கள் பிரிவில் ஏ.தரன் முதலாம் இடத்தையும், ரி.சாயிபிரியன் இரண்டாம் இடத்தையும், ஜே.பாவணன் மூன்றாம் இடத்தையும், கைப்பற்றினர். 10வயது ஆண்கள் பிரிவில் ஜி.தனுசிகன் முதலாம்இடத்தையும், எஸ்.அபிமன்யூ இரண்டாம் இடத்தையும், ஜே.பாவணன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். 12வயது ஆண்கள் பிரிவில் ஜே.விஸ்ணு ராஜ் முதலாம் இடத்தையும் ஏ.ஆருத்திரன் இரண்டாம் இடத்தையும் ஏ.தரன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். 14வயது ஆண்கள் பிரிவில் ஜே.ரிசிகோபன் முதலிடத்தையும், ஆர்.நிவேதன் இரண்டாம் இடத்தையும், எஸ்.மதுராங்கன் மூன்றாம் இடத்தையும், தமதாக்கினர். 16வயது ஆண்கள் பிரிவில் ஆர்.வெறோசன் முதலாம் இடத்தையும், பி.சிவபாலஸ்ரீ இரண்டாம் இடத்தையும், ஏ.அபிராம் மூன்றாம் இடத்தையும், பிடித்தனர். 18வயது ஆண்கள் பிரிவில் ஆர்.வெறோசன் முதலிடத்தையும், எஸ்.கோபிதன் இரண்டாமிடத்தையும், ஏ.தரன் மூன்றாமிடத்தையும் கைப்பற்றினர்.



**பெண்கள் பிரிவு**

8வயதுபெண்கள்பிரிவில்எஸ்.அனன்ஜா முதலாம் இடத்தையும், கே.அபிசாயி இரண்டாம் இடத்தையும், எம்.அக்சயா மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். 10வயது பெண்கள் பிரிவில் ஏ.ஜரினி முதலிடத்தையும், ரி.கிறிஸ்ரினா, அனுஜிற்றா இருவரும் இரண்டாம் இடத்தையும்ஆர்.வலம்புரிமூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். 12வயது பெண்கள் பிரிவில் பி.அஸ்வினி முதலிடத்தையும், எஸ்.ஆரபி இரண்டாம் இடத்தையும், பி.செம்பூவினி மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். 14வயது பெண்கள் பிரிவில் பி.அஸ்வினி முதலிடத்தையும், யூ.சுவஸ்திகா இரண்டாம் இடத்தையும், பி.தமிழினி மூன்றாம் இடத்தையும், கைப்பற்றினர். 16வயது பெண்கள் பிரிவில் பி.அஸ்வினி முதலிடத்தையும், ஆர்.கம்சாயினி இரண்டாம் இடத்தையும், எஸ்.மிருதி மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். 18வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை எல்.லாவண்யாவும், பி.அஸ்வினி இரண்டாம் இடத்தையும், மூன்றாம் இடத்தை யூ.சுமித்திராதேவியும் கைப்பற்றினர். (ம-422)

## இன்றைய மோதல்கள்

**றோயல் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 5
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை யங் கென்றிஸ் அணியை எதிர்த்து மன்னார் கிறீன்பீல்ட் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வைரவப் புளியங்குளம் யங் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடப்பு வருடத்துக்கான யூட், கயன், சாந்தன் மூவரினதும்ஞாபகார்த்தவெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்நாளைபுதன்கிழமைஆரம்பமாகின்றன. இதில் நாளை வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து 786 அணி மோதவுள்ளது.(ம-23)

## சென்.ஜோசப், கில்லறி அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 5
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் சென்.ஜோசப், கில்லறி அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

வடமாகாண ரீதியாக நடத்தப்படும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் மன்னார் சென்.ஜோசப் அணியைஎதிர்த்துபுத்தூர்விக்னேஸ்வரா அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் சென்.ஜோசப் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து ஐயனார் அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் கில்லறி அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## நவஜீவன்ஸ், டயமன்ஸ் அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்கு தகுதி

மாங்குளம், ஜனவரி. 5
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கிலுள்ள அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், வதிரி டயமன்ஸ் அணியும்அரையிறுதிஆட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

**நவஜீவன்ஸ் - கருணாகரன்**

7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் முதலாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கருணாகரன் அணி மோதியது. கோல்கள் எவையும் பதியப்படாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படுவதாக இல்லை. ஆட்டம் நிறைவடைய 5 நிமிடங்கள் இருந்த பொழுது நவ ஜீவன்ஸ் அணியின் வீரர் பொபி ஆட் டத்தின் ஒரே கோலை விளாச முடிவில் 1:0 என்று வெற்றிபெற்றது நவஜீவன்ஸ் வி.கழகம்.

**டயமன்ஸ் - கலைமதி**

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது. டயமன்ஸின் ஆதிக்கம் முதல்பாதியிலேயே கணிசமான அளவு நிலைபெற்றிருந்தது. அந்த அணியின் துசிகரன், பீமா தலா ஒவ்வொரு கோலைப் பதிவுசெய்ய 2:0 என்று முடிவடைந்தது முதல் பாதி. ஆட்டத்தின் மறுபாதியில் கலைமதி அணி பழிதீர்க்கத் தவறவில்லை.

கலைமதியின் விஜிகரன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட முடிவில் 2:2 என சமநிலை கண்டது ஆட்டம். லீக் சுற்றுக்களின் அடிப்படையில் டயமன்ஸ் அணி அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-422-108)

## கரைச்சி கால்பந்தாட்ட தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 5
கரைச்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான ஆட்டங்கள் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.

காலை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி இளந் தளிர் அணியை எதிர்த்து, விளைபூமி அணி மோதிக் கொண்டது. இதில் இளந்தளிர் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கனகபுரம் அணியை எதிர்த்து, லக்கிஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் லக்கி ஸ்ரார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. உதயதாரகை அணியை எதிர்த்து இளைஞர் வட்ட அணி மோதிக் கொண்ட மற்றொரு ஆட்டத்தில் உதயதாரகை அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இளந்தளிர் அணியை எதிர்த்து திருநகர் அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றதனால் சமநிலைத் தகர்ப்பு உதைகள் வரை ஆட்டம் இழு பறிப்பட்டது.

இளந்தளிர் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. உருத்திரபுரம் அணியை எதிர்த்து ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணி மோதிய ஆட்டத்தில், உருத்திரபுரம் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## பருத்தித்துறை கால்பந்தாட்ட நடுவர் சங்கம் வடமராட்சி லீக்குக்கு கண்டனம் தெரிவிப்பு

### இடைநிறுத்தப்பட்ட நடுவர்களை தொடரில் பயன்படுத்தியமையால்

வலி வடக்கு, ஜன. 5
பருத்தித்துறை கால்பந்தாட்ட நடுவர் சங்கத்தால் இடைநிறுத்தப்பட்ட கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களைக் கொண்டு வடமராட்சி உதைபந்தாட்ட லீக், தனது தொடர்களை நடத்தியமைக்கு குறித்த நடுவர் சங்கம் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களின் ஒழுக்க விதிகளுக்கு மாறாக செயற்பட்ட காரணத்தினால் ஏழு மத்தியஸ்தர்களை பருத்தித்துறை கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் தனது விசாரணைகளின் அடிப்படையில் இடைநிறுத்தியிருந்தது. நடுவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்த காலப்பகுதியில் வடமராட்சி லீக், தனது சில தொடர்களில் குறித்த நடுவர்களைப் பயன்படுத்தியதாக பருத்தித்துறை நடுவர் சங்கம் குற்றம் சுமத்துகிறது.

வடமராட்சி லீக்கின் இந்த நடவடிக்கைக்கு நடுவர் சங்கம் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன் குறித்த பிரச்சினை குறித்து இலங்கை கால்பந்தாட்டசம்மேளனத்தில் முறையிடப் பட்டுள்ளது. (ம-86-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்தியூ காப்டன் திடீர் சாவு

இங்கிலாந்தில் உள்ள பிரபலமான கிரிக்கெட் கழகங்களில் ஒன்றான சசெக்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளரான 22 வயதேயான மத்தியூ காப்டன் திடீர் சாவடைந்துள்ளார். இவர் சாவடைந்துவிட்டதாக சசெக்ஸ் அணியின் நிர்வாகம் நேற்று அறி வித்தது. ஆனால், அவர் எப்படிச் சாவடைந்தார் என்று கழகம் விளக்க மான அறிக்கைவெளியிடவில்லை. இது குறித்து சசெக்ஸ் அணி வெளியிட்டுள்ள அறிக்கையில் 'இந்தச் செய்தி கேட்டு நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்தோம். காப்டனின் இழப்பு எமக்கு மிகுந்த வருத்தத்தைய ளிக்கிறது. அவரை இழந்து வாடும் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

COLLEGE OF PHYSICS
Arasady Road. Kantharmadam.
A/L 2016
DAY CLASS
ஆரம்பம் : 05.01.2016
செவ்வாய் (4.30Pm)
N.KAPILAN B.Sc

Maths Personal & Group Classes
C.K.B.Thayalan
Gr.6-11 (Tamil / English Medium)
ஆரம்பம்:06.01.2016
077 749 2794
(87267) (11.15)

பணிப்பெண்கள் தேவை
பலசரக்கு கடையில் விற்பனையாளராக வேலை செய்வதற்கும், ஒரு சிறுபையன் உள்ள குடும்பத்தில் வீட்டுப்பணிப்பெண்ணாக வேலை செய்வதற்கும் 30 வயதிற்கு உட்பட்ட பெண்கள் உடன் தேவை.
சம்பளம் மற்றும் வசதிகள் பற்றி நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புக்கு: 077 4468 369

சதாபொன்ஸ்-அல்வாய்
A/L 2018 - A/L
மீட்டல் வகுப்புக்கள்
கலை வர்த்தகப் பிரிவுகள்
06.01.2016
புதன் காலை 7.00 மணிக்கு ஆரம்பம்

KBK ACCOUNTING CENTRE
சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
தரம் 10,11 இற்கான வணிகக்கல்வியும் கணக்கீடும்
தரம் 9,10,11 இற்கான கணித பாட வகுப்புக்கள்
A/L 2016,2017,2018 இற்கான கணக்கீடு, வணிகக்கல்வி, பொருளியல்
ஆரம்பம் :- 05.01.2016 - செவ்வாய் 3 மணி
தொடர்புகளுக்கு:- 0777492794 (Maths)
075 528 7808 (Accounting) 078 841 5908

NEC
1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2 மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.
A/L DAY CLASS
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம் - 06.01.2016 புதன் 7.00 மணி
A/L 2018 கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
T.P: 077 4696 695



# வெற்றிப் பாதைக்கு திரும்பிய மான்செஸ்டர் யுனைற்ரெட்

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சுவான்சீ அணியை வீழ்த்தியதன் மூலம் தனது தொடர்ச்சியான தோல்வி நடைக்கு முடிவுகட்டி வெற்றிப் பாதைக்குத் திரும்பியுள்ளது மான்செஸ்டர் யுனைற்ரெட்.

தொடர்ச்சியாக எதிர்கொண்ட எட்டு ஆட்டங்களில் 6 ஆட்டங்களில் தோல்வியடைந்த யுனைற்ரெட் இரு ஆட்டங்களைச் சமநிலையில் முடித்திருந்தது. யுனைற்ரெட்டின் வரலாற்றில் இதுவே மோசமான பெறுபேறாகும். இந்த ஆட்டத்தின் 47ஆவது நிமிடத்தில் யுனைற்ரெட் முதல் கோலைப் பதிவுசெய்ய சுவான்சீ 70 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது. ஆனால் 77ஆவது நிமிடத்தில் யுனைற்ரெட்டின் நட்சத்திர வீரர் வெயின் ரூனி பெற்ற கோலின் மூலம் அவ்வணி வெற்றி பெற்றது. (ம)

SUPER BALL
சுப்பர் போல
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 444
சீட்டிழுப்பு திகதி 2016.01.04
வெற்றி இலக்கங்கள்
05 24 54 64 W
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 43,764,740/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1225
சீட்டிழுப்பு திகதி 2016.01.04
வெற்றி இலக்கங்கள்
06 14 38 51 R
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,594,500/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2721 திகதி 04.01.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
03 15 54 59 Q
போனஸ் இல. 61
புதன்கிழமை ஜக்பொட் ரூ. 19,332,125/-
Web: www.dlb.lk

## சமப்படுத்துமா இலங்கை

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் தொடரை சமநிலையில் முடிக்கக் கூடிய வாய்ப்பு இலங்கைக்கு உண்டு.

நடைபெற்று முடிந்த முதல் நான்கு ஆட்டங்களில் முதல் இரண்டு ஆட்டங்களிலும் நியூசிலாந்து வெற்றிபெற்றிருந்தது. மூன்றாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றது. நான்காவது ஆட்டத்தில் மழை குறுக்கிட்ட காரணத்தினால் ஆட்டம் கைவிடப் பட்டது. (ம)

NEW SCIENCE HALL
KANNATHIDDY JAFFNA.
2016 A/L
DAY CLASSES
கணித உயிரியல் பிரிவு
06 மாதகால கற்கைநெறி
முழுப்பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்
MON TO FRI
BIOLOGY → 6.45 - 9.30
வழமையான ஆசிரியருடன் + திரு T. கெங்காதரன்
COM.MATHS → 7.00 - 9.00
திரு P. செந்தில்நாதன்
CHEMISTRY → 9.30-11.30
திரு T. சிவத்திரன் + திரு S.T. உமாசங்கர்
திரு G. பெனோ + திரு T. சுசாந்தன்
PHYSICS → 11.30 - 1.30
திரு S. சோதிலிங்கம் - திரு. G. பிரபா
PHYSICS பிரிவு II
9.30 - 11.30
திரு. G. பிரபா
ஆரம்பம் : 06.01.2016
CHEMISTRY
2.30 - 4.30
திரு. J. றஞ்சித்காந்
ஆரம்பமாகிவிட்டது

FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1, A2 Exam இல் 100% சித்தி. 1025 மாணவர்கள் French கற்றுள்ளனர்.
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 09.01.16 சனி 2 மணி
TP: 021 3202973
கண்டி வீதி, சாவகச்சேரி
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

கணனிக்கற்கை நெறிகள்
அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவு ஆரம்பம். ஆர்வமுடைய மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.
புதிய பிரிவு ஆரம்பம்
பிரிவு I: 10.01.2016 பிரிவு II : 23.01.2016
மேலதிக விபரங்களுக்கு
071 777 4 555
IIS
இல 209 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
021 222 2831 / 071 777 4 555

DCM
யாழ் நகர்
Day Class
கலை
வர்த்தகம்
நாளை ஆரம்பம்
8 a.m

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.